# கவிதா நகர் கடைசித் தெரு

ராஜேஷ்குமார்

## 1

கவிதா நகர் கடைசித் தெரு. கோவையின் வால்பகுதி பாலைவன நிசப்தத்தோடு கூடிய இரவு ஏழு மணி.

முப்பத்திரெண்டாவது நம்பர் வீடு. வீட்டின் உள்ளே தனியறைக்குள் அந்த ஜோடி. கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தது.

வளையல்களின் கல்கல சத்தம்.

இப்படியே உட்கார்ந்து என்னைக் கொஞ்சிட்டிருந்தா பார்ட்டிக்கு எப்போ போறதாம்...? சாந்தா மோகனின் இரும்புப் பிடியிலிருந்து திமிறிக் கொண்டே கேட்டாள்.

மோகனின் இரண்டு கைகளும்... சாந்தாவின் வெல்வேட் இடுப்பை இறுக்கமாய்ப் பற்றியிருந்தது. அழுத்தியது.

என்ஏழுநாள் அழகான பெண்டாட்டியே....! உன்னைக் கட்டிப் பிடிக்காத ஒவ்வொரு விநாடியும் வீண்என்று எம்மனசுக்குத் தோணுது. இந்தக் கண்ணு எவள் கிட்டே இருக்கு...? இந்த மூக்கு எவள்கிட்டே இருக்கு?... இந்த உதடு... இந்த கழுத்து... அப்புறம் இந்த...

போதும்...போதும்... சாந்தா தன் மெலிதான நீண்ட விரல்களால் மோகனின் வாயைப் பொத்தினாள். சேலையை மாத்திகிட்டு வர்றேன்னு உங்கம்மாகிட்டே சொல்லிட்டு அறைக்கு வந்தேன். வந்து பதினஞ்சு நிமிடமாயிடுச்சு. வெளியே உட்கார்ந்திட்டிருக்கிற உங்கம்மா என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?

ஒண்ணும் நினைக்க மாட்டாங்க. உனக்கும் எனக்கும் கல்யாணமாகி இன்னிக்கு சரியா ஏழாவதுநாள்.பையன் அறையில் தனியா இருக்கான். மருமகப்பெண் சேலை மாத்துறேன்னு உள்ளே போனா என்ன நடக்கும்னு, அவங்களுக்குத் தெரியாதா என்ன? என்னோட வயசை எங்கம்மாவும்

தாண்டித்தானே வந்திருப்பாங்க.

சீ! அசிங்கமா பேசாதீங்க.

அசிங்கமா... உலகத்திலேயே இதுதான் அழகு. சாந்தா வா... இப்படி வந்து பக்கத்துல உட்கார்...

விடுங்க.

மாட்டேன்.

சாந்தா திமிறிக் கொண்டிருந்த நேரம்—

அறைக்கு வெளியே குரல் கேட்டது.

மோகன்.

—என்னங்க உங்க அம்மா கூப்பிடறாங்க. சாந்தா பதறிக்கொண்டே மோகனிடமிருந்து தன்னைப் பிடுங்கிக் கொண்டு எழுந்தாள்.

மோகன் குரல் கொடுத்தான்.

என்னம்மா...?

உனக்கு போன் வந்திருக்குடா.

வர்றேன். வர்றேன்... என்று அவசரக் குரலில் சொன்னவன், கட்டிலில் இருந்து எழுந்து சாந்தாவை இழுத்து பச்சென்று கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு, அறைக்கு வெளியே வந்தான். வெளியே நின்றிருந்த அம்மாக்காரி ஜெயத்தைப் பார்த்தபடி கேட்டான்.

யார்ம்மா போன்ல...

அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்த ஜெயம் பதில் சொல்லாமல் சிரித்தாள். டேய் மோகன் முதல்ல உன்னோட இடது பக்க கன்னத்தை துடைச்சுக்கோடா.

ஏம்மா?

சாந்தோவோட ஸ்டிக்கர் பொட்டு உன்னோட கன்னத்துல ஒட்டியிருக்கு. — ஜெயம் சொல்ல மோகன் வெட்கச் சிரிப்போடு இடது கன்னத்தை தடவினான். அந்த குங்கும நிற ஸ்டிக்கர் பொட்டு விரல்களுக்குத் தட்டுப்பட்டது.

போடா போய் போன்ல பேசு ஜெயம் சிரித்தபடியே நகர, மோகன் பிடரியைத் தடவிக் கொண்டே அறையின் மூலையில் டீபாயின் மேலிருந்த டெலிபோனை நோக்கிப் போனான். ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தான்.

ஹலோ.

மோகன்! நான் கோபிநாத் பேசறேன்.

மறுமுனை சொன்னது.

என்னடா?

என்னடாவா? பார்ட்டிக்கு நேரமாகலை?

எட்டு மணிக்குத்தானே பார்ட்டி? இப்போ மணி



ஏழுதானே ஆச்சு? ஏன்டா இப்படி பறக்கிறே?

டேய் பார்ட்டி எட்டு மணிக்குத்தான் ஆரம்பம் நான் இல்லேன்னு சொல்லலை. நீ கவிதா நகர் கடைசியில் இருக்கே. ஆட்டோ கிடைக்காது. உன்னோட ஸ்கூட்டரும் ரிப்பேரில இருக்கிறதா சொன்னே. நீ ஆர்.வி. ஓட்டலுக்கு வரணும்னா பஸ் ஒண்ணுதான் மார்க்கம். உன் வீட்டிலிருந்தே பஸ் பஸ் ஸ்டாப்புக்கு வரணும்னா பத்து நிமிடமாகும். பஸ் கிடைக்க பத்து நிமிடமாகும். பஸ் பிரயாணம் ஓர் அரை மணி நேரம். கணக்குப் போட்டுப் பாரு. இந்நேரம் நீ உன் புதுப் பெண்டாட்டியோடு கிளம்பியிருக்கணும்.

மோகன் சிரித்தான்.

எட்டு மணிக்கு நானும் என்னோட மனைவியும் ஆர்.வி. ஓட்டல்ல இருக்கணும். அவ்வளவுதானே?

ஆமாம்.

எப்படியாவது வந்துடறோம்.

எப்படி வருவே?

ஹெலிகாப்டரிலாவது வந்துடறோம். வைடா போனை — திட்டிவிட்டு ரிசீவரை வைத்தான் மோகன்.

போன்ல யாருடா?

குரல் கேட்டுத் திரும்பினான் மோகன்.

வாக்கிங் போய்விட்டு — அவனுடைய அப்பா நாராயணசாமி கழுத்துக்குச் சுற்றிய மப்ளரோடு நின்றிருந்தார்.

கோபிநாத் பேசினான்ப்பா புதுசா கல்யாணமான எனக்கும் சாந்தாவுக்கும் ஆர்.வி. ஓட்டல்ல நண்பர்கள் சில பேர் சேர்ந்து பார்ட்டி வைக்கப் போறதா ஏற்பாடு.

பார்ட்டி எத்தனை மணிக்கு?

எட்டு மணிக்கு.

எட்டு மணிக்கா?

இதோ.

**அ**தே கவிதா நகர் கடைசித் தெருவுக்கு முந்தின தெரு நேரா ஏழு முப்பது கார்னர் பங்களாவுக்குள் நடிகை நர்த்தனாவை பேட்டி கண்டு கொண்டிருந்தாள் வைபவி. அவர்கள் இருவரும் பேசுவதை கவனித்துக்கொண்டே விதவிதமான கோணங்களில் காமிராவினுள் அடைத்துக் கொண்டிருந்தான் ஜவகர் நடிகர் கார்த்திக்கின் சாயல்.

வைபவி கேட்டாள்.

உங்களுக்கு பிறந்த ஒரு குழந்தை ஊட்டி கான்வென்டில் படிப்பதாக பேசிக் கொள்கிறார்களே,

உண்மையா?

நர்த்தனா சிலுசிலுத்தாள்.

அப்பட்டமான பொய். அது என் அக்காவோட குழந்தை.

உங்களுக்கு அக்காவே இல்லைன்னு பேசிக் கொள்கிறார்களே?

என் மார்க்கெட்டை வீழ்த்துவதற்காகவும் ரசிகர்களுக்கு மத்தியில் எனக்குள்ள இமேஜைக் கெடுக்கவும் சிலர் பரப்பிவிடும் வதந்திகள் இது. யார் என்ன சொன்னாலும் என் கலைப் பயணம் தொடரும். நர்த்தனா தொடைகள் தெரிய கால்மேல் கால் போட்டுக் கொண்டாள்.

நீங்கள் இந்திப் படங்களில் நடிப்பீர்களா?

வாய்ப்பு கிடைத்தால் நடிப்பேன்.

உங்கள் கல்யாணம் எப்போது?

கல்யாணத்திற்கு இப்போது எனக்கு அவசரமில்லை. எனக்குக் கலைதான் முக்கியம். குடும்ப வாழ்க்கையில்லை.

கடைசியாக ஒரு கேள்வி. எங்கள் பத்திரிகையின் வாசர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

வாசகர்கள் நல்ல கலைப்படங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். ஆபாச படங்களை பார்க்க மாட்டோம் என்று சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். பாதி மார்புகளைக்காட்டிக் கொண்டே நர்த்தனா சொல்ல வைபவி எழுந்தாள் கையிலிருந்த பேனாவை ஜாக்கெட் விளிம்பில் குத்திக் கொண்டாள். நாங்க புறப்படறோம். எங்கள் பத்திரிகைக்காக உங்களுடைய மதிப்பு வாய்ந்த ஒரு மணி நேரத்தைப் பேட்டிக்காக ஒதுக்கித் தந்த உங்களுக்கு நன்றி.

நர்த்தனா கேட்டாள்.

உங்க பத்திரிகையோட பேர் என்னான்னு சொன்னீங்க?

பூகம்பம்.

அரசியல் பத்திரிகையா?

ஜவகர் குறுக்கிட்டான்.

நோ நோ...இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டக்கூடிய பத்திரிக்கை. கொஞ்சம் அரசியல் — கொஞ்சம் இலக்கியம் கலந்த பத்திரிக்கை. ஆரம்பிச்சு ஆறு மாசந்தான் ஆச்சு.

பத்திரிகைக்கு ஆசிரியர் யாரு?

நாங்க இரண்டு பேருமே ஆசிரியர்கள்தான். நானும்



வைபவியும் கல்லூரியில் ஒண்ணா படிச்சவங்க. கல்லூரியில் பூகம்பம் என்கிற கையெழுத்துப் பத்திரிகையை நானும் அவளும் நடத்திட்டு வந்தோம். கல்லூரிப் படிப்பை முடிச்சு வெளியே வந்ததும், வேலை எதுவும் கிடைக்காமே போகவே ரெண்டு பேரும் சேர்ந்து, வீட்டுல கொஞ்சம் பணம் வாங்கி பேங்க்கின் கடன் உதவியோட இந்த பத்திரிகையை ஆரம்பிச்சோம். ரெண்டு மாசம் சாக்குலேசன் டல்லடிச்சது. மூணாவது மாசத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமா பிக்–அப் ஆகி, இப்போ லட்சம் பிரதிகளைத் தொட்டிருக்கு.

போஸ்டர்ல பார்த்திருக்கேன் என்னோட பேட்டி எந்த வாரம் வரும்?

அடுத்த வார இதழில் வரும். பத்திரிகையோட காப்பியை உங்களுக்கு அனுப்பறோம்.

நர்த்தனாவிடம் விடை பெற்றுக் கொண்டு ஜவகரும், வைபவியும் வெளியே வந்தார்கள். ஜவகர் ஸ்கூட்டரை உதைக்க, வைபவி பில்லியனில் பரவிக் கொண்டாள்.

பார்ட்டி முடிய நேரமாகுமாடா மோகன்? ஜெயம் கேட்க மோகன் சொன்னான்.

எப்படியும் திரும்பிவர பத்து மணி ஆயிடும்மா.

வர்றப்ப ஆட்டோவில் வந்துடுங்க. ஒரு ரூபாய் ரெண்டு ரூபாய்க்காக ஆட்டோ டிரைவர் கிட்ட பேரம் பேசிட்டிருக்காதீங்க.

ம்ம்! நாங்க வர்றோம்மா! அப்பா நாங்க போயிட்டு வர்றோம். மோகனும், சாந்தாவும் விடைபெற்றுக்கொண்டு வாசற்படி இறங்கி — காம்பவுண்டு கேட்டைத் தாண்டினார்கள். பாதித் தெருவைத் தாண்டியதும்—

சாந்தா கேட்டாள்.

மணி எவ்வளவுங்க?

சரியா ஏழு முப்பத்தஞ்சு.

ஓட்டலுக்கு எட்டு மணிக்குள்ளே போயிடலாமா?

போயிடலாம். நிறைய பஸ் இருக்கு.

தோளை உரசாமே நடங்களேன்.

நான் அப்படித்தான் நடப்பேன். மோகன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குப் என்று கவிதா நகர் பூராவும் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்குகள் சட்டென்று கண்களை மூடிக் கொள்ள.

எங்கும் இருட்டு.

[illegible] போச்சு. சிரித்துக் கொண்டே சாந்தாவின் தோள்மேல் கையைப் போட்டுக்கொண்டான் மோகன்.

சந்தர்ப்பம் கிடைச்சா விடமாட்டீங்களே?

சிணுங்கிக் கொண்டே அவன் அணைப்புக்கு உட்பட்டு நடந்தாள் சாந்தா. ரோட்டில் ஆள் நடமாட்டமே இல்லை. இருட்டும் நிசப்தமும் கைகோர்த்துக் கிடந்த அந்த ரோட்டில் மெதுவாய் நடந்தார்கள். சாந்தா காதருகே கிசுகிசுத்தாள்.

என்னங்க.

ம்...

உங்க பிரியம் இதோ மாதிரி என்னைக்குமே குறையாம இருக்குமா?

கண்டிப்பா இருக்கும். ஆமா உனக்கேன் சந்தேகம்?

ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்ன்னு சொல்லுவாங்க. அந்த மாதிரிதான் நீங்களும் இருப்பீங்களா?

என்னோட ஆசைக்கு அறுபது வருடம். மோகத்திற்கு முப்பது வருடம்? போதுமா.

சரி சரி கொஞ்சிகிட்டே கையை எங்கெங்கேயோ கொண்டு போகாதீங்க. எதிர்ல கார் ஒண்ணு வருது... வெளிச்சம் மேலே அடிக்கும். தள்ளி நடங்க...

மோகன் சாந்தாவின் தோள்மேல் போட்டிருந்த கையை எடுத்துக் கொண்டு ஓரடி இடைவெளி விட்டு நடந்தான்.

அந்தக் கார் நீளமான சத்தத்தோடு, வேகமாய் பீறிட்டு வர,

மோகன் ஆச்சரியப்பட்டான்.

என்ன இந்த இருட்டுல இவ்வளவு வேகமா வர்றான்?

குடிச்சுட்டு ஓட்டறான் போலிருக்கு.

சொல்லிக்கொண்டே மோகனும் சாந்தாவும் ரோட்டு ஓரமாய் ஒதுங்க ஒதுங்க... அந்த கார் பிரகாசமான ஹெட்லைட் வெளிச்சக் கண்களோடு அவர்களை நோக்கி வேகமாய் வந்து மோதியது.

தீத்தீட்ட்ட்...

நடுத்தெருவில் – மோகனும் சாந்தாவும் இரத்தமாய்ச் சிதறினார்கள்.

## 2

கண்ணிமைக்கிற நேரம்தான்.

கார் பறந்துவிட்டது.

ரோட்டின் மையத்தில் சாந்தா மல்லாந்தும் மோகன் குப்புற விழுந்தும் துடித்துக் கொண்டிருக்க அந்தத் தெருவில் குடியிருந்த மக்கள் ஒவ்வொருவராய் எட்டிப் பார்த்து



பதற்றமாய் வெளியே வந்தார்கள். ஆண் குரல்களும் பெண் குரல்களும் கசகசத்தது.

என்னாச்சு?

எவனோ கார்க்காரன் அடிச்சு தூக்கிட்டான் போலிருக்கு.

அடிச்சுட்டு நிக்காமே போயிட்டான்.

தலைக்குத் தலை ஆளுக்கு ஆள் பேசிக் கொண்டிருக்கும் போதே மின்சாரத்திற்கு உயிர் வந்தது. இரண்டு பேர்களையும் சூழ்ந்த கும்பலில் ஒரு பெண் கீச்சிட்டு கத்தினாள்.

அய்யோ! நம்ம நாராயணசாமி மகனும், மருமகளும் போலிருக்கு. இன்னும் வீட்டு வாசல்ல போட்ட பந்தல் பிரிக்கலையே. அதுக்குள்ள... அந்தப் பெண் வாய் வாயாய் அடித்துக் கொண்டு அரற்ற எல்லோரும் பதற்றப் பட்டார்கள்.

ஒருவர் குனிந்து மோகனைப் புரட்டினார்.

உயிர் இருக்கா பாருங்க.

ஒண்ணும் தெரியலையே... உடம்பை எங்கே தொட்டாலும் ரத்தமா இருக்கு. எதாச்சும் ஆட்டோ கிடைக்குமா பாருங்க. ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிடலாம்.

இந்த ஏரியாவில ஆட்டோ ஏது?

அதோ... யாரோ ஸ்கூட்டர்ல வர்றாங்க நிப்பாட்டுங்க.

கும்பல் திரும்பிப் பார்க்க ஸ்கூட்டரும் வேகம் குறைந்து அவர்கள் அருகே வந்து நின்றது. வைபவி பிலிபியனில் இருந்து இறங்க ஜவகர் கேட்டான்.

என்ன விஷயம்?

ஒரு விபத்து! கும்பலில் இருந்து ஓர் இளைஞன் சொல்ல ஜவகர் ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி கும்பலுக்குள் நுழைந்தான்.

எப்படி?

ஓர் கார்க்காரன் அடிச்சு தூக்கிட்டான்.

கார் எங்கே?

ஓடிட்டான்.

கார் எந்த பக்கமா போச்சு?

இதோ... இந்தப் பக்கமாத்தான் – யாரோ கை காட்டினார்கள். ஜவகர் கீழே விழுந்து கிடந்த மோகனையும் சாந்தாவையும் குனிந்து பார்த்துவிட்டு ஸ்கூட்டருக்கு வந்தான். இன்னும் உடம்புல உயிர்துடிப்பு இருக்கு நான் போய் ஆம்புலன்சுக்கும் போலீசுக்கும் போன் பண்ணிட்டு

வர்றேன்.

கும்பலோடு கும்பலாய் நின்றிருந்த வைபவி தலையாட்ட ஜவகர் ஸ்கூட்டரை உசுப்பிக் கொண்டு பறந்தான். மெயின் ரோட்டுக்கு வந்து ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்துக்கு முன்னால் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

ரிசீவரை எடுத்து அவசர போலீசுக்கு டயலைச் சுழற்றினான். மறுமுனையில் உடனே ரிசீவரை எடுத்தார்கள்.

அலோ...

அவசர போலீஸ்...?

எஸ்...

சார்... இங்கே ஒரு விபத்து... ஆயிடுச்சு.

எங்கே?

கவிதா நகர் கடைசித் தெரு...

விபத்துன்னா எப்படி?

ஓர் ஆணையும், பெண்ணையும் கார்க்காரன் அடிச்சுட்டான்...

செத்துட்டாங்களா...? உயிரோட இருக்காங்களா?

உயிர் இருக்குன்னுதான் நினைக்கிறேன். ஆம்புலன்சு வேணும் சார்.

நீங்க யார் பேசறது?

என் பேர் ஜவகர். பூகம்பம் பத்திரிகை ஆசிரியர்.

சரி, நீங்களும் அங்கே இருங்க. இப்ப வந்துடறோம். கும்பல் சேர விடாதீங்க.

எஸ். சார்...

ரிசீவரை மாட்டிவிட்டு டெலிபோன் பூத்தில் இருந்து வெளியே வந்து ஸ்கூட்டரின் ஸ்டாண்டை விடுவித்தான் ஜவகர். மனசுக்குள் ஆத்திரமாய் அந்தக் கேள்வி அலைந்தது.

யார் அந்த கார்க்காரன்?

அரை மணி நேரத்திற்குள் அந்த கவிதா நகர் கடைசித் தெருவுக்குள் பெருமளவில் கும்பல்சேர்ந்துவிட போலீஸ் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருந்தது. கொஞ்ச நஞ்ச உயிர்த் துடிப்புகளோடு இருந்த மோகனையும், சாந்தாவையும் ஆம்புலன்சில்கிடத்திக் கொண்டிருக்க விஷயம் கேள்விப்பட்டு அங்கே வந்திருந்த ஜெயமும், நாராயணசாமியும் ஆம்புலன்சு வேனைச் சுற்றி சுற்றி வந்து அழுது அரற்றிக் கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் அருகே வந்தார். பையனுக்கு அப்பா, அம்மா நீங்கதானா?



ஆமா — நாராயணசாமி கண்ணீரோடு தலையாட்டினார்.

நீங்களும் ஆம்புலன்சுல ஏறுங்க. உங்க கூட கான்ஸ்டபிள் வருவார். அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதீங்க... அப்பாட ரெண்டு பேருக்குமே உயிர் இருக்கு. ஆஸ்பத்திரி போய் சிகிச்சை செய்தால் பிழைச்சுக்குவாங்க.

இரத்தமாய் சொத சொதத்துப் போய் ஸ்ட்ரெச்சர்களில் கிடத்தப்பட்டிருந்த மோகனையும், சாந்தாவையும், பார்த்துக் கொண்டே ஆம்புலன்சுக்குள் ஏறி உட்கார்ந்தார்கள் நாராயணசாமியும், ஜெயமும். கதவு சாத்தப்பட ஆம்புலன்ஸ் நகர்ந்தது.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் பக்கத்தில் நின்றிருந்த ஜவகரிடம் திரும்பினார். போன் பண்ணினது நீங்கதானே?

ஆமா இன்ஸ்பெக்டர்.

உங்க பேரு?

ஜவகர்.

மோதின காரை நீங்க பார்த்தீங்களா?

இல்ல சார். நான் அந்த இடத்துக்கு வரும்போது விபத்து நடந்து முடிஞ்சிருக்கு.

நவீன்ராஜ் கும்பலின் பக்கம் திரும்பினார் விபத்தை நேர்ல பார்த்தவங்க யாராவது இருக்கீங்களா?

கும்பலில் மவுனம்.

பயப்படாமே சொல்லுங்க. பார்த்தவங்க யாராவது சொன்னாதான் அந்தக் காரை எங்களாலே கண்டுபிடிக்க முடியும்.

ஒருத்தர் முன்னால் வந்தார்.

எனக்கு எதிர்த்த வீடுதான் இன்ஸ்பெக்டர். சன்னல் பக்கத்துல உட்கார்ந்துகிட்டு புத்தகம் படிச்சிட்டிருந்தேன். திடீர்னு கரண்ட் போயிடுச்சு. மெழுகுவர்த்தியைத் தேடி கொளுத்தி வெச்சுட்டு மறுபடியும் சன்னலுக்கு வந்தேன். அப்பத்தான் தத்துட்டன்னு ரோட்ல ஏதோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தேன். ரோடு பூராவும் இருட்டாயிருந்ததினால எனக்கு ஒண்ணும் தெரியலை. வெளியே வந்து பார்த்தேன். ஒரு கார் வேகமா போயிட்டிருந்தது. ரோட்டுக்கு நடுவே ரெண்டு பேர் விழுந்து துடிச்சிட்டிருந்தாங்க.

கார் நெம்பரைப் பார்த்தீங்களா?

ரோடு பூராவும் இருட்டு கார் நெம்பரை எப்படி சார் பார்க்க முடியும்?

என்ன சார்.

தெரியலை சார். நான் ரோட்டுக்கு வந்து பார்க்கிறதுக்குள்ளே ரொம்ப தொலைவு போயிடுச்சு.

நவீன்ராஜ் மறுபடியும் கும்பலை ஏறிட்டார். அந்தக் காரைப் பார்த்தவங்க வேற யாராவது இருக்கீங்களா?

எல்லோரும் மவுனம் சாதித்தார்கள்.

ஜவகர் கொஞ்சம் பெரிய குரலில் அவர்களைப் பார்த்துச் சொன்னான்.

உங்க தெருவுல ஒரு விபத்து நடந்திருக்கு. அதிலும் உங்க தெருவைச் சேர்ந்தவங்களே அடிபட்டிருக்காங்க. இரண்டு ஆட்டை அடிச்சுப் போட்ட மாதிரி அந்த கார்க்காரனும் போயிருக்கான். அவனைக் கண்டுபிடிக்க வேண்டாமா? சாட்சி சொல்ல கோர்ட்டுக்கு போகணும்னு பயந்துகிட்டு உண்மையை யாரும் மறைச்சுடாதீங்க. அந்த காரை யாராவது பார்த்திருந்தால் சொல்லுங்க.

கும்பலில் மறுபடியும் மவுனம்.

நவீன்ராஜை சப்–இன்ஸ்பெக்டர் ஒருவர் நெருங்கினார்.

சார்—

எஸ். – திரும்பினார்.

விபத்து நடந்த இடத்தில் சாக்பீஸ் மார்க்ஸ் போட்டாச்சு. பிளட் ஸ்ட்ரெயினையும் மார்க் பண்ணிட்டோம்.

காரோட டயர் பதிவுகள் ஏதாவது கிடைச்சிருக்கா.

கிடைக்கலை சார்.

சடன் பிரேக் போட்ட மாதிரியான அறிகுறிகள் எதுவுமே இல்லை சார்.

வெளிச்சம் போதலைன்னா இன்னும் நாலைஞ்சு பெட்ரோமாக்ஸ் விளக்குகளை ஏற்பாடு பண்ணி, விபத்து நடந்த இடத்தை அலசிடுங்க. ராத்திரிக்குள்ளே ஏதாவது தடயம் கிடைச்சாத்தான் நாம காரை டிரேஸ் அவுட் பண்ண முடியும். குறைஞ்சபட்சம் என்ன கார் என்றாவது தெரிஞ்சாகணும். நான் ஆஸ்பத்திரிக்குப் போறேன். நீங்க இங்கே இன்வெஸ்டிகேஷனை முடிச்சிட்டு வந்துடுங்க.

எஸ். சார்—

சப்–இன்ஸ்பெக்டர் நகர்ந்தார்.

நவீன்ராஜ் ஜீப்பை நோக்கிப் போக ஜவகர் நெருங்கிட்டான்.

சார்—

சொல்லுங்க ஜவகர்.

நாங்களும் ஆஸ்பத்திரிக்கு வரலாமா?

வாங்க. ஆனால், நாங்க தர்ற செய்தியைத்தான் உங்க பத்திரிகையில் போடணும். பார்த்ததை பார்த்த மாதிரி எழுதக்கூடாது.

சரி சார்.

நான் ஜீப்புல போறேன். நீங்க பின்னாடியே ஸ்கூட்டர்ல வாங்க. சொன்ன நவீன்ராஜ் ஜீப்பில் தாவி ஏறிக்கொண்டார்.

சரி... சார்...

நான் ஜீப்புல போறேன். நீங்க பின்னாடியே ஸ்கூட்டர்ல வாங்க – சொன்ன நவீன்ராஜ் ஜீப்பில் தாவி ஏறிக்கொண்டார்.

கோவை பெரிய ஆஸ்பத்திரி.

வாசலில் ஜீப் போய் நிற்க ஜவகர் அதற்குப் பின்னாலேயே போய் ஸ்கூட்டரை நிறுத் தினான். காத்திருந்த கான்ஸ்டபிள் இன்ஸ் பெக்டர் நவீன்ராஜிடம் வந்தார்.

ரெண்டுபேரையும் இன்டென்சிவ் வார்டுக்கு கொண்டு போயிருக்காங்க சார்.

டாக்டர் என்ன சொன்னார்? அடிபட்டவங்க பிழைக்க சான்ஸ் இருக்காமா?

ஒண்ணும் சொல்லலை சார். ரெண்டு பேருக்கும் தலையில பலமா அடிப்பட்டிருக்குன்னு சொன்னார்.

கூட வந்த பையனோட அப்பா, அம்மா எங்கே?

வார்டு வாசல்ல நின்னுட்டிருக்காங்க சார்.

நவீன்ராஜ் ஆஸ்பத்திரி வராந்தாவில் நடந்து இன்டென்சிவ் வார்டை நோக்கி நடக்க ஜவகரும், வைபவியும் தொடர்ந்தார்கள். வேகமான நடை.

இன்ஸ்பெக்டர் எனக்கு ஒரு சந்தேகம். – சொன்ன ஜவகரை திரும்பிப் பார்த்தார் நவீன்ராஜ்.

சந்தேகமா? என்ன சந்தேகம்?

நடந்தது விபத்துன்னு என் மனசுக்கு படலை.

பின்னே?

திட்டம் போட்டு காரை மோதியிருக்காங்க.

எப்படி சொல்றீங்க ஜவகர்?

கார் வேகமாக வந்ததா விசாரணையில் தெரியுது. எதிர்பாராதவிதமா விபத்து நடந்திருந்தால் டிரைவர் உடனே பிரேக்கை அழுத்தி காரை நிறுத்த முயற்சி பண்ணியிருப்பான்.

திடீர்னு பிரேக் போட்டிருந்தா... டயர் ரோட்டைத் தேய்ச்சிருக்கும். ஆனால் ரோட்டுல டயர் பதிவுகள்

எதுவுமில்லை. அதனால, காரை வேணுமின்னே வேகமா ஓட்டி வந்து அந்த இளம் தம்பதிகள்மேல மோதியிருக்காங்க. இது என்னோட சந்தேகம்தான்.

மூன்று பேரும் இன்டென்சிவ் வார்டை நெருங்கினார்கள். வார்டின் வாசலில், நீர் நிரம்பிய கண்களோடு உட்கார்ந்திருந்த நாராயணசாமியும், ஜெயமும் எழுந்தார்கள். அறைக்கதவின் நெற்றியில் சிவப்பு விளக்கு ரத்தமாய் ஒளிர்ந்தது. கதவருகே ஒரு நர்ஸ் நின்றிருந்தாள்.

நவீன்ராஜ் நாராயணசாமியை நெருங்கினார். அவரை ஆசுவாசப்படுத்தி மெல்லிய குரலில் கேட்டார். மோகன் உங்களுக்கு ஒரே பையனா?

ஆமா இன்ஸ்பெக்டர்.

கல்யாணம் என்னைக்கு நடந்தது?

போன வாரம்....

காதல் கல்யாணமா?

இல்லை இன்ஸ்பெக்டர். நாங்களா பார்த்து முடிவு பண்ணின பெண்தான். பொண்ணுக்கு சொந்த ஊர் சேலம்.

பேசிக் கொண்டிருக்கும்போதே இன்டென் சிவ் வார்டின் அறைக்கதவு சத்தமில்லாமல் திறக்க டாக்டர் வெளிப்பட்டார்.

நவீன்ராஜ் வேகமாய் டாக்டரை நோக்கிப் போனார்.

டாக்டர்_

சாரி இன்ஸ்பெக்டர்_ ரெண்டுல ஒண்ணு அவுட்...

## 3

**யா**ர் டாக்டர்..? — இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் தவிப்பாய் கேட்க, டாக்டர் சலனமில்லாத முகத்தோடு சொன்னார். அந்தப் பொண்ணோட கணவன் முக்கியமா ஆபரேஷன் ஒண்ணை செஞ்சும் ஞாபகத்துக்கு கொண்டுட்டு வர முடியலை. உயிர் பிரிஞ்சு அஞ்சு நிமிடமாச்சு.

டாக்டர் சொன்னதைக் கேட்ட நாராயணசாமி தோளில் போட்டிருந்த துண்டால் வாயைப் பொத்திக் கொள்ள அம்மா ஜெயம், மோ_மோகன்_ என்று வீறிட்டு சுவரில் தலையை மோதிக் கொண்டாள். எங்கிருந்தோ ஒரு நர்ஸ் ஓடிவந்து ஜெயத்தின் தோள் பட்டையை பற்றி ஆசுவாசப்படுத்த டாக்டரைச் சூழ்ந்து கொண்டு இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ், ஜவகர், வைபவி நடந்தார்கள்.

ஜவகர் கேட்டான்.



அந்தப் பொண்ணுக்கு இப்போ எப்படியிருக்கு டாக்டர்..?

இப்போ எதுவும் சொல்ல முடியாது.

நவீன்ராஜ் குறுக்கிட்டார். உயிர் பிழைக்க வாய்ப்பு இருக்கா டாக்டர்?

சாரி! நினைவு திரும்பின பின்தான் எதுவும் சொல்ல முடியும்?

நினைவு திரும்பினபின் அந்தப் பெண்ணினால வாக்குமூலம் கொடுக்க முடியுமா — டாக்டர்?

முடியும் ஆனால்.. கணவன் — இறந்துபோன அதிர்ச்சியான செய்தியை மட்டும் ஒரு வார காலத்துக்கு சொல்லக்கூடாது! விபத்து நடந்த காரை மடக்கிட்டீங்களா இன்ஸ்பெக்டர்?

இல்லை டாக்டர். காரை நிறுத்தாமே போயிட்டான்.

விபத்து எந்த இடத்துல நடந்தது?

கவிதா நகர் கடைசித் தெரு.

மிக மோசமான விபத்து — டாக்டரில் குரலில உண்மையான கவலை தெரிந்தது.

புதியதாய்த் திருமணமானவர்கள் டாக்டர். போன வாரம்தான் கல்யாணம் நடந்தது.

கடவுளே! அந்த டாக்டர் அதிர்ந்து போய் கவலையோடு நெற்றியை தேய்த்துக் கொண்டே வார்டுக்குள் நுழைய நவீன்ராஜ் கேட்டார்.

டாக்டர் போஸ்ட்மார்ட்டம் நாளைக்குத்தானே?

ஆமாம்!

நான் எத்தனை மணிக்கு வந்தால் உங்களுக்கு வசதியாக இருக்கும்?

காலை பதினோரு மணி.

நன்றி டாக்டர்..

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் திரும்பி நடக்க ஜவகர், வைபவி இருவரும் அவரைத் தொடர்ந்தார்கள்.

சார்.. ஜவகர் கூப்பிட்டான்.

ம்.. அவர் பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தார்.

இந்த செய்தியை நாங்க பத்திரிகையில் எப்படிப் போடறது?

விபத்துன்னு போடுங்க.

இது விபத்தில்லை சார். ஒரு கொலை முயற்சி' —

நடந்து கொண்டிருந்த நவீன்ராஜ் நின்று அவனை முறைத்தார். இப்படி ஏதாவது பிரச்சினையை

கிளப்பறதினாலத்தான் பத்திரிகை நிருபர்களை, ஆஸ்பத்திரிக்குள்ளே அனுமதிக்கறதில்லை. இது ஒரு கொலை முயற்சின்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?

நடந்த சம்பவத்தை பார்க்கும்போது அப்படித்தான் நினைக்கத் தோணுது சார்.

நீங்க அப்படியெல்லாம் குதர்க்கமா நினைக்க வேண்டாம். போலீஸ் எப்படி சொல்லுதோ அப்படித்தான் நீங்க செய்தியைப் போடணும்.

சரி சார். விபத்துன்னே போட்டுடறோம். மோகனோட அப்பா அம்மாகிட்ட ஒரு பேட்டி மாதிரி எடுத்துக்கலாமா சார்?

வேண்டாம். நீங்க கிளம்புங்க.

பாடியை ஒரு போட்டோ எடுத்துக்கறோம் சார்—

வேண்டாம். இந்த விபத்து கேசுக்கெல்லாம் அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்காதீங்க. கடைசி பக்கம் எட்டாவது பத்தியில் இந்த செய்தியைப் போடுங்க. இதெல்லாம் அன்றாடம் நடக்கிற சாதாரண விபத்துக்கள்தான்.

இதை சாதாரண விபத்தா நினைக்க என் மனசு இடம் கொடுக்கலை. கொஞ்சம் நினைச்சுப் பாருங்க சார். கல்யாணமாகி ஏழே நாள்... வீட்டுக்கு முன்னாடி போட்டிருக்கிற பந்தலைக்கூட இன்னும் பிரிக்கலையாம். இந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து முதல் பக்கத்துல போட்டாத்தான் வாகன விபத்துக்கள் குறையும் சார்.

இதுக்கெல்லாம் மக்கள் திருந்த மாட்டாங்க. நீங்க ரெண்டு பேரும் கிளம்புங்க. இனிமே என்னோட அனுமதியில்லாமே ஆஸ்பத்திரிக்கு நீங்க வரக்கூடாது. மோகனோட அப்பா அம்மாவையும் சந்திக்கக் கூடாது. புரியுதா?

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் உறுமிவிட்டு ஷூ சத்தம் ஒலிக்க வராந்தாவில் நடந்து இன்டென்சிவ் வார்டை நோக்கிப் போனார்.

வார்டுக்கு வெளியே இருந்த பெஞ்சில் — ஜெயம் அழுது அழுது மூர்ச்சையாகியிருக்க நர்ஸ் ஒருத்தி முதலுதவி கொடுத்துக் கொண்டிருந்தாள். அருகே நாராயணசாமி கண்களில் நீரோடும் வாயில் அடைத்த துண்டோடும் தெரிந்தார்.

சிஸ்டர் — நவீன்ராஜ் கூப்பிட, நர்ஸ் நிமிர்ந்தார்.

என்ன இன்ஸ்பெக்டர்?



அந்தப் பெண்ணைப் பார்க்க உள்ளே போகலாமா?

தாராளமாக... அவள் புன்னகைத்துச் சொல்ல நவீன்ராஜ் கதவைத்திறந்து கொண்டு உள்ளே போனார்.

மோகன் மார்ச்சுவரிக்கு கொண்டு போகப் பட்டிருக்க... அந்த பெண் சாந்தா மட்டும் கொஞ்சம் உயரமான படுக்கையில் கிடத்தப்பட்டு — பிராண வாயு சுவாசத்தின் உதவியால் சுவாசித்துக் கொண்டிருந்தாள். தலையைச் சுற்றிலும் அடர்த்தியான பாண்டேஜ் தெரிந்தது. கண்ணிமைகளில் லேசான துடிப்பு இருந்தது. வேகவேகமாய் மூச்சிரைத்துக் கொண்டிருந்தாள்.

இவளுக்கு நினைவு வந்தாலும் — வாக்குமூலம் தரக் கூடிய அளவுக்கு தெளிவாய்ப் பேசுவாளா? நவீன்ராஜுக்கு சந்தேகமாய் இருந்தது. கட்டிலை கிட்டத்தில் நெருங்கி சாந்தாவையே பார்த்தபடி நின்றிருந்தார்.

—திடீரென்று அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு திரும்பினார். அந்த நர்ஸ் வேக வேகமாய் உள்ளே வந்துக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர்.. உங்களுக்குப் போன்...

டெலிபோனில் யார்?

டி.எஸ்.பி...

நவீன்ராஜின் உடம்பில் உத்யோக சுறுசுறுப்பு ஒட்டிக்கொள்ள — அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே போய் டெலிபோன் இருந்த அறைக்குள் நுழைந்தார். மேசையின் மேல் ஓயிலாய் ஒருக்களித்துப் படுத்திருந்த ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

சார்.. நான் நவீன்ராஜ்...

மறுமுனையில் டி.எஸ்.பி நரசிம்மத்தின் குரல் கனமாய் கேட்டது. அலோ மிஸ்டர் நவீன்ராஜ். அந்த கவிதா நகர் விபத்து கேசை நீங்கதானே விசாரணை பண்றீங்க?

ஆமா சார்...

விபத்துல மாட்டிகிட்டது யாரு..?

மோகன் — சாந்தா என்கிற இளம் தம்பதிகள் சார்...

என்னாச்சு..?

மோகன் இறந்துட்டார்.. சார்... சாந்தாவும் சீரியஸ் ஆக இருக்கா.

டாக்டர் என்ன சொல்றார்?

நம்பிக்கையில்லேன்னு சொல்லியிருக்கார்.

விபத்தை நேர்ல பார்த்த சாட்சிகள் யாராவது இருக்காங்களா?

இல்லை சார்—

மோதினது காரா?

அப்படித்தான் சொல்றாங்க சார்—

பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்துட்டீங்களா?

இன்னும் இல்லை சார்—

நல்லவேளை— பத்திரிகைகளுக்கு செய்தி கொடுக்கும் போது — கார் மோதினதா செய்தி வேண்டாம்.

சார்— நவீன்ராஜ் திடுக்கிட்டார்.

லாரி மோதிட்டதா செய்தி கொடுங்க—

ஏ—ஏன் சார் அ— அப்படி?

கேள்வி கேட்காதீங்க— சொன்னபடி செய்யுங்க.

எஸ். சார்—! ஆனால், ஒரு பிரச்சினை சார்.

என்ன—?

பூகம்பம் என்கிற ஒரு பத்திரிகையோ— நிருபர் விபத்து நடந்த இடத்திலிருந்து ஆஸ்பத்திரி வரைக்கும் வந்துட்டார். அவருக்கு விஷயம் தெரியும். அந்த பத்திரிகையில் கார் மோதி விபத்துன்னுதான் செய்தி வரும்.

அந்த பத்திரிகை நிருபரை எதுக்காக ஆஸ்பத்திரி வரைக்கும் வர அனுமதிச்சீங்க?

எப்படியோ ஒட்டி கிட்டார் சார்.

சரி.. பரவாயில்லை. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. பத்திரிகையில் செய்தி நாளைக்குத்தானே வரும்? நீங்க போன் பண்ணி, அந்த நிருபரை பிடிச்சு விஷயத்தைச் சொல்லிடுங்க.

சார்—

என்ன?

இந்த விஷயத்தை போன் மூலமா சொல்றது அவ்வளவு உசிதமா எனக்கு படலை சார். நான் நேர்லயே போய்—

சரி அப்படியே போய் முடிங்க நாளைக்கு காலையில எல்லாப் பத்திரிகையிலும் அடையாளம் தெரியாத ஒரு லாரி மோகன்—சாந்தா தம்பதிகள் மேல மோதிட்டு ஓடிட்டதா செய்தி இருக்கணும்.

இருக்கும் சார்—

நல்லது உடனே பத்திரிகை நிருபரை போய்ப் பாருங்க கேசை ஒரு மாதிரியா விசாரணை பண்ணி முடிச்சிடுங்க.

எஸ். சார்—

டி.எஸ்.பி. நரசிம்மம் மறுமுனையில் ரிசீவரை வைத்துவிட நவீன்ராஜும் ரிசீவரை வைத்துவிட்டு



பின்னங்கழுத்தில் அரும்பிய வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டு வெளியே வந்தார்.

பூகம்பம் பத்திரிகை அலுவலகம்.

ராத்திரி பத்து மணி.

ஜவகர் ஆசிரியர் நாற்காலியில் அமர்ந்து உட்கார்ந்து மோனோ டைப் செய்து கொண்டிருக்கும் வைபவியிடம் சொன்னான்.

அந்த இன்ஸ்பெக்டருக்கு இன்னா தெனாவெட்டு பார்த்தியா வைபவி? அந்த ஆள் சொல்ற படிதான் செய்தி எழுதணுமாம். இதென்ன இந்தியாவா இடிஅமீன் நாடா? கார் மோதி விபத்தாம் எவன்னா ஒரு பாவி வேணும்னே வண்டியை வேகமா ஓட்டிட்டு வந்து ஏத்தியிருக்கான். இது ஒரு அப்பட்டமான கொலை.

சரி... செய்தியை எப்படித் தரலாம்? அந்த இன்ஸ்பெக்டர் சொன்ன மாதிரியா?

நோ— நோ— நான் சொல்ற மாதிரி! நோட் பண்ணிக்க வைபவி! இதுதான் தலைப்புச் செய்தி.

இளம்தம்பதிகளின் மேல் கார் மோதியது. கணவன் மரணம், மனைவி உயிர் ஊசல். கொலையா? விபத்தா? போலீஸ் திணறல்!

ஜவகரை — வைபவி பயப் பார்வை பார்த்தாள். இப்படி செய்தி போட்டா அந்த இன்ஸ்பெக்டருக்கு கோபம் வராதா?

கோபம்தானே? வரட்டும்!

வர வர உங்களுக்கு பயங்கர துணிச்சல்.

துணிச்சல் இல்லாதவன் பத்திரிகையாசிரியரா வரமுடியாது.

வைபவி ஏதோ சொல்ல வாயெடுத்த விநாடி—

வாசலில் அந்த பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. எழுந்து சன்னல் வழியாக — வாசலை எட்டிப் பார்த்துவிட்டு ஜவகரிடம் திரும்பினாள். ஆச்சரியக் குரலில் சொன்னாள்.

ஜவகர்! அந்த இன்ஸ்பெக்டர் வர்றார்.

உண்மையாகவா?

உண்மையாகத்தான்! வேக வேகமாக வர்றார்.

மனிதர் எதுக்கு வர்றார்? அவன் யோசிக்க யோசிக்க— இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் தொப்பியை சுழற்றிக் கொண்டே— உள்ளே வந்தார்.

ஜவகர் எழுந்தான். வாங்க இன்ஸ்பெக்டர்.

வைபவி நாற்காலியை எடுத்துப் போட்டாள்.

# 4

என்ன இன்ஸ்பெக்டர் சார். நாம ஆஸ்பத்திரியில பார்த்து ஒருமணி நேரம் கூட ஆகவில்லை. அதுக்குள்ளே என்னைத் தேடிட்டு வந்துட்டீங்க? ஒரு போன் பண்ணியிருந்தால் நானே வந்திருப்பேனே? — கேட்ட ஜவகரை புன்னகையோடு பார்த்தார் நவீன்ராஜ்.

போன்ல பேசக்கூடிய விஷயமில்லை இது. அதான் நேர்ல வந்தேன்.

என்ன விஷயம்?

அந்த கவிதா நகர் விபத்தைப் பத்தி நான் சொல்ற மாதிரிதான் செய்தி போடணும்.

அதுதான் ஆஸ்பத்திரியிலேயே சொல்லிட்டீங்களே? கார் மோதி விபத்துன்னு போடணும். அவ்வளவுதானே?

அதிலேயும் ஒரு மாற்றம்.

என்ன மாற்றம்?

லாரி மோதி விபத்துன்னு போடணும்.

நிமிர்ந்து உட்கார்ந்தான் ஜவகர். வைஷ்ணவியும் ஆச்சரியமாய் பார்த்தாள். என்ன சார் சொல்றீங்க? லாரியா?

ஆமா.

மோதின காரை பார்த்ததா மக்கள் சொல்றாங்க.

இதோ பாருங்க ஜவகர்! மக்கள் எதையோ சொல்லிட்டு போகட்டும். இதைப்பத்தி ரெண்டு நாள் அந்த கவிதா நகர் ஏரியா ஜனங்க மட்டும் பரபரப்பா பேசிட்டு அப்புறம் மறந்துடுவாங்க. நீங்க செய்திய நான் சொன்ன மாதிரி போட்டுடுங்க. வரட்டுமா? சொல்லிக்கொண்டே எழுந்தார், நவீன்ராஜ்.

ஒரு நிமிடம் சார்.

என்ன?

நான் ஒரு கேள்வி கேட்கலாமா?

கேளுங்களேன்.

இந்தியா ஒரு ஜனநாயக நாடுதானே?

நவீன்ராஜ் ஜவகரின் கேலியை புரிந்து கொண்டார். ஜனநாயக நாடுதான். அந்த நாட்டிலேயும் சில சமயம் சர்வாதிகாரத்தனமா நடந்துக்க வேண்டியிருக்கு.

கார் லாரியா மாறினதுக்கு என்ன காரணம்?

தெரியலை, மேலிடத்திலிருந்து உத்தரவு.

அப்போ மோதின அந்தக் கார் ஒரு பெரும்புள்ளிக்கு சொந்தமானதாக இருக்கலாம். நான் சொல்றது சரியா



இன்ஸ்பெக்டர்?

எனக்கு அதெல்லாம் தெரியாது. நாளைக்கு பத்திரிகையில் செய்தி, நான் சொன்ன மாதிரிதான் வரணும். மீறி வந்தா அதனோட விளைவுகள் மோசமாயிருக்கும். சொன்ன நவீன்ராஜ் தலைக்கு தொப்பியைக் கொடுத்துக் கொண்டே அறையில் இருந்து வெளியேறி வாசலில் நிறுத்தி இருந்த பைக்கை நோக்கிப் போனார். அடுத்த சில விநாடிகளில் பைக் புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டது.

வைஷ்ணவி ஜவகரை ஏறிட்டாள்.

இனிமே என்ன பண்ணப் போறீங்க ஜவகர்?

செய்தியை மாத்திட வேண்டியதுதான்.

போலீசுக்கு பயந்துட்டீங்களா?

ஜவகர் சிரித்தான். இன்ஸ்பெக்டர் சொல்லிட்டுப் போன மாதிரி நாம செய்திப் போடப் போறதில்லை.

பின்னே?

தலைப்புச் செய்தி நாளைக்கு இப்படித்தான் வரப்போகுது— காரை ஏற்றி இளம்தம்பதிகளைக் கொல்ல முயற்சி. கணவன் மரணம், மனைவி உயிர் ஊசல். காரை ஓட்டி வந்த மர்ம மனிதன் யார்? போலீஸ் வலை விரிப்பு.

வைஷ்ணவி அவனை திக்கென்று பார்த்தாள். ஜவகர்! நாளைக்கு இந்த செய்தி போலீசாருக்கு எரிச்சலைத் தரலாம். அவர்களை பகைச்சுட்டு நாம நிம்மதியா தொழில் பண்ண முடியாது.

பத்திரிகை நடத்தறது ஒரு தொழில் இல்லை வைஷ்ணவி. ஒரு யாகம். எவ்வளவு பெரிய அக்கிரமம் நடந்திருக்கு எவனோ ஓர் அயோக்கிய ராஸ்கல் காரை வேகமா ஓட்டிவந்து வேணும்னு மோதி தள்ளியிருக்கான். அதைப் பார்த்ததுக்கான சாட்சிகளும் கவிதா நகர்ல இருக்காங்க... ஆனால், போலீஸ் கூசாமே பொய் சொல்லுதே! மோதினது லாரின்னு எழுதணுமாம். எவ்வளவு கொழுப்பு பார்த்தியா? இதை நான் சும்மா விடப் போறதில்லை. காரை ஓட்டிட்டு வந்த அந்த பெரிய புள்ளி யார் என்கிறதை கண்டு பிடிச்சு, அவனோட முகத்திரையைக் கிழிக்காமே விடப்போறதில்லை.

ஜவகர்.

என்ன?

நாம வம்பை விலைக்கு வாங்கறோம்.

அதுதப்பு வைஷ்ணவி. நாம உண்மையைத்தான் வாங்கப் போறோம். உண்மையும், நியாயமும் ஆரம்பத்துல தோற்கிற

மாதிரிதான் தெரியும். ஆனால், பின்னாடி அதுதான் ஜெயிக்கும். இந்த விநாடியிலிருந்து நீயும் நானும் இந்த கவிதா நகர் விபத்தை கிளறப் போகிறோம். என்கூட புறப்படு.

எங்கே?

ஆஸ்பத்திரிக்கு.

எதுக்கு?

சொல்றேன். புறப்படு...

வைபவி மணிக்கட்டில் நேரம் பார்த்தாள். மணி பத்தரை. அம்மா எனக்காக வீட்ல காத்திருப்பாளே?

போகும்போது உன் வீட்ல இறங்கி சொல்லிட்டுப் போயிடலாம்.

சரி. தலையாட்டினாள் வைபவி.

ஆஸ்பத்திரியின் பின்பக்க ரோட்டில் ஸ்கூட்டரை நிறுத்தினான் ஜவகர். நாலா பக்கமும் நிசப்தம். கீழே இறங்கி ஸ்கூட்டர் பெட்டியில் இருந்த காமிராவை எடுத்து தோளில் தொங்க விட்டுக் கொண்டான். மெல்லிய குரலில்—

வைபவி என்றான்.

என்ன ஜவகர்?

நீ இங்கேயே நில்லு. நான் போய் ஸ்நேப் பண்ணிட்டு வந்துடறேன்.

ஜாக்கிரதை! அந்த இன்ஸ்பெக்டர் கண்ணல பட்டுடப் போறீங்க.

நான் பார்த்துத்தான் போவேன். நீ இங்கே சும்மா நின்னுட்டிருக்கிற நேரம் ஒரு காரியம் பண்ணணும்.

என்ன?

ஆஸ்பத்திரி பின் கேட் வழியா எந்த காராவது உள்ளே போனாலோ அல்லது வெளியே வந்தாலோ நோட் பண்ணு. காரோட நம்பர் வேணும்.

சரி.

ஜவகர் கழுத்தில் ஊஞ்சலாடும் காமிராவோடு கொஞ்சம் தொலைவில் தெரிந்த ஆஸ்பத்திரியின் பின்பக்க கேட்டை நோக்கிப் போனான். வேகமான நடை.

இரண்டு நிமிட நடையில் கேட் வந்தது.

சரசரவென்று உள்ளே நுழையப் போனவனை வாட்ச்மேனின் குரல் தடுத்து நிறுத்தியது. யார் சார் அது? இந்நேரத்துக்கு யாரும் உள்ளே போகக்கூடாது.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தியைப் பார்க்கணும். அவர் வரச் சொல்லியிருந்தார்.



அவர் இந்நேரத்துக்கு இருக்க மாட்டாரே.

என்கிட்டே வர்றேன்னு சொன்னாரே. அவரை அவசரமா பார்க்கணும்பா! இந்தா இதை வச்சுக்க பத்து ரூபாய் நோட்டொன்றை வைத்து — வாட்ச்மேன் உள்ளங்கையில் அழுத்தினான். அடுத்த விநாடியே அவன் வாயெல்லாம் பல்லாகி — உள்ளே போங்க சார்! என்று பவ்யமாய் வழிவிட்டு நிற்க ஜவகர் ராஜமரியாதையோடு உள்ளே போனான்.

ஆஸ்பத்திரியின் பெரும்பாலான கட்டடங்கள் இருட்டில் இருந்தன. கட்டடங்களின் ஓரத்திலேயே நடந்து பிணக்கிடங்கு இருந்த இடத்துக்கு வந்து நின்றான்.

சுற்றிலும் நிசப்தம்.

தொலைதூர வராந்தாக்களில் இரண்டொரு நர்ஸ்கள் நடந்து போவது தெரிந்தது. ஜவகர் மெதுவாய் நகர்ந்து பிணக்கிடங்கிற்கு முன்பக்கமாய் வந்தான். கிடங்கின் வாசலில் அந்த நபர் உட்கார்ந்திருந்தான். அரைக்கை காக்கிச் சட்டையும், காக்கி டிராயரும் அணிந்து, தலைக்கு துண்டைச் சுற்றியிருந்தான். வாயில் பீடி புகைந்து கொண்டிருந்தது.

ஜவகர் அவனை நெருங்கினான்.

இந்தாப்பா.

அவன் திரும்பிப் பார்த்து கையிலிருந்த பீடியை வீசிவிட்டு எழுந்தான். யார் சார் நீங்க? — கொஞ்சம் பயத்தோடு கேட்டான்.

இந்த மார்ச்சுவரிக்கு வாட்ச்மேன் நீதானே?

ஆமா சார்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி விபத்துல போன கேஸ் ஒன்று இங்கே வந்ததா?

அந்த கவிதா நகர் கேஸ்தானே சார்?

ஆமா.

பாடி உள்ளாறத்தான் இருக்கு. வயசு பையன். கணவன் மனைவி ரெண்டு பேரையும் கொண்டு வந்தாங்க. அதுல கணவன் அவுட். ஆமா.. நீங்க யார் சார்?

அந்தப் பையனோட அண்ணன்.

அடேடே! விஷயம் தெரிஞ்சு இப்பத்தான் வர்றீங்களா?

ஆமா, வெளியூர் போயிட்டு அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் வந்தேன். தம்பிக்கு விபத்துன்னு சொன்னாங்க, உடனே ஆஸ்பத்திரிக்கு ஓடி வந்தேன். பாடியை மார்ச்சுவரிக்கு கொண்டு போயிட்டதா சொன்னாங்க.. அதான் வந்தேன். ஒரு நிமிடம் அறையைத்

திறந்து விடப்பா. என் தம்பியோட முகத்தைப் பார்த்துட்டு போயிடறேன்.

அவன் தலையில கட்டியிருந்த துண்டை எடுத்து தோளில் போட்டுக்கொண்டே சொன்னான். இந்நேரத்துக்கு மார்ச்சுவரியைத் திறந்து யாருக்கும் பாடியைக் காட்டக் கூடாது சார். ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் காட்டினான்.

இப்போ என்ன சொல்றே?

சார் அவனுடைய கண்கள் விரிந்தன.

இந்த நூறு ரூபாய் உனக்குத்தான். அறையைத் திறந்து விடு. ரெண்டு நிமிடம் எனக்குப் போதும். என் தம்பியை போட்டோ எடுத்துக்கிட்டு போயிடறேன்.

போ_ போட்டோவா?

என் தம்பியோட போட்டோ வீட்ல ஒண்ணுகூட இல்லை. நாளைக்கு போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சி போட்டோ எடுத்தா தம்பியோட முகம் விகாரமா இருக்கும். அதனால்தான் இன்னிக்கே போட்டோ எடுத்துட்டு போலாம்னு வந்தேன். உனக்கு விருப்பம் இல்லேன்னா சொல்லு. நான் பாட்டுக்கு போயிட்டே இருக்கேன்.

என்ன சார் நீங்க? பணத்தைக்காட்டி மனசை மாத்திட்டீங்களே? சொல்லிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான். பிறகு டிராயர் பாக்கெட்டில் இருக்கும் கொத்து சாவியை எடுத்துக் கொண்டே வாங்க சார் என்றான். பணத்தை இடது கையில் வாங்கி சட்டைப் பையில் சொருகிக் கொண்டான்.

சீக்கிரமா பார்த்துட்டு போயிடணும் சார்.

ரெண்டே நிமிடம்.

அவன் பூட்டைத் திறந்து கதவைத் தள்ளி விட்டான். சுவரிலிருந்த சுவிட்சை தேய்த்து ஒரு நாற்பது வாட்ஸ் பல்பை எரிய வைத்தான். அறைக்குள் அழுக்காய் வெளிச்சம் பரவியது.

உள்ளாற போங்க சார்_

ஜவகர் உள்ளே நுழைந்தான்.

தகர அலமாரிகளில் வரிசையாய் பிணங்கள் தெரிய அறையின் மைய மேசையில் மோகன் கழுத்துவரை போர்த்தப்பட்டு கண்ணுக்கு சிக்கினான்.

ஜவகர் ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் செயல்பட ஆரம்பித்தான். காமிராவின் பிளாஷ் யூனிட்டை இயக்கி பளிச் பளிச் என்று நான்கைந்து போட்டோக்களை எடுத்துத் தள்ளினான்.



மோகன் பல கோணங்களில் காமிராவுக்குள் அடைபட்டான்.

சார் போதும் சார். யாராவது பார்த்துட்டா பெரிய வம்பா போயிடும் சார்.

முழுசாய் மூன்று நிமிடம்.

வெளியே வந்தான் ஜவகர்.

சார் இதை வெளியில யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க சார். யாராவது கேட்டா விபத்து நடந்த இடத்திலேயே போட்டோ எடுத்ததா சொல்லிடுங்க.

பயப்படாதே! நான் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன் — ஜவகர் மார்ச்சுவரி வாசலில் இறந்து இறங்கி, கட்டிடங்களின் ஓரமாய் வேகவேகமாய் நடந்து பின் பக்க காம்பவுண்டு கேட்டுக்கு வந்தான். நின்றிருந்த வாட்ச்மேன் கேட்டான்.

என்ன சார். டாக்டரைப் பார்த்தீங்களா?

அவர் வரலையாம்.

நாளைக்கு காலையில ஏழு மணிக்கு வாங்க சார். பார்க்கலாம்.

ம். ம். தலையாட்டி கொண்டே ரோட்டுக்கு வந்தான் ஜவகர். ஸ்கூட்டர் நின்றிருந்த இடத்தை நோக்கி பார்வை போனபோது அதிர்ந்தான்.

ஸ்கூட்டரையும் காணோம்.

வைபவியையும் காணோம்.

## 5

ஜவகரின் மனத்தில் அதிர்ச்சி விழா கொண்டாடியது முகம் வியர்த்தது.

வைபவி எங்கே?

ஸ்கூட்டர் எங்கே? உடம்பு பூராவும் இரத்தம் பயமாகி யோசித்து யோசித்து ஓடியது. மூளை அவனுக்கு டோஸ் விட்டது. முட்டாள்! ஒரு பெண்ணை ஆள் அரவமற்ற ரோட்டில் தனியாய் நிறுத்திவிட்டு போகலாமா?

பார்வை எட்டிய வரைக்கும் தூரத்தி — ஜவகர் சுற்றும் முற்றும் பார்த்தான். கொஞ்சம் தொலைவில் பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில் ஒரு டீக்கடை உயிரோடு தெரிய அதை நோக்கி வேகவேகமாய் போனான். பால் பாத்திரத்தை தேங்காய் நாரினால் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்த டீக்கடை நாயர், ஜவகரைப் பார்த்ததும் எழுந்து நின்றான்.

டீயெல்லாம் முடிஞ்சதே சாரே!

எனக்கு டீ வேண்டாம். ஒரு தகவல் வேணும்.

தகவலா? என்ன தகவல்? நாயர் நெற்றியைச் சுருக்கினான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி அந்த மரத்துக்கு கீழே ஒரு பொண்ணு ஸ்கூட்டருக்கு பக்கத்துல நின்னுட்டிருந்தது பார்த்தியா?

பார்க்கலையே?

இந்த வழியா காரோ... வேனோ போனதைப் பார்த்தியா?.

யோசித்த நாயர் வேன் ஒண்ணு போச்சு என்றான்.

எப்போ?

அஞ்சு நிமிடத்துக்கு முந்தி.

ஜவகர் கவலையாய் நெற்றியைத் தேய்த்துக் கொண்டே திரும்பிய அதே விநாடி அந்த ஹெட்லைட் வெளிச்சம் தெரிந்தது.

ஒற்றை ஹெட்லைட் வெளிச்சம்.

வருவது ஆட்டோவா?

ஸ்கூட்டரா?

கண் பார்வையைக் கூர்மையாக்கினான் ஜவகர்.

ஹெட்லைட் வெளிச்சம் பக்கத்தில் நெருங்க நெருங்க கொஞ்சம் கொஞ்சமாய் மலர்ச்சிக்குப் போனான் ஜவகர். அது அவனுடைய ஸ்கூட்டர்தான்.

ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்தது வைபவிதான்.

ஜவகரை நெருங்கியதும், ஸ்கூட்டரின் வேகத்தை குறைத்தாள் வைபவி. பிரேக்கை மிதித்து வண்டியை நிறுத்தினாள்.

ஜவகர் அவளிடம் ஓடி வந்தான். பதற்றக் குரலில் கேட்டான்.

எங்கே போயிட்டே வைபவி?

வைபவி வியர்த்த முகமாய் சொன்னாள். ஆஸ்பத்திரியில் இருந்து ஒரு வேன் வெளியே வந்தது. நீங்கதான் எந்த வாகனம் போனாலும் கவனிக்கச் சொல்லியிருந்தீங்களே நோட் பண்ணினேன். அந்த வேனையும் வேன் டிரைவரையும் பார்த்ததும் எம்மனசல ஒரு சந்தேகம். வேனைத் தொடர்ந்து போய்ப் பார்த்தேன்.

உபயோகமான தகவல் ஏதாவது?

அந்த வேன் ஒரு மெட்டாடர்வேன்.

சரி.

நெம்பர் டிஎம்வி. 6734.



சரி.

அந்த வேனை ஓட்டியது ஒரு இளைஞன். டிரைவர் யூனிபார்ம் கிடையாது. கல்லூரி மாணவன் மாதிரி இருந்தான்.

இதுதான் உபயோகமான தகவலா?

பின்னே? ஆஸ்பத்திரிக்கு சொந்தமில்லாத ஒரு வேன், இந்நேரத்துக்கு ஆஸ்பத்திரியில் இருந்து வெளியே வருவானேன்? இந்தப் பின்புற வழி ஆஸ்பத்திரியைச் சேர்ந்த வாகனங்களுக்கு மட்டும்தான். தனியார் வண்டிகள் உள்ளே போகக்கூடாது. இந்த வழியாக வெளியே வரவும் கூடாது.

ஜவகர் மலர்ந்தான். ரொம்பச் சரி வைபவி! சரி இந்த வேனைப் பின் தொடர்ந்து போனியா?

போனேன். பாதி வழியில திரும்பிட்டேன்.

ஏன்?

நீங்க இங்கே என்னைக் காணோமேன்னு அல்லாடிகிட்டு இருப்பீங்களேன்னு ஓடி வந்தேன். வேன்நம்பரை குறிச்சிக்கிட்டேன். அது யாரோட வேன் என்கிறதை நாளைக்கு ஆர்.டி.ஓ. ஆபிசல கேட்டு தெரிஞ்சுக்குவோம்! நீங்க போன காரியம் என்னாச்சு?

மோகனைக் காமிராவுக்குள்ளே கொண்டு வந்தாச்சு. நாளைக்கு போட்டோவோட செய்தியை அமர்க்களப்படுத்திடலாம்.

யாரும் உங்களைப் பார்த்துடலையே?

ஊகூம். நீ பின்னாடி உட்கார். மொதல்ல கிளம்புவோம்.

இப்போ எங்கே போகப் போறோம்?

கவிதா நகர் கடைசித் தெருவுக்கு.

எதுக்கு?

விபத்து நடந்த இடத்தைக் கொஞ்சம் அலசப் போறோம்.

விபத்து நடந்த இடத்தை அலசி என்ன பயன் ஜவகர்?

அந்தக் காரைப் பத்தின தடயம் ஏதாவது சிக்கும்.

எப்படிசிக்கும்? நேரத்தை வீண் பண்ணப் போறோம்.

எனக்காக ஓர் அரைமணி நேரம் ப்ளீஸ்.

சரி வைபவி பில்லியனில் ஒரு புஷ்பம் மாதிரி ஏறி உட்கார ஜவகர் ஸ்கூட்டரை கவிதா நகரை நோக்கி விரட்டினான்.

கவிதா நகர் அந்த இரவு வேளையில் ஒரு பாலைவனம் மாதிரி காட்சியளித்தது. எல்லா வீடுகளுமே

இருட்டில் புதைந்து போயிருக்க, தெரு விளக்குகள் மட்டும் விட்டில் பூச்சிகளோடு ஒளிர்ந்து கொண்டிருந்தன. குறுக்குத் தெருக்களைக் கடந்துக் கடைசி தெருவுக்குள் ஸ்கூட்டரை நுழைத்து விபத்து நடந்த இடத்தில் கொண்டு போய், நிறுத்தினான் ஜவகர்.

வைபவி பில்லியனில் இருந்து உதிர்ந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். எங்கும் நிசப்தம். ஜவகர் டார்ச் லைட்டோடு விபத்து நடந்த ரோட்டின் மையத்துக்கு வந்தான். ரோட்டில் தெரு விளக்கின் வெளிச்சம் சிதறியிருந்தது. சாக்பீஸ் கோடுகள் குறுக்கும் நெடுக்குமாய் வரையப்பட்டு விபத்து நடந்த இடத்தை துல்லியமாகக் காட்டிக் கொண்டிருந்தது. மோகன் – சாந்தாவின் இரத்தம், உலர்ந்து போய் செம்மண் நிறமாய்த் தெரிந்தது.

வைபவி ஆயாசமாய் ஜவகரை ஏறிட்டாள். ஜவகர்.

என்ன?

இது வெட்டி வேலை?

எது?

விபத்து நடந்த இடத்தை வந்து பார்த்திட்டிருக்கிறது. இது ஒரு சாதாரண விபத்தா இருந்தா நான் இவ்வளவு தூரம் மெனக்கெட்டு வரமாட்டேன். இந்த விபத்துக்குப் பின்னாடி தப்பான நபர்கள் இருக்காங்க. அவங்களை நாம அடையாளம் கண்டுக்க வேண்டாமா?

வைபவி சிரித்தாள். நாம அவங்களை அடையாளம் கண்டுக்கிறதுக்கு முன்னாடி நம்மை அவங்க அடையாளமே தெரியாதபடி தீர்த்துடுவாங்க போலிருக்கே.

பயப்படறியா.

பயமில்லை போலீசை எதிர்த்து நாம செயல்படணுமா?

இது போலீசுக்கு எதிரான செயல் இல்லை. வைபவி அநியாயத்துக்கு எதிரான நடவடிக்கை – சொல்லிக் கொண்டே ரோட்டோரத்திற்கு வந்தவன். சட்டென்று நின்றான். அந்தக் குப்பைத் தொட்டியையே பார்த்தான்.

ஜவகர்! என்ன பார்க்கறீங்க?

அவன் குப்பைத் தொட்டியருகே குனிந்தான். டார்ச் வெளிச்சத்தில் அதை நனைத்துக் கொண்டே குத்துக்காலிட்டு உட்கார்ந்தான். சொன்னான்.

வைபவி! இதைப் பார்த்தியா?

டார்ச்சின் வெளிச்ச வட்டம்குப்பைத் தொட்டியின்மேல் நிலையாய் நிற்க– அந்த இடத்தை உற்றுப் பார்த்தாள் வைபவி.



என்னவோ கீறல் மாதிரி இருக்கு.

அந்தக் கீறல்களில் ஏதாவது நிறம் தெரியுதா?

தெரியலையே.

நல்லாப்பாரு.

பார்த்தாள் – ம்.. புளு கலர் தெரியுது.

இந்தக் கீல் குப்பைத் தொட்டியில் எப்படி ஏற்பட்டிருக்கும்னு நினைக்கிற வைபவி?

ஏதாவது ஒரு வண்டி உரசிட்டு போயிருக்கலாம்.

ஏதாவது ஒரு வண்டியில்லை! மோகன் – சாந்தாவை விபத்துக்குள்ளாக்கின வண்டிதான் இந்த குப்பைத் தொட்டியை உரசிட்டு போயிருக்கணும்.

எப்படி அவ்வளவு நிச்சயமா சொல்றீங்க?

கீறலைப் பார்த்தாலே தெரியலையா? புதுக் கீறல். போலீஸ் போட்டுட்டு போயிருக்கிற சாக்பீஸ் மார்க்ஸ்படி பார்த்தாலும், கார் ரோட்டோரமா வந்துதான், மோகனையும், சாந்தாவையும் தாக்கி எறிஞ்சிருக்கு. அந்த சமயத்துலதான் கார் குப்பைத் தொட்டியை உரசியிருக்கு.

அப்படியானால் வந்தது ஒரு நீல நிறக் கார்?

எஸ்.

நகரில் நீல நிறக் கார்கள் ஏராளமா இருக்கு. இதில் விபத்துக்கு காரணமான காரை எப்படி கண்டுபிடிக்கப் போகிறோம்?

சிரமமான காரியம்தான். இருந்தாலும் முயற்சி பண்ணினா கண்டுபிடிச்சிடலாம்.

எப்படி?

டிரைவிங் சீட்டுக்கு இடது பக்கமாக இருக்கிற கார்க் கதவோ அல்லது அதனோட முன்பக்கமோதான் இந்த குப்பைத் தொட்டிமேல் உராய்ஞ்சுகிட்டு போயிருக்கணும். உராய்ஞ்ச இடத்துல கண்டிப்பா பெயிண்ட் உதிர்ந்து போய், அந்த இடம் சப்பையா தெரியும். அந்தக் கார் நகரத்தில் இருக்கிற ஏதாவது ஓர் ஒர்க்ஷாப்புக்கு வந்துதானே ஆகணும்?

அப்படி அவங்க கொண்டு வருவாங்க என்கிற நம்பிக்கை உங்களுக்கு இருக்கா, ஜவகர்?

கண்டிப்பா இருக்கு. இதுக்காக நாளையிலிருந்து ஒவ்வொரு ஒர்க்ஷாப்பா நுழைஞ்சு பார்க்கப் போறோம். ஜவகர் ஆர்வமாய்ச் சொல்ல – வைபவி கொட்டாவி விட்டாள்.

சரி போலாமா? வீட்டுல அம்மா எனக்காக தூங்காம காத்திட்டிருப்பா.

வரும்போது சொல்லிட்டுத்தானே வந்தோம்?

சொல்லிட்டு வந்தாலும் அம்மா எனக்காகத் தூங்காமே காத்துட்டிருப்பா. வாங்க போகலாம்.

இருவரும் ஸ்கூட்டருக்கு வந்தார்கள்.

வைபவியை வீட்டில் இறக்கி – குட்நைட் சொல்லிவிட்டு, செல்வபுரத்தில் இருக்கும் தன் வீட்டை ஜவகர் தொட்டபோது நேரம் 12.05.

திறந்திருந்த காம்பவுண்டு கேட்டுக்குள் ஸ்கூட்டரை நுழைத்து திண்ணை அருகே நிறுத்திவிட்டு – காலிங் பெல்லைத் தட்டினான்.

உள்ளே டியூப் லைட் உயிர் பிடித்துக் கொள்ள – கண்ணாடி சன்னலில் வெளிச்சம் அடிபிக் கொண்டது.

யாரது. கீதாவின் குரல் உள்ளேயிருந்து கேட்டது.

நான்தாம்மா கீதா, உன்னோட அண்ணன்.

கதவு திறக்கப்படாமல், சன்னல் மட்டும் திறக்க அதன் பின்னே கீதாவின் கோபமான முகம் தெரிந்தது.

மணி எவ்வளவுன்னு தெரியுமாண்ணா?

பன்னெண்டு.

இதுதான் நீ வர்ற நேரமா?

சாரிம்மா. ஒரு விபத்து விஷயமா நானும் வைபவியும் அலைஞ்சுட்டு வர்றோம். அவளை வீட்டுல இறக்கி விட்டுட்டு வர நேரமாயிடுச்சு...

இனிமே நீ பத்து மணிக்கெல்லாம் வீட்டுல இருக்கணும். இல்லேன்னா நான் கதவைத் திறக்கமாட்டேன்.

சரி உத்தரவு.

கீதா கதவைத் திறந்து விட்டாள். ஜவகர் ஹெல்மெட்டைக் கழற்றிக் கொண்டே உள்ளே போனான்.

சாப்பிட்டியாண்ணா?

வேண்டாம்.

பால்?

ஒண்ணும் வேண்டாம்மா. ஒரு தம்ளர் தண்ணீர் மாத்திரம் கொடு.

தர்றேன்! டிவி பெட்டி மேலே உனக்கு ஒரு லெட்டர் வெச்சிருக்கேன் எடுத்துக்க.

லெட்டரா?

ஆமா. இது தபால்ல வந்த லெட்டரில்லை, உன்னோட நண்பராம். பேரு பாலகோபாலாம். அவர் கொடுத்துட்டு போன லெட்டர். கவர்மேல பர்சனல் என்று எழுதியிருந்ததினால நான் பிரிச்சு படிக்கலை.

பேரென்ன சொன்னே? பாலகோபாலா?



ஆமா.

இந்த போல எனக்கு எந்த நண்பனும் கிடையாதே சொல்லிக் கொண்டே கவரைப் பிரித்து கடிதத்தை உருவினான். பார்த்தான்.

கிறுக்கலாய் எழுதப்பட்ட நான்கு வரிகள் கண்ணில் அதிர்ச்சியாய் அடித்தன.

கவிதா நகரின் கடைசித் தெருவில் நடந்த விபத்தை பற்றி நீ ரொம்பவும் உருகி வழிகிறாய். இது உனக்குத் தேவையில்லாத ஒன்று. தொடர்ந்து இந்த விபத்தை நீ கிளற ஆரம்பித்தால் உன் தங்கை கீதாவின் கற்பை நீ எங்களுக்கு விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும். ராத்திரி பூராவும் யோசித்து முடிவெடு.

கடிதம் மொட்டையாய் முடிந்திருந்தது.

# 6

ஜவகரின் முகம் போன போக்கை பார்த்ததும் கீதா குழப்பமானாள். என்னண்ணா! லெட்டர்ல என்ன விஷயம். என்னென்னவோ மாதிரி ஆயிட்டே?

ஒன்றுமில்லை – கடிதத்தை மடித்து மேஜையின் இழுப்பறைக்குள் போடப்போனவனை கையைப்பிடித்து நிறுத்தினாள்.

ஊகும், உன்னோட முகம் சரியில்லை. அந்த லெட்டர்ல என்னமோ இருக்கு. கொண்டா பார்க்கலாம். லெட்டரை ஜவகரின் கையிலிருந்து வெடுக்கென்று பறித்துக் கொண்டு சுவர் ஓரமாய் ஒதுங்கி – குழல் விளக்கின் ஒளியாய் கடித வாசகங்களை அவசர அவசரமாய் மேய்ந்தாள். கடிதத்தின் கடைசி வாசகத்தை படித்து முடித்ததும், மிக அதிர்ச்சி வாங்கியது மாதிரி நிமிர்ந்தாள்.

யாரண்ணா அவன்?

தெரியலை.

உங்க நண்பன் பாலகோபாலன்னு சொன்னான்.

பொய் சொல்லியிருக்கான்.

கவிதா நகர் கடைசித் தெருவுல என்னண்ணா நடந்தது?

ஜவகர் கவலையாய் நாற்காலிக்கு சாய்ந்து கொண்டே சொன்னான்.

ஐந்து நிமிடத்தை செலவழித்து நடந்ததைச் சொல்லி, முடித்தபோது கீதாவும் கவலையானாள்.

நீ ஏன்ணா வேண்டாத விவகாரங்கள்ல தலையிடறே?

இது வேண்டாத விவகாரமில்லை கீதா. வேண்டிய விவகாரம். விபத்து என்கிற பேரில் நடந்த படுகொலை. சரி, அது கிடக்கட்டும். அந்த லெட்டரைக்கொண்டு வந்து கொடுத்தவன் எப்படியிருந்தான்?

கீதா அடையாளங்களைச் சொல்ல — ஜவகர் மோவாயைத் தேய்த்தான். இந்த அடையாளங்களில் யாரைப் பார்த்திருக்கிறோம்?

அண்ணா, அவனை இன்னொரு தரம் பார்த்தால் கண்டிப்பா என்னால கண்டுபிடிக்க முடியும்.

மேசையின் மேல் கிடந்த ஸ்கூட்டர் சாவியை எடுத்துக் கொண்டான்.

சரி கிளம்பு.

கிளம்பறதா? எங்கேண்ணா?

போலீஸ் ஸ்டேஷனுக்கு.

போலீஸ் ஸ்டேஷனுக்கா எதுக்கு?

இந்தக் கடிதத்தைக் காட்டி ஒரு புகார் கொடுத்துவிட்டு வரலாம்.

வேண்டாண்ணா. இந்த லெட்டரை போலீஸ் வரைக்கும் கொண்டு போகாதீங்க.

ஏன்?

போலீசுக்கு செய்தி போயிட்டா பேப்பர்லேயும் வந்துடும். அது நமக்குத் தேவையா?

அதுக்காக இந்த லெட்டரை அலட்சியம் பண்ணிட முடியுமா கீதா? இதை போலீஸ்ல சொல்லி புகார் கொடுத்தே ஆகணும். புறப்படு.

ஹெல்மெட்டை தலையில் எடுத்து கவிழ்த்துக் கொண்டு புறப்பட்டான் ஜவகர். கீதாவும் வேறு வழியில்லாமல் பின் தொடர்ந்தாள்.

போலீஸ் ஸ்டேஷன்.

கடிதத்தை முழுவதுமாய் படித்துப் பார்த்த அந்த வழுக்கைத் தலை இன்ஸ்பெக்டர் தனக்கு எதிரில் உட்கார்ந்திருந்த ஜவகரையும் கீதாவையும் ஏறிட்டார்.

உங்க வீட்ல நீங்க ரெண்டு பேர் மட்டுந்தானா?

ஆமா…

அப்பா… அம்மா?

எப்பவோ காலமாயிட்டாங்க.

நீங்க வெளியே போயிட்டா உங்க சிஸ்டர் வீட்டுல தனியாகத்தான் இருப்பாங்களா?

ஆமா சார்.

உங்க வீட்டுக்கு பக்கத்துல எதிர்ல வீடுகள் இருக்கா?



இருக்கு சார்.

சரி, இதென்ன கவிதா நகர் கடைசித் தெரு விவகாரம்?

ஜவகர் அந்த இன்ஸ்பெக்டருக்கு முழு விவரத்தையும் சொல்ல அவர் சிரத்தையே கேட்டுவிட்டு அந்த மிரட்டல் கடிதத்தை அவனிடமே கொடுத்தார்.

என்ன சார் திருப்பிக் கொடுக்கிறீங்க?

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜுதானே இந்த விபத்து கேஸை பார்த்திட்டிருக்கார்?

ஆமா சார்.

அப்பமென்னா இந்த மிரட்டல் கடித விவகாரத்தையும் அவரே பார்த்துக்கட்டும்.

சார்… உங்க எல்லைக்குள்ளே நாங்க வசிக்கிறோம். நீங்கள்தான் எங்க புகாரை வாங்கிக்கணும். இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் கவிதா நகர் பகுதி. அவர் எப்படி எங்க புகாரைக் கவனிக்க முடியும்?

இந்த மிரட்டல் கடிதம், அந்த விபத்தோடு சம்பந்தப்பட்டதுதானே?

ஆமா…

அப்ப அவர்தான் அதை கவனிக்கணும். நான் வேணும்னா அவருக்கு போன் பண்ணி சொல்றேன். சொன்னவர் மேசை மேலிருந்த டெலிபோனை தன் பக்கமாய் நகர்த்திக் கொண்டு ரிசீவரை எடுத்து டயலைச் சுழற்றினார்.

தொடர்பு கிடைத்ததும் பேசினார்.

இரண்டு நிமிட பேச்சுக்குப் பின் — ரிசீவரை சாத்திவிட்டு ஜவகரிடம் திரும்பினார். மிஸ்டர் நவீன்ராஜ் ஏற்கனவே உங்களுக்கு எச்சரிக்கை பண்ணியிருக்காராமே?

எச்சரிக்கையா? என்ன எச்சரிக்கை?

அந்த கவிதா நகர் விபத்துல அக்கறை காட்ட வேண்டாம். ஒதுங்கியே இருங்கன்னு சொல்லியிருக்காராமே?

ஆமா சொன்னார்.

அதுபடி ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதானே. உங்களுக்கு தேவையில்லாத விவகாரங்கள்ல மூக்கை நுழைக்கிறீங்களாமே? உண்மையா.

சார், நான் ஒரு பத்திரிகை ஆசிரியன். கவிதா நகர் விபத்து நடந்ததில் எனக்கு சில சந்தேகங்கள் இருந்தது. அது விபத்தில்லை. கொலைன்னு நான் சொன்னேன். அது இன்ஸ்பெக்டருக்கு பிடிக்கலை. அவர் சொல்ற

மாதிரிதான் நான் செய்தி போடணுமாம். அந்த புதுமணத் தம்பதிகள் மேலே கார் மோதியிருக்கு. ஆனால் லாரி மோதிட்டதா செய்தி போடச் சொல்றார் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ். இது எந்த வகையில் நியாயம் சார்?

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார். மிஸ்டர் ஜவகர்! ஒரு பத்திரிகை ஆசிரியராயிருந்து நீங்க உண்மைகளை எழுதத் துடிக்கிறீங்க. ஆனால், போலீசுக்கு சில கட்டுப்பாடுகள் சம்பிரதாயங்கள் இருக்கு. பொது மக்களுக்கு கோபத்தையோ பீதியை உண்டாக்குகிற மாதிரியான செய்திகளை நாங்கள் தவிர்த்து ஆகவேண்டும். ஓர் இடத்துல துப்பாக்கி சூடு நடந்து ஐம்பது பேர் செத்துட்டாங்கன்னா, நாங்க அஞ்சு பேர்னுதான் செய்தி கொடுப்போம். உண்மையான செய்திகளைக் கொடுத்தால் மக்களோட கோபத்தை நாங்க சமாளிக்க முடியாது.

யூ...ஆர்.... கரெக்ட் சார். செய்தியோட முக்கியத்துவத்தை குறைச்சுத் தரலாம். ஆனால், ஒரு செய்தியை அப்பட்டமா மறைச்சா அதுக்கு என்ன சார் அர்த்தம்?

மறைக்கிறது தப்புதான். ஆனால் சில சமயம் நாங்க மேலிடத்துக்கு கட்டுப்பட வேண்டியிருக்கு. நீங்க இந்த கவிதா நகர் விபத்தைக்கண்டுக்காமே விட்டுடறது நல்லது. நான் இந்த மிரட்டல் பேர்வழிய யார் என்கிறதைக் கண்டு பிடிக்க முயற்சிகளை எடுத்துக்கிறேன். புகாரை ரைட்டர்கிட்டே கொடுத்துட்டு போங்க.

ஜவகர் புகாரைக் கொடுத்துவிட்டு கீதாவோடு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான். ஸ்கூட்டரை உசுப்பி உயிரூட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்து காம்பவுண்டு கேட்டைத் திறக்கும் போது கதவுப் பூட்டில் மடித்து வைத்த அந்தக் காகிதம் தெரிந்தது.

கீதா—

என்னண்ணா?

பூட்டுல ஏதோ காகிதம் தெரியுது. அது என்... பாரு?

கீதா போய் எடுத்து வந்தாள். ஜவகர் அதைப் பிரித்துப் பார்க்க கிறுக்கலாய் ஒரே வரி மட்டும் தெரிந்தது.

அவசரம் கீழ்கண்ட டெலிபோன் எண்ணோடு உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். 8415526.

கீதாவும் பார்த்துவிட்டு மிரட்சியோடு கேட்டாள். இது யாரோட டெலிபோன் நெம்பர் அண்ணா?

தெரியலையே?



சரி இப்ப போன் பண்ணப் போறீங்களா?

ஆமா ஸ்கூட்டர்ல ஏறி உட்கார்.

நான் வீட்டிலேயே இருக்கேன். நீங்க போயிட்டு வாங்கண்ணா?

முட்டாள்தனமா உளறாதே. நீ இனிமே வீட்ல தனியா இருக்கக்கூடாது. என் கூடவேதான் எப்பவும் இருக்கணும். இந்த லெட்டர் இதுல குறிப்பிட்டிருக்கிற டெலிபோன் நெம்பர் எல்லாம் பொய்யாக இருக்கலாம். உன்னை தனிமைப்படுத்தணும் என்கிறதுக்காகவும் இது எழுதப்பட்டிருக்கலாம். வா, வந்து ஸ்கூட்டர்ல ஏறு.

கீதா ஏறிக்கொண்டதும், ஸ்கூட்டர் மறுபடியும் உறுமி ஓர் அரைவட்டம் அடித்துக் கொண்டு பீறிட்டது.

எங்கே போய் போன் பண்ணப் போறீங்க?

அய்யப்பன் நகர்ல ஒரு டெலிபோன் பூத் இருக்கு. அங்கிருந்து பண்ணிடலாம்.

அண்ணா!

சொல்லு.

எனக்கென்னவோ நடக்கிற ஒவ்வொண்ணையும் பார்த்தால் பயமா இருக்கும். அந்த இன்ஸ்பெக்டர் சொல்ற மாதிரி இந்த விபத்து கேசுல தீவிரமா காட்டாமே விலகிடேன்.

நான் விலகப் போறதா இல்லை. கீதா என்னாலே உனக்கு ஆபத்து வருமோன்னு பயப்படாதே. இந்த அண்ணன் உயிரோட இருக்கிற வரைக்கும் எவனும் உன்னைத் தொட முடியாது. உனக்குத் தாலி கட்டப் போறவனைத் தவிர்த்து.

நான் எனக்காக பயப்படலைண்ணா.

பின்னே...

என்னோட அண்ணிக்காக...

அண்ணியா?

ஆமா வைபவியைச் சொல்றேன். எனக்கு வர்ற அதே ஆபத்துத்தானே உங்களை கட்டிக்கப்போற வைபவிக்கும் வரும்?

வைபவிதான் உனக்கு அண்ணின்னு தீர்மானமே பண்ணிட்டியா?

ஆமா. எனக்கொன்னும் தெரியாதுன்னு நினைச்சிட்டீங்களாக்கும். ஒரு பத்திரிகைக்கு பார்ட்னராய் இருக்கிற நீங்க இரண்டு பேரும் கூடிய சீக்கிரமே வாழ்க்கையிலேயும் பார்ட்னர்களாய் வரணும்.

சரிங்க பாட்டியம்மா.

ஸ்கூட்டர் அய்யப்பன் நகருக்குள் நுழைந்து ஆளில்லாத அந்த பொது டெலிபோன் பூத்துக்கு முன் நின்றது. இருவரும் இறங்கினார்கள். பூத்துக்குள் நுழைந்து கண்ணாடி கதவைச் சாத்திக் கொண்டார்கள்.

ஜவகர் டெலிபோன் ரிசீவரை எடுத்து துண்டுக் காகிதத்தில் எழுதியிருந்த எண்களை டயலில் சுழற்றினான். மறுமுனையில் ரிங் போய் அலோ குரல் கேட்டதும் காசைப் போட்டு லைனை உயிர்ப்பித்துக் கொண்டான்.

அலோ...

பேசறது ஜவகரா? மறுமுனைக் குரல் கேட்டது.

ஆமா.

கவிதா நகர் விபத்துல நீங்க உற்சாகம் காட்டுறீங்களா?

ஆமா! நீங்க யாரு?

நான் சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த். விபத்து நடந்த இடத்துக்கு இன்ஸ்பெக்டர் நவீன்ராஜோடு வந்தேன். என்னை நீங்க பார்த்திருக்கீங்க?

எஸ். எஸ். பார்த்திருக்கேன்.

கவிதா நகர் விபத்து கேசில் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் நடத்துகிற முறை எனக்கு கொஞ்சமும் பிடிக்கலை. நியாயத்தையும் தர்மத்தையும் தள்ளி வெச்சுட்டு அநியாயத்துக்கும் அதர்மத்துக்கும் துணைபோகிறார். நான் போலீஸ் யூனிபார்மை மாட்டிக்கிட்டு இருக்கிறதுனால என்னால எதுவும் செய்ய முடியாத நிலைமை. நீங்க இந்த கேஸ்ல ஆர்வம் காட்டறதை இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் மூலமா தெரிஞ்சுகிட்டேன். உங்களுக்கு உதவி பண்ணத்தான் லெட்டரை எழுதி உங்க வீட்டு பூட்டுல சொருகி வச்சிட்டு வந்தேன். இது என் நண்பனோட டெலிபோன்.

மிஸ்டர் ஆனந்த் இந்த விபத்தை பத்தி உங்களுக்கு என்ன உண்மை தெரியும்?

நிறைய உண்மையிருக்கு. உங்களை நான் நேர்ல சந்திக்க விரும்பறேன். ஓர் அரை மணி நேரம் உங்க கூட நான் பேசணும்.

இப்பவே நீங்க சொல்ற இடத்துக்கு நான் வர்றேன்.

வேண்டாம். நாளைக்கு காலையிலே நானே பத்திரிகை ஆபீசுக்கு விசாரணைக்கு வர்ற மாதிரி வர்றேன். அப்ப பேசுவோம்.

நன்றி மிஸ்டர் ஆனந்த்.

ரிசீவரை வைத்துவிட்டு ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு



டெலிபோன் பூத்தின் கதவை திறந்துகொண்டு கீதாவோடு வெளிப்பட்டான் ஜவகர்.

வெளியே–

இருட்டில்–

ஸ்கூட்டர்–

ஸ்கூட்டர் அருகே தடித்தடியாய் இரண்டு பேர் நின்றிருந்தார்கள்.

# 7

**அ**ண்ணா நம்ம ஸ்கூட்டருக்குப் பக்கத்துல யாரோ நிக்கிறாங்க – கீதா குரல் நடுங்கிக் கொண்டே ஜவகரின் தோள் பட்டையை தன் மெல்லிய விரல்களால் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள். ஜவகருக்கு லேசாய் உதறிக்கொண்டாலும் அந்த உதறலை வெளிக்காட்டாமல் ஸ்கூட்டரை நெருங்கினான். அதன் ஸ்டாண்டை விடுவித்து நகர முயன்றபோது இரண்டு பேர்களில் ஒருவன் மறித்தான். கேலியான குரலில் சொன்னான்.

நில்லும்மா கண்ணு.

ஜவகர் நின்று அவனை ஏறிட்டான். என்ன. என்றான் சைகையில்.

இந்நினி அவசரமா வந்து யாருக்கு போன் பண்ணிட்டு போறே?

நீங்க யாரு?

மொதல்ல நாங்க கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு. சொல்லலைன்னா?

இன்னாடா தினாவெட்டா பேசறே? கையிலே என்னாயிருக்குன்னு பார்த்தியா? சொல்லிக்கொண்டே கையில் இருந்த எதையோ ப்ளக்கென்று அழுத்தினான். அரையடி நீளத்துக்கு கத்தியொன்று தன் உலோக நாக்கைப் பளபளப்பாய் நீட்டி இருட்டில் மின்னியது. சத்தும் முத்தும் பார்த்தியா? ஆள் நடமாட்டமே கிடையாது. அண்ணன் தங்கச்சி ரெண்டு பேரையும், சொருகிட்டு நாங்கபாட்டுக்கு போயிட்டே இருப்போம்.

ஜவகர் தன் மார்புக்கு குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு அந்த இருவரையும் பார்த்துப் புன்னகைத்தான்.

இப்ப நான் எங்கே போன் பண்ணினேன்னு உங்களுக்குத் தெரியணும். அவ்வளவுதானே?

ஆமாம்.

ஜவகர் கீதாவைத் திரும்பிப் பார்த்தான்.

என்ன கீதா, அண்ணாச்சிங்க கேட்கிறாங்க

சொல்லட்டுமா?

சொ_ சொல்லிடுங்கண்ணா_

ஜவகர் அவர்களை ஏறிட்டபடி சொன்னான். மாமனார் வீட்டுக்குத்தான் போன் பண்ணினேன்.

மாமனார் வீடா. என்ன கண்ணு உளர்றே? உனக்குத்தான் கண்ணாலமே ஆகலியே.

நான் என்னோட மாமனார் வீட்டைச் சொல்லலை அண்ணாச்சி! உங்க மாமனார் வீட்டைச் சொன்னேன்.

டேய்ய்_

ஏராளமான ஆத்திரத்தோடு கத்திக்கொண்டே கத்தியோடு பாயமுயன்றவரை ஜவகர் வலது காலால் உதைத்துக்கொஞ்சம் திசைமாற்ற மற்றவன் தன் வசம் இருந்த கத்தியை நீட்டிக்கொண்டு ஜவகரை எதிர்க்கொண்டான். ஜவகர் கத்தினான்.

கீதா! நீ தள்ளி நில்லு.

கீதா டெலிபோன் பூத் அருகே ஓடிப்போய் நின்று கொள்ள ஜவகர் அந்த தடியன்கள் மேல் பாய்ந்தான்.வலது கை முஷ்டியைக் குவித்து ஒருவனின் நடுமுகத்தை நொறுக்கினான். மூக்கில் ஏதோ உடைந்து ஜவகரின் கையை ரத்தம் நனைக்க அதே கையோடு இன்னொருவரின் தாடையில் வெடித்தான். அடியின்வேகம் தாளாமல் அவன் மல்லாந்து விழ கையிலிருந்த கத்தி இருட்டில் எங்கோ எகிறியது.

ஜவகரின் மூர்க்கத்தனமான தாக்குதலைப் பார்த்ததும் இன்னொருவன் ஓட ஆரம்பிக்க ஒருவனை விட்டுவிட்டு கீழ விழுந்தவனை அள்ளித் தூக்கினான் ஜவகர். முகத்தில் சராமாரியாய் தீபாவளி கொண்டாடிவிட்டுக் கேட்டான்.

யார்ரா நீங்க_?

அவன் மவுனம் சாதிக்க தலைமுடியைக் கொத்தாய் பற்றி உலுக்கினான் ஜவகர்.

ம்_ சொல்லு_ உங்களை யார் அனுப்பிச்சது?

அவன் பதில் பேசாமல் பிடிவாதம் காட்டவே ஜவகர் கீதாவிடம் திரும்பினான். கீதா, அவசர போலீசுக்கு போன் பண்ணி விஷயத்தைச் சொல்லி உடனே இங்கே வரச்சொல்லு.

கீதா டெலிபோன் பூத்துக்குள் புகுந்தாள்.

அவசர அவசரமாய் போலீசை தொடர்பு கொண்டாள்.

அவள், தொடர்பு கொண்ட ஐந்தாவது நிமிடம் போலீஸ் ஜீப் பீறிட்டுக் கொண்டு வந்து நின்றது.

ஜீப்பினின்றும்இறங்கிய இன்ஸ்பெக்டரை நோக்கி



அந்தத் தடியனைத் தள்ளினான் ஜவகர். இன்ஸ்பெக்டர் அவனை தூக்கிக் கொண்டு பளீரென்று அறைந்தார்.

யார்ரா நீ?

அவன் மவுனம் சாதிக்க சப்-இன்ஸ்பெக்டரிடம் அவனைத் தள்ளிவிட்டு ஜவகரை நெருங்கினார் இன்ஸ்பெக்டர்.

உங்க பேரு?

ஜவகர் சார்.

இவன் யாருன்னு உங்களுக்குத் தெரியுமா?

தெரியாது சார். இவன்கூட இன்னொருத்தனும் வந்தான். அவன் தப்பிச்சுட்டான்.

எதுக்காக உங்களை தாக்க முயற்சி பண்ணினாங்க?

தெரியலை சார் ஒரு நண்பனுக்கு டெலிபோன் பண்றதுக்காக இங்கே வந்தோம். வழிமறிச்சு மிரட்ட ஆரம்பிச்சுட்டாங்க.

நீங்க என்ன தொழில் பண்றீங்க?

நான் ஒரு பத்திரிகை ஆசிரியர்.

அப்படியா? என்ன பத்திரிகை?

பூகம்பம்.

அரசியல் பத்திரிகையா?

கொஞ்சம் அரசியல் கலந்த பத்திரிகை.

சரி, ஸ்டேஷனுக்கு வந்து ஒரு ரிப்போர்ட் எழுதி கொடுத்துட்டு போங்க நாங்க விடியறதுக்குள்ளே இவனை விசாரிச்சு இவனோட ஜாதகத்தை கொண்டாந்துடுவோம்.

நன்றி இன்ஸ்பெக்டர்.

ஜீப் புறப்பட ஜீப்பின் பின்னாலேயே ஸ்கூட்டரை விரட்டினான் ஜவகர்.

அடுத்த பத்தாவது நிமிடம் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தார்கள். ஸ்டேஷன் ரைட்டர் கொடுத்த வெள்ளைப் பேப்பரில் நிறுத்தி நிதானமாய் ரிப்போர்ட் எழுதிக் கொடுத்துவிட்டு எழுந்தான் ஜவகர்.

உட்காருங்க ஜவகர். டீ சாப்பிட்டு விட்டுப்போகலாம்.

டீக்கு ஆர்டர் பண்ணியாச்சு நீங்க சாப்பிட்டுத்தான் போகணும்.

அவருடைய பேச்சை மறுக்கமுடியாமல் மறுபடியும் உட்கார்ந்தான். இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். உங்களை மாதிரியான தைரியசாலி இளைஞர்கள் வீதிக்கு ஒருத்தர் இருந்தா போதும், ரவுடிகளோட கொட்டமெல்லாம் தானாக அடங்கிடும்.

இவன்கூட வந்த இன்னொருத்தனையும் கண்டு பிடிச்சிடுவீங்களா இன்ஸ்பெக்டர்?

நாளைக்கு காலையில ஏழு மணிக்கு ஸ்டேஷனுக்கு வாங்க ஜவகர். அந்தப் போர்வழியும் வாக்—அப்புல இருப்பான். உங்களை என்ன காரணத்துக்காக தாக்க வந்தாங்கிறதை நீங்களே விசாரணை பண்ணிக்கலாம்.

ம வந்தது.

இரண்டு நிமிடங்களை செலவழித்து மவை வயிற்றுக்கு காண்பித்துவிட்டு எழுந்தார்கள் ஜவகரும் கீதாவும்.

மறுநாள் காலை ஆறு மணி.

டி.எஸ்.பி. நரசிம்மம் கையிலிருந்த பூகம்பம் பத்திரிகையை இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் முன்பு வீசியெறிந்து விட்டு பொறிந்தார். நீங்க அந்தப் பத்திரிகைக்காரனை எச்சரிக்கை பண்ணின லட்சணத்தைப் பார்த்தீங்களா?

ஏ..என்ன சார்?

முதல்ல பேப்பரைப் பாருங்க.

நவீன்ராஜ் பேப்பரைப் பிரிக்க, முதல் பக்கத்திலேயே அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

புதுமணத் தம்பதிகள் மேல் கார் மோதியது. கணவன் மரணம்... மனைவி உயிர் ஊசல். விபத்தா? கொலை முயற்சியா? போலீஸ் திணறல். செய்திக்குப் பக்கத்திலேயே மோகனின் போட்டோ.

செய்தியைப் படித்த நவீன்ராஜின் கண்கள் ஜிவு ஜிவுத்தது. நேற்றைக்கு அந்தப் பத்திரிகை ஆசிரியரைக் கடுமையாக எச்சரிக்கை பண்ணிட்டுத்தான் வந்தேன் சார். அப்படியிருந்தும் செய்தியை மாத்திப் போட்டிருக்கான்.

செய்தி கிடக்கட்டும். செத்த மோகனோட போட்டோ அவனுக்கு எப்படி கிடைச்சது?

ஆஸ்பத்திரிக்கு வந்தப்பகூட அவனை போட்டோ எடுக்க விடலை சார். இந்த போட்டோ அவனுக்கு எப்படி கிடைச்சதுன்னு தெரியலை.

இந்த சமாதானத்தை எல்லாம் என்கிட்ட சொல்லிட்டு நிக்காதீங்க. இப்பவே போய் அந்த பத்திரிகை ஆசிரியனை பாருங்க. கடுமையாக எச்சரிக்கை பண்ணுங்க. நாளைக்கு வர்ற பேப்பர்ல திருத்தம் போட்டு காருக்கு பதிலா லாரின்னு போடச் சொல்லுங்க...ம்... போங்க...

எஸ். சார். சல்யூட் பதித்துவிட்டு அறையினின்று கோபமாய் வெளியே வந்தார் நவீன்ராஜ். வாசலில்



நின்றிருந்த பைக்கை உதைத்து உசுப்பிக் கொண்டு பறந்தார். ஆத்திரத்தில் உடம்பு உஷ்ணமாகித் தகித்தது. ராஸ்கல்! நேற்றைக்கு அவ்வளவு தூரம் சொல்லியிருந்தும் செய்தியை உள்ளது உள்ளபடி போட்டிருக்கிறானே?

பைக் பத்திரிகை ஆபீசை நெருங்கியபோது — ஜவகர் வெளியே எங்கோ புறப்பட்டுப் போக தலையில் ஹெல்மெட்டை கவிழ்த்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் புன்னகைத்தான்.

குட்மார்னிங் சார்...

நவீன்ராஜ் குட்மார்னிங் சொல்லாமல் பைக்கை அணைத்துவிட்டு அவனை நெருங்கினார். பார்வையிலேயே தீய்த்தார். பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டார்.

செய்தியை நான் எப்படிப் போடச் சொன்னேன்?

எந்த செய்தி?

கவிதா நகர் விபத்து பற்றி?

ஓ— அந்த செய்தியா. சாரி சார். நீங்க நேற்றைக்கு வந்துட்டு போன பிறகு நான் ஒரு அவசர வேலையா வெளியே போயிட்டேன். அச்சுக் கோர்ப்பவர்களை நான் முன்னாடி கொடுத்திருந்த பழைய செய்தியை அச்சுக்கோத்து மெஷினில் ஏத்திட்டாங்க.

இதை நான் நம்பணுமா?

நம்பறதும் நம்பாததும் உங்க இஷ்டம்?

சரி, அந்த போட்டோ எப்படி கிடைச்சது?

எந்த போட்டோ?

செத்த கோலத்துல இருக்கிற மோகனோட போட்டோ.

ஓ... அந்த போட்டோவா? விபத்து நடந்த இடத்திலேயே எடுத்த போட்டோ அது.

இதையும் நான் நம்பணுமா?

நம்புங்க சார். இதுதான் உண்மை.

சரி நாளைக்கு வர்ற பேப்பர்ல திருத்தம்னு போட்டு காருக்கு பதிலா லாரி மோதினதுன்னு போட்டுடுங்க.

மன்னிக்கணும் இன்ஸ்பெக்டர். எங்க பத்திரிகையில நாங்க பொய்ச் செய்திகளை போடறதில்லை. மோதினது காராகவே இருக்கட்டும். லாரியா மாறவேண்டாம்.

நவீன்ராஜின் கண்கள் சிவந்தன. அடிக்குரலில் கர்ஜித்தார்.

போலீசை பகைச்சுக்கிட்டா என்னாகும் தெரியுமா? புன்னகையோடு சொல்ல... நவீன்ராஜ் ஆவேசமானார்.

# 8

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ். அதுவரைக்கும் ஜவகருக்கு கொடுத்துவந்த மரியாதையை கைவிட்டுவிட்டு சூடாக வார்த்தைகளை அள்ளினார். இதோ பார்! போலீசை பத்தி உனக்குத் தெரியாது. போலீசை பகைச்சுக்கிட்டா அதனோட விளைவுகள் மிகமிக மோசமாயிருக்கும். இது உனக்கு கடைசி எச்சரிக்கை. நாளைக்குக் காலையிலே வர்ற உன்னோட பேப்பர்ல திருத்தம் போட்டிருக்கணும்.

ஜவகர் புன்னகைத்தான்.

என்ன சிரிக்கிறே?

இன்ஸ்பெக்டர்! இந்த யூனிபார்மை போட்டு கிட்டு, ஓர் உண்மையை கொலை பண்ண பார்க்கறீங்களே இது நியாயமா?

நீ ஒண்ணும் எனக்கு உண்மையைப்பத்தி போதிக்க வேண்டாம். நான் என்ன சொல்றேனோ, அதைச் செய் போதும். கவிதா நகர் விபத்து கேசல மூக்கை நீட்டாமே நடிகைகளை பேட்டி எடுக்கப் போ. சினிமா விமர்சனம் எழுது. உனக்குத் தேவை இல்லாத விவகாரங்களில் சம்மன் இல்லாமே ஆஜராகாதே. புரிஞ்சுதா?

புரியலை சார்...

நவீன்ராஜ் எரிச்சலாய் நிமிர்ந்தார். என்ன புரியலை?

கவிதா நகர்ல நடந்த விபத்துல நான் ஆர்வம் காட்டின ஒரே ஒரு காரணத்துக்காக எத்தனை வகையான மிரட்டல்கள்? என்னோட தங்கையை கற்பழிக்கப்போவதாக ஒரு மிரட்டல் கடிதம். என்னைத் தீர்த்துக்கட்டறதுக்காக வந்த ரெண்டு தடியன்கள். இதெல்லாம் எதுக்காகன்னு எனக்குப் புரியலை சார்.

உனக்குப் புரிய வேண்டாம். நாளைக்கு பேப்பர்ல திருத்தம் மட்டும் போட்டுடு போதும். சொல்லிவிட்டு பைக்கை நோக்கிப் போனார் நவீன்ராஜ். கோபமாய் உதைத்து அதை ஸ்டார்ட் செய்த கொண்டு புகை கக்க பறத்திக் கொண்டு போனார். பத்திரிகை ஆபீசின் உள்ளேயிருந்து வைடவியும் கீதாவும் எட்டிப் பார்த்தார்கள்.

என்ன சொல்லிட்டுப் போறார் அண்ணா? கீதா கேட்டாள்.

திருத்தம் போடணுமாம்.

போடப்போறியா?

வந்து சொல்றேன். மொதல்ல அந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு போய் நேற்றைக்கு மாட்டின தடியன் யார்



என்கிற விபரத்தை தெரிஞ்சுக்கிட்டு வரணும். கவிதா நகர் விபத்தைப் பத்தி அந்த தடியனுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்.

போயிட்டு எப்போ வருவே?

கால்மணி நேரத்துல வந்துடுவேன். சொல்லிக் கொண்டே ஸ்கூட்டருக்கு வந்தான் ஜவகர்.

ஜவகர் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தபோது இன்ஸ்பெக்டரின் இருக்கை காலியாக இருந்தது. பலான கேசில் மாட்டிக் கொண்ட இரண்டு பெண்களோடு லாக்-அப் கம்பிகளுக்கு வெளியே நின்றபடி ஒரு கான்ஸ்டபிள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

அந்த ஓட்டலுக்குத்தான் ரெய்டு வருவோம்னு நேத்திக்கே நான் சரோஜாகிட்டே சொல்லிட்டிருந்தேனே. அப்படியும் ஏன் அந்த ஓட்டலுக்கு போனே மயிலா?

அந்த மயிலா சிணுங்கினாள். ரெய்டு வராதுன்னு ஜபார்தான் சொன்னான். அதை நம்பி மோசம் போயிட்டோம். தாணாக்காரரே!

சரி. ஜாக்கெட்டுக்குள்ளாரே நூறு ரூபா நோட்டுத் தெரியுது. அதை எடுத்துக் கொடு. பக்கத்து ஓட்டலில் இருந்து இடியாப்பமும், பாயாவும் வாங்கிட்டு வர்றேன். இந்நேரத்துக்குப் போன சூடா கிடைக்கும்.

க்கும்... தொண்டையை கனைத்தான் ஜவகர். அந்த மீசைக்கார கான்ஸ்டபிள் திரும்பிப் பார்த்து சர்வ சாதாரணமாய்க் கேட்டார்.

என்ன சார்?

இன்ஸ்பெக்டரைப் பார்க்கணும்

அவர் வெளியே போயிருக்கார்.

எப்ப வருவார்?

அரை மணி நேரமாகும் சார். என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்?

நேற்றைக்கு ராத்திரி என்னைத் தாக்க முயற்சி பண்ணின ஓர் ஆளை ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்தோம். அதைப் பத்தி அவர்கிட்ட பேசணும்

உங்க பேரு?

ஜவகர்.

உட்காருங்க சார் வந்துடுவார். டிபன் சாப்பிட வீட்டுக்குப் போனார். சொல்லிவிட்டு அவர் மறுபடியும் லாக்—அப் பக்கம் திரும்ப, ஜவகர் கூப்பிட்டான்.

கான்ஸ்டபிள்.

எரிச்சலாய்த் திரும்பினார்.

என்ன சார்?

நேத்தைக்கு கைது பண்ணிக் கொண்டு வந்த ஆள் எங்கே?

எனக்குத் தெரியாது சார். நான் காலையில ஆறு மணிக்குத்தான் வேலைக்கு வந்தேன். இங்க இடமில்லேன்னு வேற எங்கேயாவது கொண்டு போயிருப்பாங்க. இன்ஸ்பெக்டர் வந்ததும் கேட்டுப் பாருங்க.

கான்ஸ்டபிள் லாக்–அப் பக்கம் திரும்பிக் கொள்ள ஜவகர் மேசைக்கு பக்கத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்து காத்திருக்க ஆரம்பித்தான்.

சரியாய் அரை மணி நேரம் கழித்து.

ஸ்டேஷன் வாசலில் பைக் சத்தம் கேட்டது. தொடர்ந்து நேற்று இரவு பார்த்த இன்ஸ்பெக்டர் மடிப்பு கலையாத புது யூனிபார்மோடு உள்ளே வந்தார். கண்களில் குளிர்க் கண்ணாடி தொற்றியிருந்தது.

ஜவகர் ஒரு மரியாதைக்காக எழுந்து நின்றான்.

குட்மார்னிங் சார்.

குட்மார்னிங் சொல்லிக் கொண்டே நாற்காலிக்கு போய் சாய்ந்து குளிர்க் கண்ணாடியைக் கழற்றி மேசையின் மேல் போட்டார். இன்ஸ்பெக்டர் ஜவகரை ஏறிட்டபடி எஸ் என்ன விஷயம்? என்று கேட்டார்.

சார், நான் ஜவகர் நேற்றைக்கு ராத்திரி, என்னைத் தாக்க முயற்சி பண்ணின ஒரு தடியனை, நீங்க கைது பண்ணி வேகமாய் ஜவகர் பேச பேச இன்ஸ்பெக்டர் கையமர்த்தினார்.

ஏதாவது ஸ்டேஷன் மாறி வந்துட்டீங்களா மிஸ்டர்? நேத்தைக்கு ராத்திரி நான் யாரையும் கைது பண்ணலையே?

ஜவகர் திடுக்கிட்டுப் போய் எழுந்தான்.

சார்.

சொல்லுங்க. அவர் புன்னகைத்தார்.

உண்மையாகவே என்னை உங்களுக்குத் தெரியலையா? நேத்தைக்கு ராத்திரி அய்யப்பன் நக டெலிபோன் பூத்துக்கு பக்கத்துல வெச்சி என்னையு என்னோட தங்கையையும் தாக்க முயற்சி பண்ணி ரெண்டு பேர்கள்ல ஒருத்தனை நான் மடக்கி வெச்சுக்கிட் உங்களுக்குப் போன் பண்ணினேன்.

இன்ஸ்பெக்டர் அவனை புதுப் பார்வை பார்த்தா மேசை மேலிருந்த பேப்பர் வெயிட்டை உருட்டி



கொண்டே கேட்டார். உங்க பேரென்ன சொன்னீங்க?

ஜவகர்.

என்ன தொழில் பண்றீங்க?

ஜவகர் அவரை முறைத்தான்.

இன்ஸ்பெக்டர் கேட்டார் புன்னகையோடு — என்ன அப்படி பார்க்கறீங்க?

சார். நீங்க என்னைத் தெரியாத மாதிரி நடிக்கிறீங்க. நேற்றைக்கு ராத்திரி நான் இந்த ஸ்டேஷனுக்கு வந்தேன். ரிப்போர்ட் எழுதிக் கொடுத்தேன். நீங்க ம வாங்கிக் கொடுத்தீங்க நானும் என்னோட தங்கையும் சாட்சிட்டோம்.

ரிப்போர்ட்டை எழுதி யார்கிட்டே கொடுத்தீங்க?

உங்ககிட்டத்தான் கொடுத்தேன்.

அப்போ மணி எவ்வளவு இருக்கும்?

கிட்டத்தட்ட ரெண்டு மணி.

சாரி ஜவகர். அந்த நேரத்துல என்னை ஸ்டேஷன்ல பார்த்திருக்கவே முடியாது. விபச்சார ஒழிப்புக்காக ஒவ்வொரு லாட்ஜா ஏறி இறங்கிட்டிருந்தோம். நான் விடியற்காலை நாலு மணிக்குத்தான் ஸ்டேஷனுக்கு வந்தேன்.

ஜவகர் திக்கித்துப் போய் அவரையே பார்த்தான். கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரை நெருங்கி நின்றார்.

சார்.. அதுகளை கூப்பிட்டுமா?

கூப்பிடப்பா! இப்பவே ஆரம்பிச்சாதான் கேஸ்களை புக் பண்ணி முடிக்க பத்து மணியாகும்.

கான்ஸ்டபிள் நகர்ந்ததும் இன்ஸ்பெக்டர் மறுபடியும் ஜவகரை ஏறிட்டார். எந்த ஸ்டேஷன்ல ரிப்போர்ட் கொடுத்தீங்கன்டனு நல்லா ஞாபகப்படுத்திட்டு போய். அந்த ஸ்டேஷன்ல கேளுங்க ஜவகர். இப்ப புறப்படறீங்களா? நான் கேஸ்களை கவனிக்கணும்.

இன்ஸ்பெக்டர்..

சொல்லுங்க..

அந்தத் தடியனை என்ன பண்ணீங்க.. ரிலீஸ் பண்ணிட்டீங்களா? யாரோட உத்தரவு பேர்ல இப்படி நடந்துகிறீங்க?

ப்ளீஸ் போயிடுங்க? நீங்க ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர். பார்க்கவும் கவுரமா இருக்கீங்க. ஒரு கான்ஸ்டபிளை விட்டு உங் களை தொரத்துற அளவுக்கு வெச்சுக்காதீங்க. இன்ஸ்பெக்டர் குரலைத் தாழ்த்திக் கொண்டு மெதுவான குரலில் சொல்ல ஜவகர் மேசையின் மேல் இரண்டு

கைகளையும் ஊன்றிக் கொண்டு அடிக்குரலில் கர்ஜித்தான்.

இன்ஸ்பெக்டர். துஷ்யந்தன் சகுந்தலையை மறந்த மாதிரி நீங்க என்னை மறந்துட்டீங்க. இன்னிக்கு நீங்க ஜெயிச்சுடலாம். நாளைக்கு ஜெயிக்கப்போறது நான்... நான்தான்...

அப்படியா? ரொம்பவும் சந்தோஷம். போயிட்டு வாங்க இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்கு வெளியே கையைக் காட்டினார்.

உதவி போலீஸ் சூப்பிரெண்ட் நரசிம்மம் ஆஸ்பத்திரியின் வாசலில் ஜீப்பை நிறுத்திவிட்டு இன்ஸ்பெக்டர் நவீன்ராஜோடு கீழே இறங்கினார்.

இன்னமும் அந்த பொண்ணு அவசர சிகிச்சை வார்டில்தானே இருக்கு?

ஆமா சார்.

வராந்தாவில் நடந்ததுமே தலைமை டாக்டர் ஷெட்டி எதிர்ப்பட்டார். இருவரும் பரஸ்பரம் கை குலுக்கிக் கொண்டார்கள். நட்பாய் சிரித்தார்கள்.

டாக்டர்! அந்த விபத்து கேஸ் எப்படியிருக்கு?

அந்தப் பொண்ணு சாந்தாதானே?

ஆமா.

அபாயக் கட்டத்தை தாண்டிட்டா! இன்னிக்கு சாயந்தரம் மறுபடியும் ஒரு ஆபரேஷன் இருக்கு. அந்த ஆபரேஷனுக்கு பின்னாடி நிச்சயம் தேறிடுவா.

டாக்டர் நான் உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும்.

வாங்க... என்னோட அறைக்குப் போயிடுவோம்.

நரசிம்மம் நவீன்ராஜிடம் திரும்பினார். இன்ஸ்பெக்டர்! ஷெட்டியும் வராந்தாவின் கோடியிலிருந்த அறையை நோக்கிப் போனார்கள்.

டாக்டர் சொன்னார். ஒரு விபத்து கேசுக்காக நீங்க ஆஸ்பத்திரி வந்திருக்கிறது இதுதான் முதல் தடவைன்னு நினைக்கிறேன்.

நீங்க சொல்வது சரி டாக்டர்.

ஏதாவது காரணம் இருக்கிறதா?

காரணம் இல்லாமல் வருவேனா?

அறைக்குள் நுழைந்தார்கள். எதிரெதிர் நாற்காலிகளில் சாய்ந்து கொண்டார்கள். ஷெட்டி கேட்டார்! சொல்லுங்கள். என்ன காரணம்?

அந்தப் பெண் சாந்தா பிழைக்கக் கூடாது டாக்டர்.



# 9

டாக்டர் ஷெட்டி அதிர்ச்சியோடு திரும்பி போலீஸ் சூப்பிரண்டு நரசிம்மத்தைப் பார்த்தார். நீ... நீங்க என்ன சொல்றீங்க..? அந்தப் பெண் பிழைக்கக் கூடாதா?

ஆமாம்.

ஏன்?

டாக்டர்! இது மேலிடத்து விவகாரம். நடந்த கார் விபத்தில் சில பெரிய இடத்து சங்கதிகள் அடங்கியுள்ளன.

அதற்காக அந்தப் பெண்ணை சாகடித்து விடுவதா? சாரி... டி.எஸ்.பி. சார். என்னால முடியாது. நோயாளிகளை குணப்படுத்தத்தான் டாக்டருக்கு படித்திருக்கிறேன். சாகடிக்க அல்ல. நீங்கள் ஒரு போலீஸ் அதிகாரி... இப்படி பேசலாமா?

டி.எஸ்.பி. புன்னகைத்தார் பேசக் கூடாததுதான். ஆனால், நிர்பந்தம் அப்படி. நான் சொன்னதை நன்றாக யோசியுங்கள் டாக்டர்.

யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை டி.எஸ்.பி சார். அந்தப் பொண்ணுக்கு ஆபரேஷன் நடக்கத்தான் போகிறது. அவள் உயிர் பிழைக்கத்தான் போகிறாள். நான் என்னுடைய கடமையைச் செய்வதில் யாரும் குறுக்கிட முடியாது.

உங்களுடைய கடமை உணர்ச்சிக்கு என்னுடைய பாராட்டுக்கள் டாக்டர். பைதபை... நான் ஒரு விஷயம் கேள்விப் பட்டேன் உண்மையா?

என்ன விஷயம்? டாக்டர் ஷெட்டி நெற்றியைச் சுருக்கினார்.

சென்னை மெடிக்கல் காலேஜ் டீன். போஸ்டுக்கு நீங்கள் அப்ளை செய்திருப்பதாக கேள்விப்பட்டேன் உண்மையா?

ஆமாம்.

சாந்தா பிழைக்காமல் இருந்தால் உங்களுக்கு அந்த போஸ்டு கிடைக்கும்! இது என்னுடைய வாக்குறுதி இல்லை. மேலிடத்து வாக்குறுதி. யோசிக்க நிறைய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். பிறகு ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் டெலிபோனில் எந்த நேரமும் கிடைப்பேன்.

போலீஸ் சூப்பிரண்ட் நரசிம்மம் ஒரு புன்னகையோடு சொல்லிவிட்டுப் புறப்பட எழுந்தார். டாக்டர் கையமர்த்தினார்.

ஒரு நிமிடம் டி.எஸ்.பி. சார்.

என்ன?

இனிமேல் இந்த காக்கி யூனிபார்மை தயவு செய்து மாட்டிக் கொள்ளாதீர்கள். ஆனும் கட்சிக்காரர்கள் கட்டிக் கொள்கிற வேட்டியைக் கட்டி, நீளமாய் ஒரு துண்டைப்போட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் பார்க்கிற உத்தியோகத்துக்கு பொருத்தமாய் இருக்கும்?

டாக்டர்!

சுத்தாதீங்க.... போயிட்டு வாங்க. கைகளை கூப்பினார் டாக்டர் ஷெட்டி

பூகம்பம் பத்திரிகை அலுவலகம்.

காலை பதினோரு மணி.

ஜவகர் ரிசீவரை காதில் பொருத்திக் கொண்டு டயலைச் சுழற்றிக் கொண்டிருந்தான். பக்கத்தில் உட்கார்ந்திருந்த கீதா கேட்டாள்.

யாருக்கண்ணா போன்?

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் பதினோரு மணிக்கு வர்றேன்னார். இன்னும் ஆளைக் காணோமே?

ஓர் உண்ணாவிரத மேட்டரை கம்போஸ் பண்ணிக் கொண்டிருந்த வைபவி திரும்பினாள். இப்பத்தானே மணி பதினொண்ணு ஆச்சு. ஒரு பதினைஞ்சு நிமிடம் தாமதித்துப் பார்த்துவிட்டு போன் பண்ணலாம்.

வைபவி சொல்லிக் கொண்டிருக்கும்போதே இணைப்பு கிடைத்தது. ஜவகர் கையிலிருந்த கர்ச்சீப்பால் ரிசீவரின் வாயைப் பொத்திக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டான்.

அலோ போலீஸ் ஸ்டேஷனா?

ஆமா.

அங்கே சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் இருக்காரா?

நீங்க யார் பேசறது?

ஆனந்த்தோட நண்பர்.

பேரு?

ப..ப..பண்டரிநாதன் – வாய்க்கு வந்த பெயரைச் சொன்னான் ஜவகர்.

அவர் வெளியே போயிருக்கார்.

எப்ப வருவார்.

சொல்ல முடியாது. எப்ப வேணும்னாலும் வரலாம்.

எங்கே போயிருக்கார்ன்னாவது சொல்ல முடியுமா?

கேஸ் விஷயமா வெளியே போயிருக்கார். அவர் வந்ததும் நீங்க போன் பண்ணினதா சொல்றேன். இப்ப நீங்க எந்த நெம்பரிலிருந்து பேசறீங்க?



டெலிபோன் பூத்திலிருந்து பேசிக்கிட்டிருக்கேன்.

அப்படியா? ஓர் அரைமணி நேரம் கழிச்சு போன் பண்ணுங்க. அவர் சீட்ல இருப்பார்.

நன்றி சொல்லிவிட்டு ரிசீவரை வைத்த அதே விநாடி மோட்டார் பைக்கின் டப் டப் சத்தம் வாசலருகே கேட்டது. வைபவி சன்னல் வழியே எட்டிப் பார்த்துவிட்டு சொன்னாள்.

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்தன் வர்றார்.

ஒரு போன் கால் வீண்.

சொன்னா கேட்டாத்தானே? அவர் வர்றதுக்குள்ளே அவசரம்?

ஆனந்த் உள்ளே வந்தார். ஜவகர் எழுந்து நின்று குட்மார்னிங் சொல்லி நாற்காலியைக் காட்டினார். இப்பத்தான் உங்களுக்கு போன் பண்ணினேன் சார். நீங்க வெளியே புறப்பட்டதா சொன்னாங்க.

அப்படியா போன்ல யார் பேசினாங்க_

தெரியலை சார்.

உங்களை யார்னு சொல்லிகிட்டீங்களா?

உங்க நண்பர் பண்டரிநாதன்னு சொன்னேன். அரை மணி நேரம் கழிச்சு போன் பண்ணும்படியா சொன்னாங்க.

நான்தான் வர்றேன்னு சொல்லியிருந் தேனே! அதுக்குள்ள ஏன் போன் பண்ணீங்க? – சொல்லிக் கொண்டே ஆனந்த் நாற்காலியில் சாய்ந்தார்.

சாரி சார். ஓர் ஆர்வத்துல போன் பண்ணிட்டேன்.

ஆனந்த் சுற்றும் முற்றும் பார்த்தார்.

என்ன சார் பார்க்கறீங்க?

இதே ரூம்ல பேசலாமா? வேற ரூமுக்கு போயிடலாமா?

இதே ரூம் பேசலாம் சார். யாரும் வரமாட்டாங்க. தொழிலாளர்கள் எல்லாம் பின்னாடி இருக்காங்க. ஜவகர் சொன்னதும் ஆனந்த் தன் முழங்கைகளை மேசையின் மேல் ஊன்றிக் கொண்டு பேச்சை ஆரம்பித்தார். ஜவகர், இந்த கவிதா நகர் கார் விபத்துல நீங்க காட்டற தீவிரம் பல போலீஸ் அதிகாரிகளுக்கு எரிச்சலா இருக்கு. முக்கியமா என்னோட ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜும் டி.எஸ்.பி. நரசிம்மமும் உங்க போல ஏகப்பட்ட ஆத்திரத்தோட இருக்காங்க. ஆனால் அவங்களோட மிரட்டலுக்கு எல்லாம் பயப்படாமே நீங்க துணிச்சலா இருக்கிறது எனக்கு ரொம்பவும் பிடிச்சிருக்கு சார்! இந்த விபத்துல போலீஸ் ஏன் இவ்வளவு அக்கறை காட்டறாங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?

நிச்சயமா இதுல பெரிய புள்ளி ஒருத்தர் சம்பந்தப்பட்டிருக்கார்.

பெரிய புள்ளின்னா யார்? மந்திரியா?

அந்த விவரம் எனக்கு இன்னும் தெரியலை. ஆனால் நவீன்ராஜுக்கு தெரியும்.

நீங்க அவர்கிட்டே கேட்கலையா சார்?

கேட்டேன். ஆனால் அவர் சொல்லலை. எந்தக் கேசானாலும் என்னிடம் எல்லாவற்றையும் சொல்கிறவர் இந்தக் கேசில் மட்டும் மவுனமா இருக்கார். போலீஸ் துப்பிரண்டை அடிக்கடி சந்திச்சு பேசறார். அவர் சொல்கிறபடி இவர் ஆடறார். என்னையும் ஆடச் சொல்றார். ஆனால் எனக்குப் பிடிக்கலை. இப்பக்கூட என்னை எதுக்காக இங்க அனுப்பிச்சு வெச்சிருக்கார் தெரியுமா? உங்களை மிரட்டறதுக்காகத்தான். நீங்க அந்த விபத்தைப் பற்றி பிரசுரிச்ச செய்தியும், மோகனின் போட்டோவும் நவீன் ராஜுக்கு அவ்வளவு ஆத்திரமா இருக்கு. நீங்க நாளைக்கு வர்ற பேப்பர்ல திருத்தம் மட்டும் போடாமல் இருந்தால் அவர் ருத்ரதாண்டவமே ஆடிடுவார்.

ஜவகர் சிரித்தான். அவர் ருத்ரதாண்டவம் ஆடறதை நான் பார்க்கணும், சார். என்னோட பேப்பர்ல நாளைக்கு திருத்தம் வராது. பத்திரிகைகளை ஒடுக்க நினைக்கிற எந்த அரசாங்கமும் உருப்பட்டதில்லை சார். என்ன ஆனாலும் சரி. இந்த விஷயத்துல நான் ஒரு கை பார்த்துடறதா இருக்கேன். அதுக்கு நீங்களும் உதவணும் சார்.

அதுக்குத்தானே நான் வந்திருக்கேன். என் உடம்புல போலீஸ் யூனிபார்ம் இருந்தாலும் நான் உங்க பக்கம்தான். அதாவது நியாயத்தின் பக்கம். குற்றவாளி யாராயிருந்தாலும் சரி, அவன் குபேரனோ, குலேசனோ, பெரிய புள்ளியோ, சின்ன புள்ளியோ, தப்பு பண்ணியிருந்தா அவன் தண்டனையை அனுபவிச்சேயாகணும்.

மிஸ்டர் ஆனந்த்! நீங்க எந்த வகையில் எனக்கு உதவ முடியுமின்னு நினைக்கறீங்க?

கல்யாணம் முடிஞ்சு ஒரு வார காலமே ஆன அந்த அழகான தம்பதிகள் மேல் காரை ஏத்தின பெரிய மனிதன் யார் என்கிறதை இன்னும் இரண்டொரு நாள்ல கண்டுபிடிச்சு உங்களுக்கு சொல்றேன். நீங்க அதை உங்க பத்திரிகையில வெளிச்சம் போட்டு எல்லோருக்கும் அடையாளம் காட்டணும்.

கண்டிப்பா.

நான்தான் உங்களுக்கு இந்த உதவியைப்



பண்ணினேன்னு எந்தக் காலத்திலேயும் யார்கிட்டேயும் சொல்லக் கூடாது.

உயிர் போனாலும் சொல்ல மாட்டேன் சார்.

எனக்கு ஏதாவது தகவல் தரணும்னா, போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணாதீங்க. நான் நேற்றைக்குக் கொடுத்த டெலிபோன் நம்பருக்குப் போன் பண்ணுங்க. அந்த நம்பர்ல திவாகர்னு என் நண்பன் ஒருத்தன் இருப்பான். அவன்கிட்ட தகவல் சொன்னா போதும். அவன் எனக்கு தகவல் கொடுத்துடுவான்.

சார், இந்த விபத்து சம்பந்தமா நானும் வைபவியும் சில தகவல்களை சேகரிச்சிருக்கோம். அதை உங்கக்கிட்ட சொல்லலாமா?

என்ன தகவல்கள்?

மோகன் — சாந்தா மேல மோதினது ஒரு நீல நிறக்கார்.

ஆனந்த் ஆச்சரியப்பட்டார்.

அப்படியா? எப்படி கண்டுபிடிச்சீங்க?

விபத்து நடந்த இடத்திலிருந்த ஒரு கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டியோட உடம்பை அந்தக் கார் உரசிகிட்டு போயிருக்கு. அந்த தொட்டியின் பக்கவாட்டில் நீலப் பெயிண்டு கீறல் இருந்ததைப் பார்த்தோம்.

அதனால மோதினது ஒரு நீல நிறக்கார்.

ஆமா.

சரி, அப்புறமென்ன தகவல்?

விபத்து நடந்த அன்னிக்கு ராத்திரி மோகன் இறந்ததும், பிணக்கிடங்கில் இருந்த அவனை போட்டோ எடுக்கறதுக்காக நானும் வைபவியும் ஆஸ்பத்திரியின் பின் பக்கம் போனோம். வைபவியை ரோட்டுல நிக்க வெச்சுட்டு நான் மட்டும் உள்ளே போனேன். அந்த சமயத்தில் ஆஸ்பத்திரியின் பின் பக்க வழியிலிருந்து ஒரு வேன் வெளியே வந்ததை வைபவி பார்த்திருக்கா. அது ஒரு மெட்டாடர் வேன், பதிவு என். டிஎம்வி 6734.

அந்த வேன் மேலே சந்தேகம் வரக் காரணம்?

பொதுவா ஆஸ்பத்திரியோட பின்பக்க வழியா எந்த விதமான தனியார் வாகனங்களும் உள்ளே போகவோ, வெளியே வரவோ அனுமதியில்லை சார். இந்த வேன் மட்டும் எப்படி வெளியே வரமுடியும்?

நல்ல பாயிண்ட்! அந்த வேனோட நெம்பர் என்னான்னுச் சொன்னீங்க?

டிஎம்வி. 6734.

பார்ட்டி யார் என்கிறதைக் கண்டுபிடிச்சுட்டீங்களா?

இனிமேத்தான் ஆர்.டி.ஓ. ஆபீசுக்கு போகணும்.

யாருக்கும் சந்தேகம் வராத மாதிரி விசாரிங்க. ஜவகர் நான் அந்த நீலக்கார் எந்த பெரிய மனிதன் வீட்ல இருக்கு என்கிறதை மோப்பம் பிடிச்சு தகவல் சொல்றேன். கிளம்பட்டுமா? ஆனந்த் எழுந்து தொப்பியை பொருத்திக் கொண்டார்.

உங்க உதவிக்கு ரொம்ப நன்றி சார்.

ஆனந்த் சிரித்தார். உண்மையான போலீஸ் நீங்கதான் ஜவகர். நான் யூனிபார்ம் போட்டிருக்கேன். நீங்க போடல. அவ்வளவுதான் வித்தியாசம். நாட்டில் இருக்கிற எல்லா பத்திரிகைக்காரர்களும் உங்க மாதிரியே இருந்துட்டா போலீஸ் டிப்பார்ட்மெண்ட்டுக்கு வேலையே இல்லாம போயிடும். நான் வரட்டுமா? நல்ல தகவல்களோடு மறுபடியும் சந்திக்கிறேன்.

ஆனந்த வெளியே வந்து—

பைக்கில் புறப்பட்டுப் போனதும், வைபவி ஜவகரிடம் நோட்டுக்கும், பேனாவுமாய் வந்தாள்.

ஜவகர் நாளைய பேப்பர்ல இந்த விபத்து செய்தி எப்படி போடப் போறோம். டிஎஸ்பியும் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜூம், திருத்தம் வெளியிட்டு மன்னிப்புக் கேட்கச் சொல்லியிருக்காங்களே?

ஜவகர் புன்னகைத்தான்.

எழுதிக்கோ நாளைக்கு போஸ்டரிலும் பேப்பரிலும் இதுதான் தலைப்புச் செய்தி.

கவிதா நகர் கார் விபத்து!

நடந்த விபத்தை மறைக்க காவல்துறை முயற்சி.

பத்திரிகை ஆசிரியர் மிரட்டப்படுகிறார்.

இதன் பின்னணியில் இருக்கும் பெரிய புள்ளி யார்?

எழுத முடியாமல் வைபவியின் கையிலிருந்த பேனா நடுங்கியது.

என்ன வைபவி கை நடுங்குது?

எனக்கு பயமாயிருக்கு ஜவகர்.

பயமா? நம்ம கையில் இருக்கிற பேனா முனைக்கு அவங்கதான் பயப்படணும். எழுது! நாளைக்கு பத்தாயிரம் பிரதிகள் அதிகமா அச்சாகணும். சொல்லிவிட்டுச் சிரித்தான் ஜவகர்.



# 10

மதியம் ஒரு மணி. வெய்யில் தலைக்குமேல் அாசியல்வாதியின் பேச்சு மாதிரி ஆர்ப்பாட்டமாய் இருந்தது.

ஆர்.டி.ஓ. ஆபீசுக்குள் காம்பவுண்டு சுவரோரமாய் செழித்து வளர்ந்திருந்த பூவரசு மரத்துக்குக் கீழே ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டுவிட்டு கீழே இறங்கினான் ஜவகர்.

லைசென்ஸை புதுப்பிப்பதற்காகவும், புதிதாய் வாங்குவதற்காகவும் — லாரி, பஸ்கள் பக்கத்து காலி மைதானங்களில் நின்றிருந்தன.

ஜவகர் ஹெல்மெட்டை ஒரு கையால் ஏந்திக்கொண்டு அலுவலக வராந்தாவில் நடந்து விசாரணைக் கவுண்டரை அடைந்தான். விசாரணைக் கவுண்டருக்குள் உட்கார்ந்து பாக்கெட் நாவல்நேரம் நாவலை சுவாரசியமாய் படித்துக் கொண்டிருந்த அந்தப் பெண் நிமிர்ந்தாள். சுகாசினி முகச்சாயல்.

எஸ். என்றாள்—

ஒரு தகவல் வேணும்?

என்ன தகவல்?

டி.எம்.வி. 6734 பதிவு எண் யாரோடதுன்னு தெரியணும்.

நீங்க யாரு?

நான் ஒரு பத்திரிக்கை ஆசிரியர்.

என்ன பத்திரிக்கை.

பூகம்பம்.

நெற்றியைச் சுருக்கினாள்.

அந்த குறிப்பிட்ட பதிவு எண்ணைப் பற்றி எதுக்காக விசாரிக்கறீங்க?

அந்தப் பதிவு எண்ணுள்ள பெட்டாடர் வேனை நான் விலைக்கு வாங்கப் போகிறேன். ஆனால், அதனோட பதிவு நெம்பர்ல எனக்கொரு சந்தேகம். அதை கிளியர் பண்ணிக்கத்தான் வந்தேன்.

என்ன நெம்பர் சொன்னீங்க.

டிஎம்வி. 6734.

ஒரு ஐந்து நிமிடம் அப்படியே உட்காருங்க. சொல்லிவிட்டு அந்தப் பெண் உள்ளே எழுந்துப் போனாள்.

ஜவகர் அங்கிருந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்து முழுதாய்ப் பத்து நிமிடங்களைப் போக்கியிருந்த போது அந்த பெண் உள்ளிருந்து வந்தாள்.

சார், இப்படி வாறீங்களா?

ஜவகர் எழுந்து அவளை நெருங்கினான்.

என்ன? பார்த்துட்டீங்களா?

கண்காணிப்பு அதிகாரி உள்ளே இருக்கார். அவர் உங்ககூட பேசணுமாம். போய் பாருங்க. பக்கத்து அறையைக் காட்டினாள் அவள். மறுபடியும் பாக்கெட் நாவலைக் கையிலெடுத்துக் கொண்டு, ராஜேஷ்குமாரின் நாவலுக்குள் மூழ்கிவிட்டாள்.

ஜவகர் பக்கத்து அறைக்குள் நுழைந்தான். லெட்ஜர் ஒன்றை பரப்பி வைத்துக் கொண்டு மூக்கின் நுனியில் கண்ணாடி ஊசலாட உட்கார்ந்திருந்த அந்த முன் வழுக்கை மனிதர் நிமிர்ந்தார். வாங்கோ, உட்காருங்கோ?

ஜவகர் உட்கார்ந்தான்.

என்னமோ தகவல் கேட்டீங்களாம்....

ஆமா டிஎம்வி. 6734.

அவன் பேசப் பேச, அவர் கையமர்த்தி விட்டு சொன்னார். தெரியும் பார்த்துட்டேன். ஆனால் நீங்க சொன்ன மாதிரி இந்த நெம்பர் ஒரு மெட்டாடர் வேனுக்கு இல்லை.

பின்னே?

ஒரு டூ விலர் வாகனத்துக்கு அதாவது மோட்டார் சைக்கிளுக்குக் கொடுத்திருக்கு.

ஜவகர் திடுக்கிட்டான்.

நல்லா பாருங்க சார்.

பார்த்தாச்சு! அந்த மெட்டாடர் வேனை வெச்சுக்கிட்டுருக்கிற ஆள் யார்னு சொல்லுங்க. வண்டியையும், ஆளையும் அரை மணி நேரத்துல கொண்டு வந்துடலாம்.

அந்த ஆள் யார்ன்னு எனக்குத் தெரியாது.

அந்த மெட்டாடர் வேனை விலைக்கு வாங்கப் போறதா சொன்னீங்களாம்.

பொய் சொன்னேன் சார், சாரி.

சாரியா? இப்படி நீங்க விசாரிச்சது தப்பு தெரியுமா. போலீசைக் கூப்பிட்டு என்னால் புகார் கொடுக்க முடியும். அவர் கண்ணாடியைச் சுழற்றிக் கொண்டு கத்த, ஜவகர் தன் சட்டைப் பையிலிருந்த மணிபர்சை எடுத்து நூறு ரூபாய் நோட்டொன்றை உருவி, அவர் கையில் வைத்தான்.

போதுமா சார்?

அவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு – சரக்கென்று மேசை டிராயரைத் திறந்துஅந்த நோட்டை உள்ளே தள்ளினார், புன்னகைத்தார்.



டீ சாப்பிடுறீங்களா?

வேண்டாம். உண்மையா டிஎம்வி. 6734 பதிவு எண் உள்ள அந்த மோட்டார் சைக்கிள் காரனின் அட்ரஸ் மட்டும் வேணும்.

தர்றேன்! நோட் பண்ணிக்குங்க. கே. தண்டபாணி, நெம்பர் எட்டு, நல்லதம்பி ஆசாரி தெரு, குனியமுத்தூர்.

குறித்துக் கொண்டு எழுந்தான் ஜவகர். கண்காணிப்பு அதிகாரி குழைந்தார். நீங்க எப்ப வேணுமின்னாலும் இங்கே வரலாம் சார். உங்க மாதிரியானவங்களுக்கு சேவை செய்யத்தானே நாங்க இருக்கோம்.

குனியமுத்தூரில் இருந்த நல்லதம்பி ஆசாரித் தெருவைச் சேர்ந்தபோது, மத்தியானம் நான்கு மணி வீட்டிற்கு முன் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் அப்பா யாரோ வர்றாங்க என்று குரல் கொடுக்க உள்ளேயிருந்த அந்த நடுத்தர வயது மனிதர் கையில் பேப்பரோடு எட்டிப் பார்த்தார்.

யார் வேணும்?

இங்கே தண்டபாணின்னு...

நான்தான், நீங்க யாரு?

ஜவகர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

உள்ளே வாங்க – அவர் வரவேற்று, நாற்காலியை எடுத்துப் போட்டார். ஜவகர் உட்கார்ந்ததும் கேட்டார்.

என்ன விஷயம்?

டிஎம்வி. 6734 உங்க வண்டி நெம்பர்தானே?

ஆமாம்.

என்ன வண்டி வெச்சிருக்கீங்க?

சுவேகா மொபட் என்றவர் சிரித்தார். நீங்க எதுக்காக வந்திருக்கீங்க என்கிறதை புரிஞ்சிகிட்டேன். ஆறு மாதத்துக்கு முன்னாடி என்னோட வண்டி, லாரியோடு மோதி விபத்துக்குள்ளானதை விசாரிக்கத்தானே வந்திருக்கீங்க.

ஜவகர் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

உங்க வண்டி ஆறு மாதத்துக்கு முன்னாடி விபத்துக்குள்ளாச்சா?

ஆமா! அதோ பாருங்க வீட்டின் மூலையைச் சுட்டிக் காட்டினார் அவர். ஜவகர் பார்த்தான். ஒரு சாக்கு மூட்டையில் மொபட்டின் உறுப்புகள் கட்டி வைக்கப்பட்டிருந்தது. சக்கரங்கள் வெளியே தெரிந்தன.

வண்டி வாங்கியும் பயன் இல்லை. ஐயாயிரம் நஷ்டம். விபத்துல எனக்கு கை எலும்பு முறிஞ்சு இப்பத்தான் குணமாச்சு.

ஜவகர் கேட்டான்.

உங்க நம்பர்கள்ல யாராவது மெட்டாடர் வேன் வெச்சிருக்காங்களா?

ஏன் கேக்கறீங்க?

உங்க ரெஜிஸ்ட்ரேஷன் நம்பரை ஒரு மெட்டாடர் வேன்ல பார்த்தேன். இது சம்பந்தமா உங்களை விசாரிச்சுட்டு போகத்தான் வந்தேன்.

என்னோட வண்டி நம்பரை உபயோகப்படுத் தறாங்களா? யார் சார் அவங்க?

அவங்க யார்னு நீங்கதான் சொல்லணும்.

தண்டபாணி யோசிக்க ஆரம்பித்தார்.

ராத்திரி மணி பத்து. பூகம்பம் பத்திரிகை அலுவலகம்.

வெளியூர்களுக்கு போக வேண்டிய பத்திரிகை பண்டல்களாக மாறிக்கொண்டிருக்க ஆசிரியர் பகுதி கண்ணாடித் தடுப்பு அறைக்குள் — வைபவி, கீதா, ஜவகர் உட்கார்ந்து டெலிவரி சிலிப்புகளை எழுதிக் கொண்டிருந்தார்கள்.

டெலிபோன் அலறியது.

அலோ.

ஜவகர் நான் ஆனந்த் பேசறேன்.

ஜவகர் நிமிர்ந்தான்.

என்ன விஷயம் சார்.

மத்தியானத்திலிருந்து ராத்திரி எட்டு மணி வரைக்கும் எங்கே போயிருந்தீங்க? டெலிபோன் பண்ணும் போதெல்லாம் இல்லே இல்லேன்னு சொல்லிட்டிருந்தாங்க.

அந்த டிஎம்வி 6734 ஐப் பற்றி விசாரிக்கப் போயிருந்தேன் சார்.

ஏதாவது உபயோகமான தகவல்?

ஊகூம். விபத்துக்குள்ளான ஒரு மொபட் வண்டியோட நம்பர்தான் அந்த டிஎம்வி 6734. வண்டியோட சொந்தக்காரர் பேரு தண்ட பாணி. குனியமுத்தூர்ல இருக்கார். அவரைச் விசாரிக்கப் பார்த்தேன். மெட்டாடர் வேன் வெச்சுக்கிட்டிருக்கிற நண்பர்களே அவருக்கு கிடையாதாம்.

சரி! அப்புறம் எங்கே போனீங்க?

சிட்டியில் இருக்கிற நாலைஞ்சு பெரிய ஒர்க்ஷாப்களுக்குப் போய், அந்த நீலக்கார் வந்திருக்கான்னு வேவு பார்த்தேன்.

என்னாச்சு?

ஸ்கூட்டர் பெட்ரோல் வீணானதுதான் மிச்சம்.



ஜவகர்! அந்த நீலக்காரை நான் மோப்பம் பிடிச்சுட்டேன்.

அப்படியா? யாரோட கார் சார் அது?

சொல்றேன்! நாம நேர்ல நிறைய பேச வேண்டியிருக்கு.

இங்கே வர்றீங்களா சார்?

பத்திரிகை ஆபீசுக்கு வேண்டாம். ஓட்டல் டிராகன் தெரியுமா உங்களுக்கு?

தெரியும். திறந்த வெளி ஓட்டல். ஊருக்கு வெளியே தாமு நகரில் இருக்கிறது.

கரெக்ட்! இன்னும் ஒரு மணி நேரம் கழிந்து அங்கே வாங்க, உங்களுக்காக நான் காத்திருக்கிறேன்.

சரியா பதினொரு மணிக்கு வந்துடறேன்.

வரும்போது யாரையும் கூட்டிகிட்டு வராதீங்க. நீங்க மட்டும் தனியா வாங்க.

சரி சார். ஜவகர் ரிசீவரை வைத்துவிட்டு, தன் மணிக்கட்டில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் 10.05 இன்னும் முழுதாய் ஐம்பத்தைந்து நிமிடம்.

போன்ல யாரண்ணா?

சப்-இன்ஸ்பெக்டர் ஆனந்த். மோகன்—சாந்தா மேல மோதின அந்த நீலக் காரைப் பத்தி ஏதோ தகவல் கிடைச்சிருக்காம். என் கூட பேசணுமாம். ஓட்டல் டிராகனுக்கு வர சொல்லியிருக்கார்.

வைபவி குறுக்கிட்டு கேட்டாள்.

உங்களை மட்டும் தனியா வரச்சொல்லியிருக்கிறாரா?

ஆமா.

ஜவகர்! என் மனசுல பட்டதைச் சொல்லட்டுமா?

சொல்லு.

சப்– இன்ஸ்பெக்டர் ஆனந்த் மேல் எனக்கு முழு நம்பிக்கை வரவில்லை. அவரும் போலீஸ் டிபார்ட்மெண்ட்தான். நமக்கு விசுவாசமா இருப்பாரா?

ஜவகர் சிரித்தான்.

ஆனந்த் மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு. இன்ஸ்பெக்டர் நவீன்ராஜை நாம சமாளிக்கணும்னா ஆனந்தை நம்பித்தான் ஆகணும்.

ஓட்டல் டிராகன்.

திறந்த புல்வெளியில் — ஆங்காங்கே குட்டையான மரங்கள், எரியும் வண்ண மின்சார பல்புகளில் மொய்த்துத் தெரிய — மரத்துக்கு கீழே — வட்ட மேசைகள். சுற்றிலும் குஷன் நாற்காலிகள். பெரும்பாலான மேசைகளில் காற்று

மட்டும் உட்கார்ந்திருக்க சொற்பமாய் மக்கள் கூட்டம். வெள்ளை உடுப்பு பணியாளர்கள் மேசைகளுக்கு மத்தியில் – மெதுமெதுவாய் நகர்ந்து கொண்டிருந்தார்கள். பக்கத்தில் டிராகனின் ஐந்து மாடிக் கட்டிடம் நின்றிருந்தது.

ஜவகர் ஸ்கூட்டரை பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு மெலிதான வெளிச்சம் பரவியிருந்த புல்வெளியில் நடக்க ஆரம்பித்தான். பார்வை தாவியது.

ஆனந்த் எங்கே உட்கார்ந்திருக்கிறார்? ஜவகர் ஒவ்வொரு மேஜையாய் பார்த்துக் கொண்டே போனான். ஓர் ஐந்து நிமிட நடைக்குப் பின் ஏறக்குறைய புல்வெளியின்கடைசியில் – கடைசி மேசையில்–

ஆனந்த் தெரிந்தார். வெள்ளை பேண்ட் வெள்ளை சர்ட். கால் மேல் போட்டபடி நாற்காலிக்கு சாய்ந்து உட்கார்ந்திருந்தார். உதட்டில் இருக்கும் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

ஜவகர் அவரை நெருங்கினான்.

அலோ சார்... ரொம்பவும் கடைசியில் வந்து உட்கார்ந்துட்டீங்களே? கண்டு பிடிக்க நிறைய சிரமப்பட்டேன். – சொல்லிக்கொண்டே அவருக்கு எதிரே உட்கார்ந்தான்.

ஆனந்த் ஒன்றும் பேசாமல் அவரையே பார்க்க திடுக்கிட்ட ஜவகர் – சார் என்றபடி தொட்டான்.

ஆனந்த ஒரு பக்கமாய் சரிந்தார் – உயிரில்லாமல்.

## 11

ஓட்டல் டிராகனின் பிரமாண்டமான பரப்பு முழுவதும் குண்டூசி போட்டால் சத்தம் கேட்கக் கூடிய அளவுக்கு நிசப்தம். சாப்பிட வந்திருந்த அனைவரும் – நாற்காலிகளை விட்டு எழுந்து ஓர் ஓரமாய் பீதியோடு ஒதுங்கியிருந்தார்கள். போலீஸ் வேனும் ஜீப்பும் ஓட்டல் போர்டிகோவுக்குள் அடைக்கலமாயிருக்க அதன் உள்ளேயிருந்த வயர்லெஸ் கருவியில் மழை பெய்கிற மாதிரி சத்தம் வந்து கொண்டிருந்தது. போலீஸ் யூனிபார்ம்கள் அங்கும் இங்குமாக அலைந்தனர்.

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்தின் உடலை புல்வெளியில் உருண்டை விளக்கின் வெளிச்சத்தில் மல்லாத்தி போட்டிருந்தார்கள். பாரன்சிக் பிரிவைச் சேர்ந்த போட்டோ கிராபர்கள் காமிராக்களை இயக்கிக் கொண்டிருக்க – இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ். ஜவகரை கொஞ்சம் தள்ளி விசாரித்துக் கொண்டிருந்தார். குரலில் ஏராளமான எரிச்சல்.



ஆத்திரம். கோபம்.

ஆனந்த்தான் உனக்கு போன் பண்ணி வரச் சொன்னார்.

ஆமா சார்...

போன்ல கேட்டது அவரோட குரல்தானா?

அவரோட குரல்தான்.

நீ இந்த ஓட்டலுக்கு வரும்போது எத்தனை மணி?

பதினொரு மணி சார்.

ஆனந்த் இருந்த மேசைக்கு வரும்போது பக்கத்துல யாராவது நின்னுகிட்டிருந்தாங்களா?

இல்லை.

ஆனந்த் நாற்காலிக்கு சாய்ந்த மாதிரி உட்கார்ந்திருந்தாரா?

ஆமா.

உதட்டில் சிகரெட் நெருப்போடு இருந்ததா?

ஆமா சார். ஆனந்த் கொலை பண்ணினவங்க அவரை உயிருள்ள ஓர் ஆள்மாதிரி செட்டப் பண்ணிட்டு போயிருக்காங்க.

சரி ஆனந்த் உன்னை எதுக்காக டிராகன் ஓட்டலுக்கு வரச் சொன்னார்.

வடவடவந்து.

சொல்லு கத்தினார் நவீன்ராஜ்.

கவிதா நகர் விபத்தை பற்றி சில உண்மைகளை சொல்லப் போறதா எனக்குப்போன் பண்ணினார்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் முகம் மாறினார்.

உனக்கும் சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்துக்கும் எவ்வளவு நாள் பழக்கம்?

கடந்த மூணு நாளாகத்தான்.

ஆனந்த் இதுக்கு முன்னாடி உன்னை சந்திச்சு பேசியிருக்காரா?

பத்திரிகை ஆபீசுக்கு ஒரு தடவை வந்தார்.

கவிதா நகர் விபத்தைப் பற்றி ஏதாவது சொன்னாரா?

ஒண்ணும் சொல்லலை.

பொய் சொல்லாதே.

உண்மையா அவர் ஒண்ணும் சொல்லலை சார். ஜவகர் உறுதியான குரலில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு கான்ஸ்டபிள் வேக வேகமாய் நவீன்ராஜை நோக்கி வந்து விறைப்பாய் நின்றார். சொன்னார்.

சார் உங்களை டி.எஸ்.பி. கூப்பிடறார்.

நவீன்ராஜ் ஜவகரை நோட்டு நீயும் என்னோட வா

சொல்லிவிட்டு டிஎஸ்பி. நரசிம்மம் இருக்கும் ஜீப்பை நோக்கிப் போனார். ஜீப்பை நெருங்கியதும், முன்சீட்டில் உட்கார்ந்திருந்த நரசிம்மம் தலையை வெளியே நீட்டினார். மீசையை நீவிக் கொண்டே கேட்டார்.

என்ன ஏதாவது உபயோகமான தகவல் கிடைச்சுதா?

இல்ல சார்.

இந்த ஆள்தான் அந்த பத்திரிகை ஆசிரியனா?

ஆமா சார்...

இங்க வா மேன்... இடது ஆட்காட்டி விரலை கொக்கியாக்கிக் கூப்பிட்டார் நரசிம்மம்.

ஜவகர் அவரை நெருங்கினான். அவர் அடிக்குரலில் சன்னமாய் கர்ஜித்தார். அந்தக் கவிதா நகர் விபத்துக் கேஸை விடவே மாட்டியா?

சார்...

மரியாதையா சொல்றேன்... இந்த வினாடியிலிருந்து அந்த விபத்தைப் பத்தி நீ நினைக்கக் கூடாது.

ஜவகர் புன்னகைத்தான்.

என்னடா சிரிக்கிறே?

நான் ஒரு காரியத்துல இறங்கிட்டா — பின்வாங்கற வழக்கம் இல்ல சார்! கவிதா நகர் விபத்தை... சாரி அதை விபத்துன்னு சொல்லக்கூடாது. கொலைன்னுதான் சொல்லணும். அந்தக் கொலையைப் பத்தி இனிமேத்தான் அதிகமாக நினைக்கப் போறேன்.

டிஎஸ்பியிடம் நவீன்ராஜ் குறுக்கிட்டுச் சொன்னார் சார்! இவன் சரியான திமிர் பிடிச்சவன்.

அந்த திமிரை அடக்கிடலாம். கடைவாய்ப் பற்களை அரைத்து கோபமாய் சொல்லிக் கொண்டிருக்கும்போதே—

ஆனந்தின் உடம்பை சோதித்துவிட்டு அந்த அரசாங்க டாக்டர் டி.எஸ்.பியை நெருங்கினார். நரசிம்மம் முகபாவத்தை மாற்றிக் கொண்டார்.

வாங்க டாக்டர்! ஆனந்தோட மரணம் எப்படி நிகழ்ந்திருக்கு?

விஷ ஊசியைப் போட்டு யாரோ கொலை பண்ணியிருக்காங்க. மிகக் கொடிய விஷம்.... ஏதாவது ஒரு சயனைட் வகையாக இருக்கலாம். ஊசி குத்தப்பட்ட அடையாளம் இடது கை தோள்பட்டையில் தெளிவாய்த் தெரியுது.

உடம்பில் எங்கேயாவது கத்திக்குத்து காயம்?

இல்லை. உடம்பின் எந்த இடத்திலும் ஒரு நகக் கீறல் கூட இல்லை. விஷத்தால் சம்பவிக்கப்பட்ட மரணம் இது.

ஆனந்த் எத்தனை மணிக்கு இறந்திருக்கிறார்?

அரை மணி நேரத்திற்கு முன்பு.

நரசிம்மம் நவீன்ராஜிடம் திரும்பினார். ஆனந்த் உட்கார்ந்திருந்த மேசைக்கு யார் சர்வர் என்கிறதை விசாரிச்சீங்களா?

இல்லை சார்.

அந்த சர்வரை பிடிச்சு விசாரிங்க. இல்லேன்னா அந்த சர்வரை இங்கே கூட்டிட்டு வாங்க. நான் விசாரிக்கிறேன்.

நவீன்ராஜ் பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிளுக்கு கண்ணைக் காட்ட, அவர் நகர்ந்துபோய் அந்த நிமிடம் முடிவதற்குள் — வெள்ளை யூனிபார்மில் வியர்த்துப் போயிருந்த ஒரு சர்வரை கூட்டி வந்தார். நரசிம்மம் சர்வரை பக்கத்தில் கூப்பிட்டு நிறுத்திக் கொண்டார்.

உன் பேரென்ன?

முத்துக்குமார் சார்.

செத்துக்கிடந்தவர் மேசைக்கு நீதான் சர்வரா?

ஆமா சார்?

அவர் எத்தனை மணிக்கு ஓட்டலுக்கு வந்தார்?

பத்தேகால் மணியிருக்கும் சார்?

அவர்கூட யாராவது வந்தாங்களா?

இல்லை சார், அவர் மட்டும்தான் தனியா வந்தார்.

ஏதாவது சாப்பிட்டாரா?

ஒன்னும் சாப்பிடலை சார். ஆர்டர் கேட்கப் போனேன் இன்னொருத்தருக்காக வெயிட் பண்றேன். பதினோரு மணிக்கு வான்னு சொன்னார்.

அதுக்கப்புறம் அந்த மேசைக்குப் பக்கத்துல நீ போகவே இல்லையா?

இல்ல சார். ஒரு தடவை மட்டும் என்னைக் கூப்பிட்டு தண்ணீர் கேட்டார். கொண்டுபோய்க் கொடுத்தேன்.

அவர் உட்கார்ந்திருந்த மேசைக்கு யாருமே — வரவில்லையா?

பதினொரு மணிக்கு இவர்தான் வந்தார். சர்வர் ஜவகரைச் சுட்டிக் காட்டினான்.

அவருக்கு முந்தி வேற யாராவது வந்தாங்களா?

நான் கவனிக்கலை சார்...

அதெப்படி கவனிக்காமே இருக்க முடியும்? இறந்தவர் விஷ ஊசியாலே குத்தப்பட்டு இருக்கிறார். யாராவது வந்து அவர் பக்கத்துல உட்கார்ந்து பேசிக்கிட்டேதான் அந்த ஊசியைப் போட்டிருக்க முடியும்.

சர்வர் இன்னமும் அதிகமாய் வியர்த்துக் கொண்டே சொன்னான். சர் நான் பரிமாறுகிற இந்த மேசைக்கும் சமையலறைக்கும் கிட்டத்தட்ட அம்பது மீட்டர் தூரம் இருக்கும். நான் ஒரு தடவை சமையலறைக்குப் போய் திரும்ப எப்படியும் பத்து நிமிடமாகும். அந்த அவகாசத்துல யாராவது வந்து – அவர் மேசையில் உட்கார்ந்திருக்கலாம்.

பக்கத்தில் நின்றிருந்த ஓட்டல் மேனேஜர் தன் கழுத்து டையை இறுக்கிக் கொண்டே சொன்னார்.

சார் நான் ஒரு யோசனை சொல்லலாமா?

பிளீஸ்.

டாக்டரோட ரிப்போர்ட்படி அவர் அரை மணி நேரத்துக்கு முன்னால் இறந்திருக்கார். அதாவது சம்பவம் அரை மணி நேத்துக்கு முன்னால் நடந்திருக்க வேண்டும். இல்லையா?

ஆமாம்.

குற்றவாளி காரியத்தை முடித்ததும் ஏதாவது ஒரு வாகனத்தில்தான் உடனடியாய்ப் புறப்பட்டுப் போயிருக்கவேண்டும்.

இருக்கலாம்.

எங்கள் ஓட்டலில் கூர்க்கா கையில் இருக்கும் வாகனப் பதிவேட்டைப் பார்த்தால் – அந்த நேரத்துக்கு எந்தெந்த வாகனங்கள் வெளியே போயிருக்கிறதென்று தெரிந்துவிடும்.

நவீன்ராஜ் மலர்ந்தார் – கூர்க்கா எல்லா வாகன நம்பர்களையும் குறித்து வைப்பாரா?

அவருக்கு அதுதான் வேலையே! ஒரு காரோ ஸ்கூட்டரோ உள்ளே வந்தால் உடனடியாய் அதை வாகனப் பதிவேட்டில் குறித்து – வந்த நேரத்தையும் எழுதி வைப்பார். அதே வாகனம் வெளியே புறப்பட்டுப் போகும்போது அந்த நேரத்தையும் குறித்துக் கொள்வார். கடந்த ஓர் ஆண்டு காலமா இந்த வழக்கம் இங்கே இருக்கு சார்.

டி.எஸ்.பி. சொன்னார். மொதல்ல போய் அந்த வாகனப் பதிவேட்டைக் கொண்டு வாங்க. அப்படியே அந்த கூர்க்காவையும் கூட்டிட்டு வாங்க.

ஓட்டல் மானேஜர் சர்வரைப் பார்க்க, சர்வர் கேட்டை நோக்கி ஓடிப்போய் பச்சை யூனிபார்மில் இருந்த அந்த கூர்க்காவை கூட்டிக் கொண்டு வந்தான். கையில் நீளமாய் வாகனப் பதிவேடு.

நவீன்ராஜ், அதை வாங்கிப் பாருங்க...

நவீன்ராஜ் அதை வாங்கி சில விநாடிகளை



செலவழித்துப் பார்த்துவிட்டு சோர்வாய் நிமிர்ந்தார். பத்து இருபத்தஞ்சிலிருந்து பத்து நாற்பத்தஞ்சு வரைக்கும் எந்த வாகனமும் உள்ளே வரலை. அதே மாதிரி வெளியே போகவும் இல்லை சார்.

கூர்க்காவிடம் திரும்பினார் நரசிம்மம்.

பதினோரு மணி வரைக்கும் நீ கேட்லயேதான் இருந்தியா?

ஆமா சார்...

உம் மனசுக்கு சந்தேகம் வர்ற மாதிரி ஏதாவது வாகனம் வெளியே போனதா?

இல்லே சார்.

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் நின்றிருந்த ஜவகர் சட்டென்று குறுக்கிட்டுச் சொன்னான். கொலையாளி நடந்து வந்து இந்த காரியத்தை செய்திருக்கக் கூடாதா சார்?

டி.எஸ்.பி. எரிச்சலாய் அவனைப் பார்த்தார். எல்லாமே உன்னால வந்ததுதான்யா! அந்த கவிதா நகர் கேசை கிளறாதேன்னு சொன்னாக் கேக்கணும்... பெரிய பிடுங்கி மாதிரி... அதை கிளறப் போய்த்தான்...

சார்... ஜவகர் குரலை உயர்த்தினான்.

என்னடா கத்தறே?

நான் ஒரு பத்திரிகை ஆசிரியர். நீங்க எனக்கு மரியாதை தரலைன்னாலும் பரவாயில்லை. பத்திரிகைத் தொழிலுக்கு மரியாதை கொடுங்க. காக்கி யூனிபார்மை மாட்டிகிட்டா போதாது. கண்ணியமா பேசக் கத்துக்கணும். உண்மையான குற்றவாளிகளை ஊருக்கு அடையாளம் காட்டற வேலை போலீசுக்கு மட்டும் சொந்தமில்லை. பத்திரிகைகளுக்கும் உண்டு.

டி.எஸ்.பி. கண்கள் சிவந்தார். வயிறு எக்கிக் கத்தினார்.

நவீன்ராஜ்! இவனை வேனுக்கு கொண்டு போங்க...

நவீன்ராஜ் வேகமாய் வந்து ஜவகரின் புஜத்தைப் பற்றினார். ஜவகர் திமிறினான். என்னை எதுக்காக வேனுக்குக் கொண்டு போறீங்க.

டி.எஸ்.பி. சின்னதாய் புன்னகைத்தார்.

சப்-இன்ஸ்பெக்டர் ஆனந்தை நீதான் கொலை பண்ணியிருக்கணும்னு நான் சந்தேகப்படறேன். சந்தேகத்தின் அடிப்படையிலும், விசாரணைக்காகவும் உன்னைக் கைது பண்ணி லாக்கப்புக்கு கொண்டுபோகப் போகிறோம்.

அதிர்ந்த ஜவகர் முகம் சிவந்தான். எனக்கும் சட்டம்

தெரியும். டிஎஸ்பி. சார். நினைச்ச நேரத்துல நினைச்ச இடத்துல யாரையும் கைது பண்ண முடியாது. அரெஸ்ட் வாரண்ட் வெச்சிருக்கீங்களா.

என்ன கேட்டே?

அரெஸ்ட் வாரண்ட்—

டிஎஸ்பி. நரசிம்மம் ஜீப்பிலிருந்து உண்மையாகவே ஒரு சிம்மம் மாதிரி இறங்கினார். பக்கத்தில் நின்றிருந்த கான்ஸ்டபிளிடம் அந்த உருட்டுத் தடியை வாங்கிக் கொண்டு ஜவகரை நோக்கி நகர்ந்தார்.

## 12

**போ**லீஸ் சூப்பிரெண்ட் நரசிம்மம் ஜவகரை அடிப்பதற்காக லத்தியை உயர்த்திய அதே விநாடி பின்பக்கமிருந்து அந்தக் குரல் கேட்டது. கண்டிப்பான குரல்.

பொறுங்கள் மிஸ்டர் நரசிம்மம்.

உயர்த்திய கையோடு நரசிம்மம் திரும்பினார்.

எஸ்பி. நின்றிருந்தார் — புன்னகையோடு.

சார் — அங்கே இருந்த அத்தனை போலீஸ்களும் விறைத்து சல்யூட் போட்டார்கள். எஸ்பி. இடக் கையால் அந்த சல்யூட்களை வாங்கிக் கொண்டே ஜவகரை நெருங்கினார். கேட்டார்.

நீதானே பூகம்பம் பத்திரிகை ஆசிரியர்.

ஆமா சார்.

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் இந்த ஓட்டலுக்கு உன்னை வரச் சொல்லியிருந்தாரா?

ஜவகர் தலையாட்டினான்.

நீ இங்கே வந்து பார்க்கும்போது அவர் இறந்து கிடந்தார்.

ஆமாம்.

சரி நீ போகலாம்?

சார் இவன்? டிஎஸ்பி. நரசிம்மம் ஏதோ சொல்ல முயல, அவரைக் கையமர்த்தினார் எஸ்.பி. சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் கொலையுண்ட சம்பவத்தோடு இந்த பத்திரிகை ஆசிரியரை சம்பந்தப்படுத்தி பேசுவது சரியில்லை. கேசை வேறு பக்கமிருந்து பாருங்கள் மிஸ்டர் நரசிம்மம்.

எஸ். சார்—

எஸ்பி. ஜவகரை மறுபடியும் ஏறிட்டு நீ போகலாம் என்று சொல்ல ஜவகர் தன்னுடைய ஸ்கூட்டரை நோக்கிப்



னான். ஸ்கூட்டரை விடுவித்து அவன் போனதும் எஸ்பி நரசிம்மத்திடம் திரும்பினார்.

மிஸ்டர் நரசிம்மம். ஒரு பகிரங்கமான இடத்துல ரிகை ஆசிரியர் மேல கையை வைக்கிறது ரொம்பவும்

சார் — அவன்—

தெரியும்... கவிதா நகர் விபத்தைப் பத்தி ஆராய்ச்சி செய்றவன். பத்திரிகையில திருத்தம் த் சொல்லியும் போடாதவன். எனக்கு எல்லாம் ரியும் மிஸ்டர் நரசிம்மம். நாம ஆத்திரப்பட்டு அவன் மேல கையை வெச்சுட்டா பத்திரிகைக்காரங்க எல்லாம் ணா சேர்ந்துடுவாங்க... அப்புறம் விவகாரம் சட்டசபை ரைக்கும் போயிடும்.

சார் நான் ஒண்ணு சொல்லலாமா?

சொல்லுங்க—

சப்- இன்ஸ்பெக்டர் ஆனந்தை யாரோ கொலை ணியிருக்காங்க. இந்த விவகாரத்துல ஜவகரையும் ட்ட வெச்சுட்டா அவனோட திமிர் தன்னால ங்கிவிடும்.

எஸ்பி. குரலைத் தாழ்த்திக் கொண்டார். புலியை க்கிறதுக்குத்தான் வெள்ளாட்டைப் போடணும். வெள்ளாட்டைப் பிடிக்கிறதுக்கு ஒரு பிடி புல்லு போதும். டர் நரசிம்மம்.

சார் நீங்க சொல்றது—

புரியலையா? வாங்க அந்தப் பக்கமா போய் வோம்—

ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு ஜவகர் பதற்றமாய் த்திரிகை ஆபீசுக்குள் நுழைய பேப்பர் கட்டுகளை தொழிலாளர்களின் உதவியோடு சரி பார்த்துக் கொண்டிருந்த வைபவியும் கீதாவும் அவனை நோக்கி ர்வமாய் வந்தார்கள். சுவர்கடிகாரத்தில் நடுநிசி 12.05.

வைபவி கேட்டாள்.

போன காரியம் என்னாச்சுங்க ஜவகர்?

பெருமூச்சொன்றை விட்டபடி நாற்காலியில் தொப் ன்று உட்கார்ந்து தலையைப் பிடித்துக் கொண்டான் ஜவகர். கீதா அவன் தோளைப் பற்றினாள். குழப்பமாய்—

அண்ணா—

சில விநாடிகள் கழித்து — ஜவகர் சிவப்பேறிய விழிகளோடு நிமிர்ந்தான். நமக்கு உதவி செய்ய நினைத்த சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்தை யாரோ தீர்த்துக்

கட்டிட்டாங்க கீதா

வைபவி – கீதா இரண்டு பேரும் அதிர்ந்து போய் நெஞ்சில் கை வைத்துக் கொண்டார்கள். ஜவகர் தொடர்ந்து சொன்னான். போலீஸ் ஸ்டேஷன்லேயே சாந்தாவுக்கு... பண்ண வந்தாங்க.... ஆனால் எஸ்.பி. குறுக்கிட்டு தடுத்துவிட்டார்.

வைபவி ஆத்திரத்தோடு பொரிந்தாள்.

ஆனந்தை போலீஸ்தான் தீர்த்துக் கட்டியிருப்பாங்க. ஆனந்த் நமக்கு உதவப்போறதை போலீஸ் எப்படியோ மோப்பம் பிடிச்சிருக்காங்க.

கீதா கவலையாய் ஏறிட்டாள். அண்ணா! நாளுக்கு நாள் இந்த விவகாரம் பெரிசாயிட்டே போகுது. பேசாம இந்த கவிதா நகர் விபத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வெச்சுடுவோமா?

ஏராளமாய் முகம் சிவந்துபோன ஜவகர் தன் முஷ்டியால் மேசையைக் குத்தினான். என்ன சொன்னே? முற்றுப்புள்ளி வைக்கிறதா? கீதா! இனிமேத்தான் நாம முழுமுரமா இறங்கப்போறோம். போலீஸ் நமக்கு எவ்வளவு முட்டுக்கட்டை போட்டாலும் சரி உயிரைக் கொடுத்தாவது உண்மையான குற்றவாளிகளை இந்த உலகத்துக்கு நாம அடையாளம் காட்டணும்.

அவன் கர்ஜித்த அதே நேரம்.

டெலிபோன் குரைத்தது.

ஜவகர் வியர்வை வழியும் முகத்தோடு ரிசீவரை எடுத்தான்.

அலோ.

மிஸ்டர் ஜவகர் இருக்காரா? ஒரு பெண் குரல் கேட்டது.

நான் ஜவகர்தான் பேசறேன். நீங்க யாரு?

சார் நான் நர்சு ரோசி பேசறேன். பெரிய ஆஸ்பத்திரியிலிருந்துதான் பேசறேன். சாந்தாவுக்கு நினைவு திரும்பினால் உங்களுக்கு தகவல் கொடுக்கச் சொன்னீங்க. அதான் போன் பண்ணினேன்.

ஜவகர் ஆர்வமாய் கேட்டான். சாந்தாவுக்கு நினைவு திரும்பிடுச்சா?

திரும்பிடுச்சு! கண்ணைத் திறந்து மலங்க மலங்க பார்த்திட்டிருக்காங்க வர்றீங்களா?

உடனே புறப்பட்டு வர்றேன்.

ஜவகர் எழுந்து ஹெல்மெட்டை தலையில் கவிழ்த்தபடி வைபவி, கீதாவிடம் விஷயத்தை



சொல்லிவிட்டு புறப்பட்டான்.

ஸ்கூட்டரில் வேகமாகப் பத்து நிமிடப் பயணம்.

ஆஸ்பத்திரியின் இருட்டான வாசலுக்கு முன்னால் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு உள்ளே ஓட நர்ஸ் எதிர்ப்பட்டாள்.

ரோசி!

சீக்கிரம் வார்டுக்கு போங்க மிஸ்டர் ஜவகர் சாந்தாவுக்கு நினைவு திரும்பின விஷயத்தை இன்னும் டாக்டரிடமே சொல்லலை. போலீஸ் வந்து வாக்குமூலம் வாங்கறதுக்கு முன்னாடி – நீங்க போய் சாந்தாகிட்டே பேசுங்க.

தாங்க்யூ ரோசி! இந்த உதவியை நான் என்னிக்குமே மறக்க மாட்டேன்.

நன்றியை அப்புறமா சொல்லிக்கலாம். முதல்ல சாந்தாவைப் போய்ப்பாருங்க.

ஜவகர் ஆஸ்பத்திரி வராந்தாவில் ஏறக்குறைய ஓடி – தீவிர சிகிச்சை பிரிவு வார்டுக்குள் நுழைந்தான். கட்டிலை நெருங்கினான்.

சாந்தா கண் விழித்து –

ஒரு திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சாந்தா

அவள் முகத்துக்கு நேரே குனிந்தான் ஜவகர். அவளின் நெற்றிப் பரப்பு சட்டென்று சுருங்கியது. வறண்டு போயிருந்த உதடுகள் மெல்ல அசைந்தன.

அ–அவர்.. அவருக்கு...?

ஜவகருக்கு – அவள், தன் கணவன் மோகனைப் பற்றிக் கேட்கிறாள் என்பது புரிந்து ஜவகர் அவள் காதருகே இன்னமும் குனிந்தான். உங்க கணவருக்கு ஓர் ஆபத்துமில்லை. லேசான காயங்களோடு தப்பிச்சுகிட்டார். உங்களுக்குத்தான் பலத்த காயம்.

அவள் உதடுகளில் சின்னதாய் ஒரு மகிழ்ச்சிப் புன்னகை அரும்பி அது நிலை கொண்டிருக்கும்போதே ஜவகர் கேட்டான்.

உங்க மேல காரை மோதினது யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?

சாந்தாவின் கண்கள் இடுங்கியது.

தெ– தெ– தெரி–யும்.

யா–ரது–?

அவள் வேகமாய் வாயசைக்க ஆரம்பித்த அதே விநாடி

ஜவகரின் தோள் மேல் இரும்புத்தனமாய் ஒரு கை வந்து விழுந்தது.

திரும்பினான்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜின் கோபமான — வேர்வை முகம் மிகக் கிட்டத்தில் தெரிந்தது. பக்கத்தில் நர்ஸ் ரோசி கைகளைப் பிசைந்தபடி நின்றிருந்தாள்.

ஜவகர் எச்சில் விழுங்கிக்கொண்டு நிமிர்ந்தான்.

சா...சார்...

என்ன போலீசுக்கு தெரியாமே திருட்டு வாக்குமூலம் வாங்கறியா?

ச...சார்...வ...வந்து...

முதல்ல வெளியே போ! உன்னோட பத்திரிகை ஆபீஸ் டெலிபோனல என்ன செய்தி வந்தாலும் சரி... அடுத்த நிமிடமே அந்த செய்தி என் காதுக்கு வந்துடும். போலீசை என்னிக்குமே நீ ஜெயிக்க முடியாது...

ச...சார்... சாந்தாவுக்கு மோதின அந்தக் கார் யாரோடதுன்னு தெரிஞ்சிருக்கு... அவங்களை பேசட்டா உண்மை வெளியே வந்துவிடும்.

வெளியே வர்ற அந்த உண்மையை நான் வாங்கிக்கறேன். நீ மொதல்ல இந்த இடத்தைக் காலி பண்றியா...?

ஜவகர் தயக்கமாய் நின்றிருக்க — நவீன்ராஜ் உறுமினார். சொன்னது காதுல விழலை? இனி என் போலீஸ் புத்தியை காட்டினாத்தான் வெளியே போவியா?

ஜவகர் நகர்ந்து... அறைக்கு வெளிய வர ரோசியும் பின் தொடர்ந்து வந்தாள். சாரி... சார்... இன்ஸ்பெக்டர்... வருவார்ன்னு நான் எதிர்பார்க்கலை.

பரவாயில்லை. இன்னொரு சந்தர்ப்பம் கிடைக்காமலா போயிடும்?

ரோசி நிமிர்ந்தாள். இது மாதிரி இனி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்ன்னு எனக்குத் தோணலை மிஸ்டர் ஜவகர்.

ஏன் அப்படி சொல்றீங்க?

நாளையிலிருந்து ஆஸ்பத்திரி நிர்வாகத்துல ஒரு மாறுதல்.

மாறுதலா? என்ன மாறுதல்?

தலைமை டாக்டர் ஷெட்டிக்கு மாற்றல் உத்தரவு வந்திருக்கு. இந்த விபத்துல கேசில் போலீசோடு அவர் ஒத்துழைக்காததால் வேறு ஊருக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

சாந்தாவுக்கு அந்தக் காரை தெரிந்திருக்கிறது ரோசி. அதில் வந்தவர்களையும் தெரிந்திருக்கிறது. விஷயத்தை



வெளியே சொல்லப்போகும் நேரம் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார்.

ஜவகர் நான் ஒரு யோசனையை சொல்லட்டுமா?

சொல்லுங்க.

சாந்தாவுக்கு எதிரிகள் யாரென்று தெரிந்திருக்கிறது. அந்த உண்மை சாந்தாவின் அம்மாவிற்கும், அப்பாவிற்கும் தெரிந்திருக்கலாமே?

லேசாய் மலர்ந்தான் ஜவகர். சாந்தாவோட அப்பா அம்மா இப்போ எங்கே போயிருக்காங்க.

முருகன் லாட்ஜ்ல ரூம் எடுத்து தங்கியிருக்காங்க. காலையிலே ஏழு மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வருவாங்க. மகள் பக்கத்துல இராத்திரி எட்டு மணி வரைக்கும் இருந்துட்டு லாட்ஜுக்கு போயிடுவாங்க.

அவங்க பேரென்ன?

அப்பா பேரு தேவராஜ். அம்மா பேரு பிரபாவதி.

நான் இப்பவே போய் பார்க்கிறேன்.

ஜவகர் ஓடினான்.

அந்த நள்ளிரவு நேரத்தில் முருகன் லாட்ஜ் வாசலில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு—உள்ளே நுழைந்தவன். பாதி மூடியிருந்த கம்பி கேட்டுக்கு முன்பாக வாட்ச்மேன் நின்று வழிமறித்தான்.

யாரை சார் பார்க்கணும்?

சேலத்திலிருந்து வந்து இங்கே தங்கியிருக்காரே தேவராஜ். அவரைப் பார்க்கணும்.

நீங்க யாரு?

அவங்களுக்கு சொந்தக்காரன்.

என்ன விஷயமா பார்க்க வந்திருக்கீங்க.?

ஆஸ்பத்திரியில இருக்கிற அவரோட பெண்ணைப் பத்திப் பேசணும்.

ரூம் நெம்பர் நாற்பத்தியொண்ணுக்குப் போங்க.

ஜவகர் மாடிப்படிகளில் ஏறி — நாற்பத்தியொண்ணாம் நெம்பர் அறையைத்தொட்டு கதவைத் தட்டினான். த்த் தட்..த்த்த்...

என்னங்க. யாரோ கதவை தட்டறாங்க. ஒரு பெண்ணின் குரலைத் தொடர்ந்து அறை வெளிச்சம் பிடித்துக் கொண்டது.

அடுத்த சில விநாடிகளில் கதவு திறக்கப்பட...

அந்த வயதான மனிதர் தூக்கக் கலக்கமாய் தெரிந்தார்.

யார் வேணும்?

சாந்தாவோட அப்பா நீங்கதானே?

ஆமாம்.

நான் ஒரு பத்திரிகைக்காரன். கவிதா நகர் விபத்தைப் பத்தி உங்கக்கிட்ட கொஞ்சம் பேசணும். நான் உள்ளே வரலா...?

ஜவகர் பேசிக் கொண்டிருக்கும் போதே — சாந்தாவின் அப்பா அறைக்கதவை படீரென அறைந்து சாத்தினார்.

# 13

**அ**றைக் கதவு படீரென்று சாத்தப்பட்டதும் ஒரு விநாடி திகைத்துப்போன ஜவகர் மறுவிநாடியே தன்னை சுதாரித்துக் கொண்டு கதவைத் தட்டினான்.

தட்...தட்...

சார் கதவைத் திறங்க. ஆஸ்பத்திரியில் இருக்கிற உங்க பொண்ணுக்கு இப்பத்தான் நினைவு திரும்பியது. அவங்க கிட்டே பேசிட்டுத்தான் வர்றேன்.

அடுத்த விநாடியே கதவு படீச்சென்று திறந்தது.

எம்பொண்ணுக்கு நினைவு வந்துடுச்சா? ஆர்வம் சிதறும் குரலோடு ஜவகரின் கையைப் பற்றிக் கொண்டார் சாந்தாவின் அப்பா தேவராஜ். அவருடைய முதுகுக்குப் பின்னால் ஒல்லியான உடல்வாகுவோடு நின்றிருந்த சாந்தாவின் அம்மா பிரபாவதி மெல்லிய குரலில் கூப்பிட்டாள்.

உள்ளே வாங்க தம்பி.

ஜவகர் உள்ளே வந்தான்.

எங்க பொண்ணு உங்ககிட்டே என்ன பேசினா?

தன்னோட கணவர் எப்படியிருக்கார்ன்னு கேட்டாங்க. நான் மோகன் இறந்த விஷயத்தை மறைச்சு, அவருக்கு எந்த ஆபத்தும் இல்லை. லேசான காயம்தான்னு சொன்னேன். நான் அப்படிச் சொன்னதும் சந்தோசப்பட்டாங்க.

அ...அப்புறம்?

உங்க ரெண்டு பேர் மேலேயும் காரை மோதினவங்களைப் பத்தி உங்களுக்குத் தெரியுமான்னு கேட்டேன்...

எ...என்ன சொன்னா?

தெரியும்னு சொன்னாங்க! யார் அவங்கன்னு கேட்டேன். எனக்கு பதில் சொல்றதுக்காக வாயைத் திறந்த நேரம் — இன்ஸ்பெக்டர் உள்ளே வந்து என்னை வெளியே துரத்திட்டார்.



தேவராஜ் ஹேங்கரில் தொங்கிக் கொண்டிருந்த சட்டையை எடுத்து அணிந்து கொண்டார். பிரபா! கிளம்பி வா! சாந்தாவை பார்த்துட்டு வந்துடலாம்.

ஜவகர் அவர் எதிரே போய் நின்றான்.

சார்...

என்ன தம்பி?

நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்?

என்ன பேசணும்.

கார்ல வந்து மோதினவங்க யார் என்கிற விஷயம் உங்க மகளுக்கு தெரிஞ்சிருக்கு. என்கிட்டே சொல்லப் போகிற நேரத்தில் இன்ஸ்பெக்டர் வந்து கெடுத்துட்டார். சாந்தாவுக்குத் தெரிஞ்ச உண்மை உங்களுக்கும் தெரிஞ்சிருக்கலாம் என்கிறது என்னோட எண்ணம்.

தேவராஜ் குறுக்கிட்டு கேட்டார்.

அதை நாங்க சொல்லணும்ன்னு நீங்க எதிர் பார்க்கறீங்க?

ஆமா...

தம்பி! உங்க பேர் ஜவகர்தானே?

பூகம்பம் பத்திரிகைக்கு நீங்கதனே ஆசிரியர்?

ஆமா.

நீங்க கேக்கிற எந்தக் கேள்விக்கும் நாங்க பதில் சொல்லக்கூடாது என்பது போலீசோட கட்டளை. நாங்க அவங்க கட்டளையை மீற முடியாத நிலைமையில் இருக்கோம். நீங்க போயிட்டு வாங்க...

ஜவகர் புன்னகைதான்... நீங்க யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை சார். இது ஒரு கொடுமையான விபத்து கல்யாணமான ஏழாவது நாளிலேயே உங்க பொண்ணோட தாலி பறிக்கப் பட்டிருக்கு. இதுக்கு காரணமானவங்க யார் என்கிறதை சட்டத்துக்கு நீங்க அடையாளம் காட்டினாத்தான்.

மன்னிக்கணும் தம்பி! உங்களுக்கு நாங்க எந்தத் தகவலையும் சொல்ல முடியாத ஓர் இக்கட்டான நிலைமையில் இருக்கோம். சொல்லிக் கொண்டே புறப்பட முயன்ற அவர்களை மீண்டும் மறித்த மாதிரி வந்து நின்றான் ஜவகர்.

போலீஸ் மிரட்டலுக்கு நீங்க பயப்பட வேண்டிய அவசியமில்லை சார். நாய், ஓடறவங்களைத் துரத்தற மாதிரி நீங்க கொஞ்சம் துணிச்சலா பேசிப்பாருங்க அவங்க தணிஞ்சுடுவாங்க.

தேவராஜ் தீர்க்கமாய் தலையாட்டினார். பிரபாவதி

கண்களில் நீர் மின்ன சொன்னாள். நடந்து போன விபத்தைப் பற்றி இனிமே பேசி என்ன பயன் தம்பி? அதைப் பத்தி பேசற நினாலேயோ... அந்த விபத்துக்கு காரண மானவங்களை பத்தி சொல்றதினாலேயோ சாந்தாவோட ஜவன் உயிர் பிழைக்க வந்துடப் போறாளா என்ன? உயிரோட இருக்கிற மத்தவங்களுக்கு ஆபத்து வராமே இருக்கணும்னா நாங்க வாயை மூடிக்கிறதுதானே நல்லது?

ஜவகர் திடுக்கிட்டான்.

என்னது? நீங்க வாயைத் திறந்தா மத்தவங்களோட உயிருக்கு ஆபத்தா? நீங்க என்னம்மா சொல்றீங்க?

தேவராஜ் மனைவியை கோபமாய் பார்த்தார். பிரபா நீ எல்லாத்தையும் உளறிடுவே போலிருக்கே?

ஜவகர் தேவராஜை கொஞ்சம் கோபமாய் பார்த்தான். என்ன சார் இது? அநியாயமா இருக்கு. உங்க மருமகளை மேல காரை ஏத்திக் கொன்னவங்க யார்னு தெரிஞ்சிருந்தும்... சொல்லாமே அடம் பிடிக்கிறீங்களே? இது தப்புன்னு உங்க மனசுக்கே படலையா...?

தப்புதான் தம்பி! சில சமயம் நாம சொல்ற உண்மை நமக்கே எமனா மாறும்ன்னு தெரிஞ்ச பின்னாடி அதைச் சொல்லலாமா?

அந்தக் கொலைக்காரப் பாவிகளுக்கு போலீஸ்தான் பக்கபலமாக இருக்காங்கன்னு நினைச்சிட்டிருந்தேன். ஆனால் பாதிக்கப்பட்ட நீங்களே போலீசுக்கு உதவியா...

நாங்க வர்றோம் தம்பி. இனிமேல் எந்த காரணத்துக்காகவும் எங்களை வந்து பார்க்காதீங்க... எங்க வாயால நாங்க எதையும் சொல்ல மாட்டோம்...

சார்... போக முயன்ற அவரை கை நீட்டி மறித்தான் ஜவகர். கம்மிப்போன குரலில் சொன்னான். சார்! இந்த கவிதா நகர் விபத்துக்கு காரணமானவங்களை கண்டு பிடிக்கிறதுக்காக இந்த நாலு நாளா நாய் மாதிரி அலைஞ்சிட்டிருக்கேன். உங்கள் மகள் சாந்தாவை என்னோட தங்கச்சியா நினைக்க அவளுக்கு நேர்ந்துவிட்ட கொடுமையை நினைச்சு துடிச்சிட்டிருக்கேன். போலீஸ் ஒரு பக்கமும், அந்தக் கொலைகாரப் பாவிகள் ஒரு பக்கமும் நின்னுகிட்டு மாறி மாறி என்னை மிரட்டி இந்த விபத்துக் கேசையே மூடி மறைக்க நினைக்கிறாங்க. ஆனா நான் பிடிவாதமா அவங்களை எதிர்த்துகிட்டு கொலையாளி களை கண்டுபிடிக்கிறதுக்காக மும்முரமா இறங்கியிருக்கேன். நீ இந்த கேஸ்ல ஆர்வம் காட்டாதே



காட்டினா உன்னோட கூடப்பிறந்த தங்கச்சி கீதாவின் கற்பு காணாம போயிடும்னு எனக்கு லெட்டர் வந்த பின்னாடியும் நான் அதை பொருட்படுத்தாமே இந்தக் கேஸிலிருந்து பின்வாங்காமே மும்முரமா இறங்கிட்டிருக் கேன். ஆனால் உண்மைகளை தெரிஞ்சிட்டிருக்கிற நீங்க ஊமை மாதிரி நின்னுட்டிருக்கீங்களே? இது நியாயமா சார்?

தம்பி! தேவராஜ் கண்களில் நிறைந்து விட்ட நீரோடு ஜவகரின் தோளைப் பற்றிக் கொண்டார். நான் இப்போ ஊமையாயிருக் கேன்னா அதுக்கு காரணமிருக்கு.

காரணமா? என்ன காரணம்?

சாந்தாவையும் சேர்த்து எங்களுக்கு மூனு பொண்ணுங்க. சாந்தாதான் கடைசி. ரெண்டு மூத்த பொண்ணுகளுக்கு கல்யாணமாகி ஒருத்தி பெங்களூரிலும் இன்னொருத்தி ஐதராபாத்திலும் குடும்பம் நடத்திட்டிருக்காங்க. குழந்தைகளும் இருக்காங்க. நாங்க இங்கே சாந்தாவைப் பற்றின உண்மைகளை வெளியே சொன்னால் அதனோட விளைவுகளை பெங்களூரிலும் ஐதராபாத்திலும் பார்க்க வேண்டிய நிலைமை எங்களுக்கு வந்துவிடும்.

அதாவது சாந்தாவுக்கு நேர்ந்த நிலைமை மத்த உங்க ரெண்டு பொண்ணுகளுக்கும் வந்துடும்னு மிரட்டியிருக்காங்க.

ஆமா.

இதெல்லாம் வெறும் மிரட்டல் சார்.

இல்ல தம்பி... இது வெறும் மிரட்டல் இல்லை. அவங்களாலே எதுவும் செய்ய முடியும். போலீசே அவங்களுக்கு பக்க வாத்தியம் வாசிக்கும்போது ஒரு நடுத்தர குடும்பஸ்தனான நான் என்ன பண்ண முடியும்? என்னோட மத்த ரெண்டு பொண்ணுங்களாவது தாலி பாக்கியத்தோடு இருக்கட்டும்.

பேசிக்கொண்டே தேவராஜ் அறையைப் பூட்டிக் கொண்டு மனைவி பிரபாவதியோடு மாடிப்படிகளில் இறங்க ஜவகர் தொடர்ந்தான்.

சார்... அந்தக் கொலைக்கார பாவி யார்? பெரிய பணக்காரனா?

எனக்குத் தெரியாது தம்பி.

மந்திரியா?

தெரியாது.

போலீஸ்ல இருக்கிற பெரிய அதிகாரி யாராவதா?

தெரியாது.

அவர்கள் வாட்ஜ் விட்டு வெளியே வந்து ரோட்டோரத்தில் காலியாய் நின்ற ஆட்டோவில் ஏறிக் கொள்ள ஜவகர் மேற்கொண்டு எதுவும் கேட்கமுடியாமல் அப்படியே நின்றான்.

மறுநாள் காலைப் பத்து மணி.

மிஷின் பிரிவுக்குப் போய் பத்திரிகைகள் அச்சாவதை பார்த்துவிட்டு தன் நாற்காலிக்கு வந்து உட்கார்ந்தான் ஜவகர். எதிர் நாற்காலிகளில் உட்கார்ந்து கம்போஸ் ஆன மேட்டரைப் பார்த்துத் திருத்திக் கொண்டிருந்தார்கள் வைடலியும் கீதாவும் மேசையின் மேல் மற்ற நாளேடுகள் கும்பலாய் தெரிய அதைப் புரட்டிக்கொண்டு சொன்னார் ஜவகர்.

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் கொலை செய்திக்கு முக்கியத்துவம் வந்துடாதபடிக்கு போலீஸ், பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்திருக்காங்க.

நாம எதிர்பார்த்ததுதானே? வைடலி புன்னகைத்தான்.

கீதா ஜவகரை ஏறிட்டாள்–

அண்ணா! சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் ஒரு துண்டு பேப்பரில் ஒரு டெலிபோன் நெம்பரை குறிச்சுக் கொடுத்து – அந்த நெம்பர்ல அவரைத் தொடர்பு கொள்ளச் சொன்னாரே? அந்த நெம்பர் உங்களுக்கு ஞாபகம் இருக்கா?

குறிச்சு வெச்சிருக்கேன்.

அவரோட நண்பர் பேர்கூட என்னவோ சொன்னார்?

திவாகர்–

ஆமா திவாகர்தான்! அவருக்கு போன் பண்ணி ஆனந்தைப் பற்றி ஏதாவது கேட்டுப் பாருங்களேன்–

நம்ம டெலிபோன்ல இதையெல்லாம் பேசக்கூடாது. கீதா இந்த டெலிபோனுக்கு வர்ற இன்–கம்மிங் கால்களையும் போலீஸ் டேப் பண்றாங்க. அந்த திவாகரை நேர்ல சந்திச்சுதான் பேசணும்.

சாந்தாவோட அப்பா தேவராஜை மறுபடியும் சந்திச்சு பேசிப் பார்த்தா என்னாண்ணா?

அவர் வாயைத் திறப்பார்னு எனக்குத் தோணலை. சாந்தாவோட கதி தன்னுடைய மத்தப் பெண்ணுகளுக்கும் வந்துடக் கூடாதுன்னு பயப்படறார். ஜவகர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டது.

கீதா ஜன்னல் வழியே வாசலை எட்டிப் பார்த்துவிட்டு



சொன்னாள். அண்ணா, அந்த நர்ஸ் ரோசி வர்றா.

ஜவகர், ரோசி எதற்காக வருகிறாள் என்ற நெற்றியைச் சுருக்கி யோசித்துக் கொண்டிருக்கும்போதே அவள் உள்ளே வந்தாள். நர்ஸ் யூனிபார்மை தவிர்த்து ரோஜா வண்ண சேலையை உடம்புக்குக் கொடுத்திருந்தாள்.

வாங்க ரோசி. வரவேற்று நாற்காலியைக் காட்டினான் ஜவகர். அவள் உட்கார்ந்ததும் கேட்டான்.

நேற்றைக்கு ராத்திரி இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் ஆஸ்பத்திரியில எத்தனை மணி வரைக்கும் இருந்தார்?

ஒரு மணி வரைக்கும்.

சாந்தா இப்போ எப்படியிருக்கா?

எனக்குத் தெரியாது.

ஏன், நீங்க ஆஸ்பத்திரிக்கு போகலையா?

நான் இனிமே ஆஸ்பத்திரிக்கு போக முடியாது சார்.

ஏன்?

என்னை சஸ்பெண்ட் பண்ணியிருக்காங்க.

அதிர்ந்து போய் நாற்காலியில இருந்து எழுந்தான் ஜவகர். சஸ்பெண்ட் பண்ணிட்டாங்களா, ஏன்?

நேற்றைக்கு ராத்திரி சாந்தாவுக்கு ஞாபகம் வந்ததும் போலீசுக்கு தகவல் சொல்லாமே உங்களுக்கு தகவல் சொன்ன குற்றத்துக்காக! டாக்டர் ஷெட்டி மாற்றலாகிப் போய் புது டாக்டர் மல்லிக் வந்ததும் இந்த சஸ்பெண்ட் ஆர்டரைக் கொடுத்துட்டாங்க. ஆர்டரை வாங்கிட்டு நேரா உங்களைப் பார்க்கத்தான் வர்றேன்.

சாரி மிஸ் ரோசி. எனக்கு உதவி பண்ணப்போய் உங்க வேலைக்கு ஆபத்து வந்துடுச்சே?

ரோசி சிரித்தாள் மென்மையாக.

எனக்கு இந்த வேலை போனதைப் பற்றி கொஞ்சம் கூட கவலையில்லை சார். என்னோட கவலையெல்லாம் சாந்தாவைப் பற்றித்தான். அவள் நிச்சயமா ஆஸ்பத்திரியிலிருந்து உயிரோடு திரும்பப் போறதில்லை. அவளை எந்த வகையிலாவது தீர்த்துக் கட்டிடுவாங்க. காதும் காதும் வெச்ச மாதிரி நடக்கப் போகிற இந்த அநியாயத்தை நீங்கதான் தடுக்கணும். இதைச் சொல்லிவிட்டுப் போறதுக்காகத்தான் வந்தேன்–

ஜவகர் கவலையில் விழுந்த அதே விநாடி – பத்திரிகை அலுவலக வாசலில் ஜீப் ஒன்று சத்தமில்லாமல் வந்து நின்றது.

# 14

**வா**சலில் போலீஸ் ஜீப் சத்தமில்லாமல் வந்து நின்றபோதிலும், வைபவியின் பார்வையில் அது விழுந்துவிட பதற்றமாய் கத்தினாள்.

ஜவகர்! போலீஸ்.

ஜவகர் வாசலை எட்டிப் பார்த்தான்.

கையில் லத்தியோடு போலீஸ் ஜீப்பில் இருந்து நரசிம்மம் இறங்க, அவரைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ்- இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கினார்கள்.

இதான் அவரோட பத்திரிகை ஆபீசா?

ஆமா சார்...

குருவிக் கூண்டு மாதிரி இத்தினூண்டு இடத்தை வெச்சுகிட்டா இந்த ஆட்டம் போடறான்?

பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தார்கள். ஜவகர் ஒரு மரியாதைக்காக எழுந்து நின்றான். நரசிம்மம் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்.

இந்த ஆபீஸ்ல என்னென்ன பத்திரிகை அச்சாகுது?

ஒரே பத்திரிகைதான் சார்.

வேற எதையும் அச்சிடறதில்லையா?

இல்ல சார்.

இந்த ஊர்ல ஒளிஞ்சுகிட்டிருக்கிற சில தீவிரவாதிகளுக்கும், சமூக விரோத இயக்கங்களுக்கும் நீதான் தூண்டுப் பிரசுரங்கள் அச்சடித்துத் தர்றியாமே உண்மையா?

அப்பட்டமான பொய் சார்.

இது யாரு? கீதாவைக் காட்டி கேட்டார்.

என்னோட தங்கச்சி சார்...

அது? வைபவியைக் காட்டினார்.

என்னோட பார்ட்னர்.

இந்தப் பொண்ணு ரோசி — நர்ஸ் ரோசி. பாவம் உனக்கு உதவப்போய் இருந்த வேலையையும் போக்கிட்டா.

ரோசியைப் பார்த்து உச் கொட்டினார் நரசிம்மம்.

சார்... நீங்க எதுக்காக வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?

கண்டிப்பா... நீ தெரிஞ்சுக்கத்தான் போறே. உன்னோட பத்திரிகை ஆபீஸ்ல மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க?

இருபத்தஞ்சு பேர்.

பூகம்பம் என்கிற ஒரே பத்திரிகை தான் நடத்தறே



ஆமா...

தேச விரோதமான தூண்டுப் பிரசுரங்கள் உன்னோட பத்திரிகை ஆபீஸ்லதான், அச்சடிக்கப்படுவதாக எங்களுக்கு தகவல் வந்திருக்கு.

ஜவகர் சிரித்தான். பலமாய், நரசிம்மம் எரிச்சலாய் கேட்டார்.

என்ன சிரிக்கிறே?

என்னோட அச்சக எந்திரங்களுக்குக் கூட நாட்டுப் பற்று இருக்கும் சார். நான் அந்த மேட்டரை கம்போஸ் பண்ணி கொடுத்தாலும், அது அச்சடிக்காமே அடம் பிடிக்கும்.

நரசிம்மம் நிமிர்ந்தார்...

நவீன்ராஜ்.

சார்.

ஆபீசை முழுசுமா செக் பண்ணுங்க.

எஸ்... சார்...

ஜவகர் முன்னால் வந்தான். வாங்க இன்ஸ்பெக்டர்... நானே ஒவ்வொரு அறையா கூட்டிகிட்டு போய் காட்டறேன். நீங்க எப்படி வேண்டுமானாலும் செக் பண்ணிக்கலாம்.

நவீன்ராஜ் கான்ஸ்டபிள்களோடு ஜவகரை பின் தொடர்ந்து உள்ளே போனார். வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் அங்கங்கே நின்றபடி வேடிக்கை பார்த்தார்கள்.

இது லெட்டர் டைப்ஸ் ரூம் சார். ஜவகர் சொல்ல, அலட்சியமாய் எட்டிப் பார்த்துவிட்டு, எந்திரங்களுக்கு மத்தியில் நடந்தார் நவீன்ராஜ். வழியில் கிடந்த அச்சடிக்கப்பட்ட பேப்பர்களை எடுத்துப் பார்த்தார் சப்-இன்ஸ்பெக்டர் ஆனந்தின் கொலை செய்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்த பக்கத்தைப் பார்த்ததும் எரிச்சலாய் வீசி விட்டு நகர்ந்தார்

இதென்ன ரூம்?

நியூஸ்பிரிண்ட் பேப்பர் குடோன் சார்.

அதைத் திற...

ஜவகர் திறந்துவிட... நவீன்ராஜ் உள்ளே போனார். செய்தித் தாள் அச்சிடுவதற்கான நியூஸ் பிரிண்ட் பேப்பர் பண்டல் பண்டலாய் குவிந்து கிடந்தது.

நியூஸ்பிரிண்ட் கோட்டா உனக்கு இருக்கா?

இருக்கு சார்...

நான் சொல்ற நாலைஞ்சு பண்டல்களைப் பிரிச்சுக்

காட்டு பார்க்கலாம்.

சொல்லுங்க எந்த பண்டலைப் பிரிக்கணும்?

நவீன்ராஜ் கையிலிருந்த லத்தியால் ஒரு பண்டலை தட்டிக் காட்டினார். ஜவகர் அந்த பண்டலை கீழே தள்ளி பிரித்தான் உள்ளே—

எல்லாமே வெள்ளைத் தாள்கள்.

இந்த பண்டலைப் பிரி பார்க்கலாம்.

இன்னொன்றை காட்டினார். ஜவகர் அதையும் பிரித்துக் காட்டினார். வெள்ளைத் தாள்கள் புரண்டன.

சுவரோரமாய் இருந்த மூன்றாவது பண்டலை காட்டினார் நவீன்ராஜ்.

அதைப் பிரி பார்க்கலாம்.

அவர் காட்டின பண்டலை ஜவகர் பிரித்தான்.

பிரிக்கப் பிரிக்கவே அந்த வித்தியாசம் தெரிந்தது வெள்ளைத் தாள்களுக்கு நடுவில்—

கத்தை கத்தையாய் இளஞ்சிவப்பு நிறத்தில் துண்டு பிரசுரங்கள். நவீன்ராஜ் ஒரு சிரிப்போடு நடந்து போய் அந்த பிரசுரங்களில் ஒன்றை எடுத்தார். ஜவகரிடம் நீட்டினார். இதை நீயே படிச்சுப் பார்?

திடுக்கிட்ட ஜவகர் அதை வாங்கி — பார்வையை பிரசுர வரிகளின் மேல் போட்டான். இந்தியாவின் இளைஞர்களே இந்த தேசத்தை நம்பாதீர்கள். இந்த தேசம் உங்களுக்கு வேலை கொடுக்காது. சோறு போடாது இருப்பதற்கு வீட்டைக் கொடுக்காது. சுவாசிக்கும் காற்றுக்கும் குடிக்கும் தண்ணீருக்கும் ரேஷன் முறை கொண்டு வரவும் தயங்காத நாடு. இந்த இந்திய நாட்டில் இனி அகிம்சை முறை உதவாது. ஆயுதமேந்துவோம் அரசியல்வாதிகளையும் ஆட்சித் தலைவர்களையும் நம்பாதீர்கள். ஆயுதங்களை நம்புங்கள். புரட்சி வெடித்தால்தான் இந்த நாட்டில் பூபாளம் பிறக்கும். வெ... இ.ப. இயக்கம்.

ஜவகரின் கண்கள் நிலைகுத்தின.

ச..சார்...

இதுக்கு என்ன பதில் சொல்றே?

சார்... இந்த துண்டுப் பிரசுரங்களெல்லாம் இங்கே எப்படி வந்ததுன்னு எனக்குத் தெரியலை.

என்னது. உனக்கே தெரியலையா? இது உன்னோட பத்திரிகை ஆபீஸ் இது உன்னோட குடோன் ரூம். இந்த பேப்பர்ல பண்டல்ஸ் எல்லாம் உன்னோடது. அந்த பேப்பர் பண்டலுக்குள்ளே இருக்கிற இந்த துண்டுப் பிரசுரங்கள்



மட்டும் உன்னோடது இல்லை. அப்படித்தானே?

ஆமா சார்...

ஜவகர் தலையாட்டிக் கொண்டிருக்கும் போது நரசிம்மம், அந்த அறைக்குள் நுழைந்தார். முகத்தை அப்பாவித்தனமாக வைத்துக் கொண்டு கேட்டார்.

என்ன நவீன்ராஜ், ஏதாவது கிடைச்சுதா?

கிடைச்சுதுசார். கீழே கிடந்த நோட்டீஸ்களை கத்தை கத்தையாக அள்ளி நரசிம்மத்திடம் காட்டினார் நவீன்ராஜ்.

அப்ப... நமக்கு வந்த செய்தி சரியான செய்தி.

ஜவகர் பதற்றப்பட்டு கத்தினான்.

சார்... எனக்குத் தெரியாமே இங்கே என்னமோ நடந்திருக்கு... நான் காலையில வீட்டுக்குப் போயிருந்த நேரத்துல பேப்பர் கம்பெனியிலிருந்து வந்த ஆட்கள் இந்த பண்டல்களை இங்கே கொண்டு வந்து போட்டிருக்காங்க. வந்தது யார் என்கிறதை இப்பவே விசாரிக்க... ஆத்திரமாய் கத்தின் கொண்டே நகர முயன்ற ஜவகரின் மணிக்கட்டை கப்பென்று பற்றினார் நரசிம்மம்.

மாட்டிக்கிட்ட பின்னாடி, உன்னோட நாடகமெல்லாம் உதவாது. ஓட்டல் டிராகன்ல உன்னை கைது பண்ண முயற்சி செஞ்சப்ப வாரண்ட் இருக்கான்னு நீ கேட்டே. இப்போ வாரண்ட்டோட வந்திருக்கோம். துண்டு பிரசுரங்களை தேச விரோத வாக்கியங்களோடு அச்சிட்டு வெளியிட்ட உன்னைக் கைது செய்வதற்கான வாரண்ட். இது போகலாமா ஸ்டேஷனுக்கு?

ஜவகர் குறுக்கிட்டான்.

சார்...நா... நான் சொல்றதைக் கொஞ்சம்...

நீ எதைச் சொல்றதா இருந்தாலும் சரி, ஸ்டேஷனுக்கு வந்து சொல்லிக்கலாம் நவீன்ராஜ்! ஆளை ஜீப்புக்குக் கூட்டிட்டு போங்க.

நவீன்ராஜ் ஜவகரின் தோள்பட்டையைப் பிடித்து வாசலில் நின்றிருந்த ஜீப்புக்குத் தள்ளிக் கொண்டு போனார்.

போலீஸ் ஸ்டேஷன்.

ரெட் ரூம்.

ஜவகரை வெறும் கால் சட்டையோடு நிற்க வைத்து, சுற்றிலும் காக்கி யூனிபார்ம்கள் தெரிந்தார்கள். நரசிம்மமும் நவீன்ராஜும் பிரதானமாய் நின்றிருந்தார்கள். முகங்களில் ஏராள கோபம்.

நரசிம்மம் உறுமினார்.

போலீஸ்ன்னா என்னான்னு இப்ப உனக்கு

புரிஞ்சிருக்குமேடா! இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் எத்தனை தடவை உனக்கு எச்சரிக்கை பண்ணியிருப்பார். அவரோட பேச்சைக் கேட்டிருந்தா உனக்கு இந்த நிலைமை வந்திருக்குமா?

ஜவகர் வீங்கிப் போன உதடுகளோடு அவரையே பார்த்தான். அவர் கையிலிருந்த லத்தியால் ஜவகரின் முகத்தை நிமிர்த்தினார்.

என்னடா முறைக்கிறே? இன்னொரு தடவை மண்டகப்படி நடத்தச் சொல்லட்டுமா? கண்ணைக் காட்டினால் போதும். உன் உடம்புல இருக்கிற இரத்தம் பூராவும் கட்டி கட்டியா உறையற மாதிரி கவனிச்சுடுவாங்க. மரியாதையா நாங்க சொல்றபடி கேட்கிறதாயிருந்தா... உன்னோட உடம்பு உருப்படியா இருக்கும் இல்லே...

சரி! சொல்லுங்க... நா என்ன பண்ணணும்? ஜவகர் கேட்க நரசிம்மம் சொன்னார். கவிதா நகர் விபத்தை நீ கண்டுக்க கூடாது உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கிற முயற்சியில் ஈடுபடக் கூடாது. சாந்தாவோட அப்பா அம்மாவைப்போய் கிளறக் கூடாது.

சரி அப்புறம்?

அவ்வளவுதான்.

நான் இதுக்கெல்லாம் ஒத்துக்கலைன்னா, மறுபடியும் என்னை அடிப்பீங்க?

அடிக்கிறதா தோலை உரிச்சு உப்பைத் தடவிவிடுவோம். அதோடு எங்க ஆத்திரம் அடங்கிடும்னு நினைச்சுடாதே... உன்னோட தங்கச்சி கீதாவையும், உன்னை கட்டிக்கப் போகிற வைடவியையும் ஸ்டேஷனுக்கு கொண்டு வருவோம்.

ஜவகர் சிரித்தான்.

என்னடா சிரிக்கிறே?

உங்க வீரத்தையெல்லாம் காட்டறதுக்கு பொம் பளைங்கதான் இலாயக்கு.

நரசிம்மம் தன் வலுவான புறங்கையை ஜவகரின் முகத்தை நோக்கி வீசி—ர்ர்றப்பென்று அடிக்க—மூக்கு துவாரங்களில் புதிய இரத்தம் பளிச்சென்று எட்டிப் பார்த்தது.

ராஸ்கல்! முடிவா என்னதாண்டா சொல்றே? அந்த கவிதா நகர் கேசை விட்டு விலகமாட்டியா?

மாட்டேன்.

சொல்றதைக் கேள். வீணாக அடிபட்டு சாகாதே...

செத்தாலும் சரி, உண்மையை வெளிச்சத்துக்கு



கொண்டு வராமே விடமாட்டேன்.

நவீன்ராஜ்! அந்த ரப்பர் தடியை எடுங்க.

கவிரோரமாய் இருந்த ரப்பர் தடியை, அவர் எடுத்துக் கொடுத்த விநாடி...

கான்ஸ்டபிள் ஒருவர் அறைக்குள் நுழைந்தார். நரசிம்மத்துக்கு சல்யூட் ஒன்றை விநியோகித்துவிட்டுச் சொன்னார்.

சார்... உங்களுக்கு போன்...

போன்ல யாரு கேன்...

எஸ்.பி. சார்...

நரசிம்மம் பெல்ட்டை இறுக்கிக் கொண்டு — வியர்வை உடலோடு வெளியே வந்து, மேசையின் மேல் மல்லாந்து விழுந்திருந்த ரிசீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

சார்... நான் நரசிம்மம்...

ஜவகர் என்ன சொல்றான்?

அசையமாட்டேங்கிறான் சார்.

அடிச்சீங்களா?

முதல் ரவுண்ட் ஆரம்பிச்சிருக்கேன்,

மூர்க்கமா அடிக்காதீங்க...ஆள் செத்துட்டான்னா பெரிய விவகாரம் ஆயிடும்.

நான் பார்த்துக்கிறேன் சார்.

இன்னும் ரெண்டு மணி நேரத்துல எனக்கு நல்ல பதில் வேணும்.

நானே போன் பண்ணி சொல்றேன் சார்...

# 15

**போ**லீஸ் உதவி துப்பிரண்டு நரசிம்மம் மறுபடியும் லாக்கப்புக்குள் நுழைந்து கான்ஸ்டபிளின் கையிலிருந்த ரப்பர் தடியை வாங்கிக் கொண்டு ஜவகரை நெருங்கினார். கடைவாய்ப் பற்களை அரைத்தபடி உறுமினார்.

வீணாய் அடிப்பட்டு உடம்பை ரணமாக்கிக்காதே...! கவிதா நகர் கேசுல நீ இனிமே தலையிடமாட்டேன்னு சொல்லு. இப்பவே உன்னை சகலவிதமான மரியாதைகளோடு ஜீப்ல ஏத்தி ஆபீசுக்கு அனுப்பி வைக்கிறேன்.

ஜவகர் சோர்ந்த கண்களோடு நரசிம்மத்தை ஏறிட்டு மெல்ல புன்னகைத்தான். அவர் கோபமானார். முகம் தக்காளி நிறத்துக்குப் போயிற்று.

என்னடா சிரிக்கிறே?

பாரதியார் பாடின ஒரு பாட்டு ஞாபகத்துக்கு வந்தது.

பாட்டா...?

ஆமா! தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா... உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலான்னு... பாரதியார் பாடினார். நான் இப்போ தீக்குள்ளே விரலை வெச்சிருக்கேன். ஆனா அந்தத் தீ என்னைச் சுடலை. டி.எஸ்.பி. சார். சுகமாகவே இருக்கு.

ராஸ்கல்...

கையிலிருந்த ரப்பர் தடியை பளீரென்று ஜவகரின் தோள்பட்டை மேல் இறக்கினார் நரசிம்மம்.

அம்மா...

இப்போ எப்படி, சுகமா இருக்கா? – நரசிம்மம் சிவப்பேறி போன கண்களோடு மறுபடியும் ரப்பர் தடியை உயர்த்தி – ஜவகரின் முதுகுக்குக் குறிவைத்தபோது – இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் பின்பக்கமிருந்து குரல் கொடுத்தார்.

சார்...

நரசிம்மம் திரும்பினார்.

என்ன?

உங்களுக்குப் போன்...

ஒருத்தனை ஒழுங்கா விசாரிக்க விடமாட்டாங்களே? நரசிம்மம் ரப்பர் தடியை வீசிவிட்டு பக்கத்து அறைக்கு நடந்துபோய் ரிசீவரை எடுத்தார். எரிச்சலாய்க் கத்தினார்.

அலோ...

நரசிம்மம்...

மறுமுனையில் குரலைக் கேட்டதுமே பவ்யமானார். சார்...

அந்த ஜவகரை லாக்கப்புக்குள்ளே கொண்டு வந்துட்டீங்களாமே?

ஆமா சார்... குரலில் பெருமை கொட்டியது.

மறுமுனை உறுமியது. முட்டாள்தனமான காரியத்தை பண்ணியிருக்கீங்க...

ச...சார்... நரசிம்மம் முகம் மாறினார்.

அவனை மொதல்ல ரிலீஸ் பண்ணுங்க! சின்ன விவகாரத்தை பெரிசு பண்ணிடுவீங்க போலிருக்கே? ஒரு பத்திரிகைக்காரனை லாக்கப்புல போட்டா... மத்த பத்திரிகைகாரர்கள் சும்மா இருப்பாங்களா? தீ பத்திகிட்ட மாதிரி ஊர் பூராவும் தெரிஞ்சுப் போகுமே?

சார்...

உங்களுக்கு யோசனை சொன்னது யாரு?



எஸ்.பி. சார்...

நான் எஸ்.பி. கிட்டே பேசிக்கிறேன். நீங்க மொதல்ல அவனை ரிலீஸ் பண்ணுங்க...

எஸ்... சார்...

அப்புறம் இன்னொரு விஷயம். இனிமே ஜவகர் விவகாரத்தை நானே பார்த்துக்கிறேன். போலீஸ் தலையிட வேண்டாம். ஒரு கொலை அடிக்கச் சொன்னால் ஆளுக்கு ஆள் உலக்கையை தூக்கிக்கிட்டு திரிபுரீங்களோ? சட்! எரிச்சலோடு மறுமுனையில் ரிசீவர் கவிழ்ந்துக் கொண்டது.

நரசிம்மம் வியர்த்துப்போன முகத்தோடு தொப்பியைச் சுழற்றிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு – லாக்கப்புக்கு வந்தார்.

மிஸ்டர் நவீன்ராஜ்...

இன்ஸ்பெக்டர் எதிர்ட்டார்.

அந்த பத்திரிகைகாரனை ரிலீஸ் பண்ணிடுங்க...

ச...சார்... வந்து...வந்து...

மேலிடத்திலிருந்து வந்த ஆர்டர் இது... காரணத்தைக் கேட்டுகிட்டு இருக்காதீங்க... அவனை மொதல்ல வெளியே அனுப்புங்க...

ஜவகர் பத்திரிகை ஆபீசுக்குள் நுழைந்தபோது – உட்கார்ந்திருந்த வைஷ்ணவியைச் சுற்றிலும் ஆபீஸ் ஊழியர்கள் கவலையாய் நின்றார்கள். யாருக்கோ டெலிபோன் செய்து பேச முயற்சி செய்து கொண்டிருந்த வைஷ்ணவி ஜவகரை பார்த்ததும் மலர்ந்தாள்.

ஜவகர் – சந்தோசக் கத்தலோடு ஓடிப்போய் அவனுடைய கையைப் பற்றிக் கொண்டாள். போலீஸ் உங்களை எப்படி விட்டாங்க...?

ஜவகர் தளர்ந்து போய் நாற்காலியில் உட்கார்ந்தான். அதான்... எனக்கும் புரியலை. வைஷ்ணவி என்னை அடிச்சி மிரட்டிக்கிட்டிருந்த டி.எஸ்.பி. நரசிம்மத்துக்கு திடீர்ன்னு யார் கிட்டயிருந்தோ போன் வந்தது. போய் பேசிட்டு வந்தார். வந்ததுமே என்னை ரிலீஸ் பண்ணச் சொல்லி விட்டார்.

வைஷ்ணவி சிரித்தாள்.

எல்லாம் நான் பண்ணின கைங்கர்யம் போலிருக்கே.

உன்னோட கைங்கர்யமா... நீ என்ன சொல்றே வைஷ்ணவி?

உங்களைக் கைது பண்ணிகிட்டு போனதுமே பிரதமருக்கும், முதலமைச்சருக்கும் ஐ.ஜி.க்கும் தந்தி கொடுத்தேன்.

என்னான்னு தந்தி கொடுத்தே...?

போலீஸ் அராஜகம், புதுமலர் பத்திரிகை ஆசிரியர் துன்புறுத்தப்படுகிறார். அரசாண்டப்படி கமத்தி இன்று அவர் கைது. தலையிட்டு நடவடிக்கை எடுங்கள் — இப்படிக்கு பத்திரிகை ஊழியர்கள்.

ஜவகர் புன்னகைத்தான்.

அந்த தந்தியெல்லாம் குப்பைக் கூடைக்குத்தான் போயிருக்கும் வைபவி. பத்திரிகைகளை ஒடுக்கணும் என்கிற எண்ணம் மாநில அரசுக்கு இருக்கு. மத்திய அரசுக்கும் இருக்கு ஒரு பத்திரிகை ஆசிரியனுக்காக எந்த மந்திரியும் பரிஞ்சுகிட்டு வரமாட்டார்... என்னை ரிலீஸ் பண்ணினதுக்கு வேறே ஏதோ காரணம் இருக்கு... ஜவகர் சொல்லிக் கொண்டே சுற்றும் முற்றும் பார்த்தான். தவிப்பாய்க் கேட்டான்.

வைபவி! கீதா எங்கே...?

உங்க தங்கச்சிக்கும் உங்க மாதிரியே துணிச்சல் வந்துடுச்சி...

ஏன் என்ன பண்ணினா?

சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்த் கொலையானது சம்பந்தமா தகவல்களை சேகரிக்கிறதுக்காக அவரோட நண்பர் திவாகரை தேடிப் போயிருக்கா...

இந்த இராத்திரி நேரத்திலா...? நீ எதுக்காக அவளை வெளியே விட்டே...?

சொன்னா கேட்டால்தானே? அந்த திவாகரை சந்திச்சுபேசினா சப்–இன்ஸ்பெக்டர் ஆனந்தை கொலை செஞ்சது யார் என்கிற விபரம் தெரியும்... கவிதா நகர் விபத்து கேசில் விழுந்திருக்கிற முடிச்சுகள் அவிழும்னு சொல்லிட்டு கிளம்பிட்டா... உங்களுக்கேத்த தங்கச்சிதான்... நான் எவ்வளவு சொல்லியும் கேட்கலை.

கீதா புறப்பட்டுப் போய் இப்போ எத்தனை மணி நேரமிருக்கும்...

ஒரு மணி நேரம்...

ஜவகர் கவலையாய் மோவாயைத் தேய்த்தான்.

இருட்டான நால்வர் லே–அவுட்டுக்குள் நுழைந்து சுந்தரா வீதியின் முகப்பிலிருந்து ஒரு பெட்டிக் கடையின் முன்பாக நின்றாள் கீதா. தோளில் நீளமாய் ஒரு ஜோல்னா பை. பெட்டிக் கடைக்காரன் ஆவலாய் எழுந்து கேட்டான்.

என்னம்மா வேணும்...?

இது சுந்தரர் வீதிதானே?

ஆமாம்மா...



இந்த வீதியில் திவாகர்னு யாராவது இருக்காங்களா?

கடைக்காரன் நெற்றியைத் தட்டிக் கொண்டு யோசித்தான். திவாகரா? என்ன வேலை பார்க்கிறார்.

அவர் என்ன வேலை பார்க்கிறார்ன்னு தெரியாது.

ஆள் எப்படி இருப்பார்?

அதுவும் தெரியாது.

என்னம்மா.. நீங்க...? பேரை மாத்திரம் தெரிஞ்சு வெச்சுகிட்டு ஆளை பார்க்க வந்திருக்கீங்க?

என்னோட அண்ணனுக்குத் தெரிஞ்சவர். அவர்தான் இந்த முகவரியைக் கொடுத்தார்.

கொஞ்சம் இருங்கம்மா... இந்த ஏரியாவுக்கு நான் புதுசு. அதனால் திவாகரைப் பத்தி விவரம் தெரியாமே இருக்கு எதிர்த்த பட்டறையில் ஒருத்தர் இருக்கார். அவரை விசாரிச்சுட்டு வர்றேன்.

கடையை விட்டு எழுந்து பட்டறைக்குள் போனவர் சில விநாடிகளுக்குள்ளாகவே ஒரு பதினைந்து வயது சிறுவனோடு வந்தார்.

அம்மா.. இந்த பையனுக்கு நீங்க சொன்ன திவாகரை தெரியுமாம்... வீட்டைக் காட்டுவான் போய் பாருங்க...

ரொம்ப நன்றிங்க... சொல்லிவிட்டுப் பையனோடு நடந்தாள் கீதா. மண் ரோடு. இரண்டு பக்கமும் ஓட்டு வீடுகள். இருட்டில் புதைந்துப் போயிருந்தன.

உன் பேரென்ன தம்பி?

கிருஷ்ணன்.

திவாகரை உனக்குத் தெரியுமா?

தெரியும். சப்–இன்ஸ்பெக்டரோட நண்பர்தானே?

அட...! சப்–இன்ஸ்பெக்டரையும் உனக்குத் தெரியுமா?

இந்த ஏரியாவில் இருக்கிற எல்லாரையும் எனக்குத் தெரியும் பாவம் அந்த சப்–இன்ஸ்பெக்டரைக் கூட கொன்னுட்டாங்களாம். அதைப்பத்தி விசாரிக்கத்தான் வந்தீங்களா?

ஊகூம் அவரை சும்மா பார்க்க வந்தேன்.

ராத்திரியில ஏன் வந்தீங்க...? பகல்ல வந்திருக்கலாமே...

ஏன் இராத்திரியில வரக்கூடாதா?

இந்த ஏரியா கொஞ்சம் மோசமான ஏரியா அதனால்தான் சொன்னேன்.

திவாகர் வீட்டுக்கு ரொம்ப தூரம் போகணுமா?

கொஞ்ச தூரம்தான்... வாங்க.

மண் பாதையில் நூறு மீட்டர் தூரம் நடந்து வாட்டர் டேங்க்குக்கு பக்கத்தில் தெரிந்த ஒரு சந்துக்குள் நுழைந்து

ஒரு வீட்டின் முன்னால் நின்றான் பையன்.

இந்த வீடுதான்...

ரொம்ப தாங்க்ஸ் தம்பி...

கீதா சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்தப் பிரதேசம் முழுவதும் ஆள் நடமாட்டம் அற்றுப் போயிருக்க — கடுமையான நிசப்தம்.

வர்சதப்படி ஏறினாள். வீட்டின் உள்ளே வெளிச்சம் தெரிய — ரேடியோ மெல்ல பாடிக் கொண்டிருந்தது. கதவையும் தட்டினாள்.

டொக்...டொக்...

கதவைத் தட்டியதும் உள்ளே பாட்டுச் சத்தம் நின்றது. தொடர்ந்து யாரோ நடந்து வரும் சத்தம் கேட்டது. கதவு திறக்க காத்திருந்தாள் கீதா.

கதவு திறந்ததும்...

நிமிர்ந்த கீதாவின் முகத்தில் சாராய நாற்றம் குப்பென்று அடித்தது.

## 16

சாராய வாசம் முகத்தில் குப்பென்று பட்டதும் முக்கைச் சுளித்து ஓரடி பின்வாங்கினாள் கீதா. கதவின் நிலைப்படிக்கு சரியாய் உயரமாய் அவன் நின்றிருந்தான். இளைஞன். முப்பது வயதிருக்கலாம். மாநிறம். சுருண்ட முடி. தொப்பைப் போட்ட உடம்பு. இரண்டு கண்களிலும் போதைச் சிவப்பு. உதடுகள் கோணக் கேட்டான்.

யார் வேணும்?

இ-இ- இங்கே திவாகர் என்கிறது?

நான்தான்.

உங்க கூட கொஞ்சம் பேசணும். ஆனால், இப்போ நீங்க இருக்கிற நிலைமை சரியில்லை. நான் நாளைக்கு வர்றேன்... சொல்லிக் கொண்டே போகத் திரும்பினாள் கீதா.

அவன் குரல் கொடுத்தான்.

நில்லு! நான் குடிச்சிருந்தாலும், என்னிக்குமே நிதானம் தவறமாட்டேன். நீ யாரு? எதுக்காக என்னை பார்க்க வந்திருக்கே?

கீதா அவனை ஏறிட்டாள். அவன் குடித்திருந்தாலும் பேச்சில் கண்ணியமும், ஓர் இதமும் இருப்பதை உணர்ந்தாள். அவனை நெருங்கிச் சொன்னாள்.

நான் சப்-இன்ஸ்பெக்டர் ஆனந்த்துக்குத் தெரிஞ்ச பெண்.



திவாகரின் முகத்தில் சட்டென்று ஒரு மாறுதல். உள்ளே வா என்றான்.

கீதா உள்ளே போக அவன் நாற்காலியைக் காட்டிக் கொண்டே கேட்டான். உன் பேரென்ன?

கீதா...

நான் சப்-இன்ஸ்பெக்டர் ஆனந்தை உனக்கு எப்படித் தெரியும்?

என்னோட அண்ணன் ஜவகர் ஒரு பத்திரிகைக்கு ஆசிரியர். கவிதா நகர் விபத்து சம்பந்தமா ஆனந்த் எங்களுக்கு உதவி பண்ணிட்டிருந்தார். ஆனால், திடீரென்று ரெண்டு நாளைக்கு முன்னாடி அவரை யாரோ கொலை பண்ணிட்டாங்க. அது சம்பந்தமா உங்களுக்கு ஏதாவது தகவல் தெரிஞ்சிருக்கலாமோன்னுதான் வந்தேன்.

ஆனந்த்தும், நானும் ஒரே கல்லூரியில் படிச்சோம். கல்லூரி நாட்களிலிருந்து அவன் நியாயம், நீதி, தர்மம்ன்னு பேசிக்கிட்டிருப்பான். ஒவ்வொரு சனிக்கிழமை ராத்திரியும் இங்கே வருவான். ஞாயிற்றுக்கிழமை பூராவும் என் கூட இருப்பான். திங்கட்கிழமை காலையில்தான் வேலைக்குக் கிளம்பிப் போவான். ம்... அவன் கொலையானது நான் எதிர்பார்க்காத ஒன்னு.

ஆனந்த் கொலை விஷயமா போலீஸ் உங்ககிட்டே விசாரணைக்கு வந்தாங்களா?

வந்தாங்க. எதை எதையோ கேட்டு எழுதிக்கிட்டு போனாங்க. எரிச்சலோடு சொன்ன திவாகர் கீதாவிடம் கேட்டான்.

நீ... இப்ப... எதுக்காக வந்திருக்கேன்னு தெரிஞ்சுக்கலாமா?

ஆனந்த் என்னோட அண்ணனுக்கு போன் பண்ணி பேசும்போது, கவிதா நகர் விபத்தில் சம்பந்தப்பட்ட காரைப்பத்தி தனக்குத் தெரியும்னு சொன்னார். அதைச் சொல்றதுக்காகத்தான் ஓட்டல் டிராகனுக்கு வரச் சொன்னார். அதுக்குள்ளே அவரை யாரோ கொலைப் பண்ணிட்டாங்க.

அந்தக் காரைப் பத்தி ஆனந்த் என்கிட்டே ஏதாவது சொன்னானான்னு நீ தெரிஞ்சுக்க விரும்பறே?

ஆமா.

திவாகர் எழுந்து போய் கதவைச் சாத்திவிட்டு வந்தான். குரலைத் தாழ்த்திக் கொண்டான். ஆனந்த் டிராகன் ஓட்டலுக்கு போகும்போது என்கிட்டே ஒரு டெலிபோன் நம்பரைக் கொடுத்து அந்த டெலிபோனுக்கு உரிய நபர்

யார்ன்னு பார்க்கச் சொன்னான். ஆனால் அவன் கொலையானதுமே, என் மனசுக்குள்ளே ஒரு பயம்.

பயமா? என்ன பயம்?

போலீஸ் பயம்தான். கவிதா நகர் விபத்தை மறைக்கப் பைலை குளோஸ் பண்றதுல போலீஸ் தீவிரமா இருக்கிற இந்த நேரத்துல, நான் எதையாவது கிளறப்போக என்னையும் ஆனந்த் இருக்கிற இடத்துக்கே அனுப்பி வைச்சுட்டாங்கன்னா...?

கீதா திவாகரை ஆச்சரியமாய் பார்த்தாள். உங்க நண்பர் ஆனந்த் கொலை செய்யப்பட்டதில் உங்களுக்கு ஆத்திரமோ, கோபமோ வரலையா?

திவாகர் கசப்பாய் சிரித்தான். ஒரு நாள் பூராவும் அந்த ஆத்திரம், கோபம் எல்லாமே இருந்தது. ரெண்டாவது நாள் அதெல்லாம் மறைந்து போய் எம்மனசுக்குள்ளே பயம் நுழைஞ்சுடுச்சு. கவிதா நகர் கேசில் தீவிரம் காட்டின ஓர் இன்ஸ்பெக்டருக்கே இந்தக் கொடூரமான முடிவு என்றால் எனக்கு என்ன நிலைமை ஏற்படும் என்று நீயே நினைத்துப் பார்.

ஓ.கே. திவாகர்! இந்த விவகாரத்துல நீங்க தலையிட வேண்டாம். ஆனந்த் உங்ககிட்ட கொடுத்த போன் நம்பரை, நானும் என் அண்ணனும் கண்டுபிடிச்சிக்கிறோம். என்ன விளைவுகள் ஏற்பட்டாலும் நாங்க அதை ஏத்துக்கிறோம்.

டெலிபோன் நம்பரை நான்தான் கொடுத்தேன்னு போலீஸ்கிட்டே சொல்லக்கூடாது.

சொல்ல மாட்டோம்.

திவாகர் கொஞ்சம் தள்ளாட்டமாய் எழுந்துபோய் சுவர் பீரோவைத் திறந்து ஒரு சின்ன டயரியை எடுத்துக் கொண்டு வந்தான். அதன் உள்பக்க அட்டையை பார்த்துக் கொண்டே சொன்னான்.

குறிச்சிக்க, 844296.

கீதா தன் ஜோல்னா பையிலிருந்த ஒரு சின்ன நோட் புத்தகத்தில் அந்த நம்பரை குறித்துக் கொண்டாள்.

ஆனந்த் வேற ஏதாவது சொன்னாரா?

இந்த டெலிபோன் நம்பர் டைரக்டரியில் இருக்காதாம். இது ஓர் இரகசிய நம்பர். இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் போலீஸ் ஸ்டேஷன்ல இருக்கும்போது இந்த நம்பருக்குத்தான் டயல் பண்ணுவாராம்.

கீதா எழுந்தாள்.

இனிமே நடக்க வேண்டியதை நாங்க பார்த்துக்கிறோம் திவாகர்! நீங்க செஞ்ச உதவிக்கு ரொம்பவும் நன்றி. நான்



வரட்டுமா?

நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். எந்தக் காரணத்துக்காகவும் எந்த சந்தர்ப்பத்திலும் என்னோட பேர் வெளி வரக்கூடாது.

வராது.

கதவின் தாழ்ப்பாளை விலக்கிக் கொண்டு வாசற்படி இறங்கினாள் கீதா. இருட்டு வெளியே கும்மென்று கொட்டிக் கிடந்தது. எங்கோ ஒரு தெரு விளக்கு பலவீனமாய் எரிந்தது. விளக்குக் கம்பத்திற்கு மட்டும் வெளிச்சம் கொடுத்துக் கொண்டிருந்தது.

கீதா தெருவில் இறங்கும்போது—

திவாகர் பின்பக்கமிருந்து குரல் கொடுத்தான்.

ரொம்பவும் இருட்டாயிருக்கு. நான் வேணுமானால் தெரு முனை வரைக்கும் துணைக்கு வரட்டுமா?

வேண்டாம்! பத்தடி நடந்தாலே இருட்டு கண்ணுக்கு பழகிடும். நான் விறுவிறுன்னு போயிடுவேன். சொல்லிக் கொண்டே இருட்டில் மினுமினுப்பாய் எதிர்ப்பட்ட சாக்கடையைத தாண்டினாள். குரைத்துக் கொண்டு வேகமாய் ஓடிவந்த நாயை ச்சு! என்று விரட்டி விட்டு வேக வேகமாய் நடந்தாள்.

அந்த சந்தைக் கடந்ததும் எதிர்ப்பட்ட வாட்டர் டாங்கிற்கு கீழே காடா விளக்கு வெளிச்சத்தில் ஆடு புலி ஆட்டம் ஆடிக்கொண்டிருந்த லுங்கி கட்டிக்கொண்டு பரட்டைத் தலையாய் தெரிந்த இரண்டுபேர் சரக்கென்று நிமிர்ந்தார்கள். கண்களை சிமிட்டிக் கொண்டார்கள்.

பொன்னா! அம்மிணி ஆர்ரா?

தெரியலையே?

எங்க வந்துட்டு போகுது? அம்சமா இருக்கு!

அந்த குடிகாரப்பய திவாகருக்கு செட்டப்போ... என்னவோ? தன்னுடைய முதுகுக்குப் பின்னால் எழுந்த மட்டமான பேச்சுகளை பொருட்படுத்தாமல் நடையை எட்டிப் போட்டாள் கீதா. மனசுக்குள் யோசிப்பு அலைந்தது.

எவ்வளவோ சிரமங்களுக்கு பிறகு கவிதா நகர் விபத்தில் ஒரு சின்ன பிடி கிடைத்திருக்கிறது. இந்த டெலிபோன் நம்பருக்குரிய ஆள் யாரென்று தெரிந்தால் போதும். குற்வாளிகளை சுலபமாய் அமுக்கி விடலாம்.

நடந்தாள்.

கும்மிருட்டில் மண்பாதை தட்டுத் தடுமாறி வழி காட்டியதும் பாதையின் இருபக்கங்களிலும் சமீபத்திய மழையினால் தேங்கியிருந்த தண்ணீர்ப் பரப்பிலிருந்து

தவளைகள் கொர்ர்க் கொர்ர்க் என்று தொண்டையைக் கொப்புளிக்கிற சைசில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. தொலைவில் மின்மினிப் பூச்சி மாதிரி பெட்டிக் கடையின் வெளிச்சம் தெரிந்தது — இனி பக்கம்தான் என்று நினைத்த அந்த விநாடி—

பின்னால் ஏதோ சத்தம்.

சட்டென்று நின்று திரும்பிப் பார்த்தாள் கீதா.

நிசப்தம்.

கண்களுக்கு யாரும் தட்டுப்படவில்லை.

மறுபடியும் தயக்கமாய் நடக்க ஆரம்பித்தாள் கீதா. பத்தடி தொலைவு நடந்ததும் — மீண்டும் அந்த சத்தம்.

சர்ரக்_சர்ரக்_

யாரோ நடந்து வருகிற சத்தம்.

கீதாவின் இதய பாகத்தில் முதல் தடவையாய் ஒரு பயக் கீறல்.

திரும்பிப் பார்த்து யார்? என்று கேட்கலாமா?

வேண்டாம். வேகமாய் நட — மூளை பயம் காட்ட கீதா தொலைவில் தெரிந்த பெட்டிக் கடை வெளிச்சத்தைப் பார்த்துக் கொண்டு வியர்க்க வியர்க்க நடந்தாள்.

சர்ரக்_சர்ரக்_

பின்னால் அந்த சத்தம் தொடர்ந்தது. வேகம் அதிகப்பட்ட மாதிரியும் இருந்தது. பாதை ஓர் இடத்தில் "ட" போட்டுக் கொண்டு வளைந்து போக வளைவில் நின்று திரும்பிப் பார்த்தாள் கீதா. கறுப்பான இருட்டுப் பின்னணியில்.

சிவப்பாய் நெருப்பு முனை தெரிந்தது. அசைந்தது. கீதா உற்றுப் பார்த்தாள். அது... பின் தொடர்ந்து வருகிறவனின் உதட்டில் தொற்றியிருக்கும் சிகரெட் என்பது புரிந்தது.

என்ன செய்யலாம்?

வருகிறவன் என்னைப் பின் தொடர்பவனா?

இல்லை வழியோடு போகிறவனா? ஒரு நிமிட நேரம் இந்த வளைவிலேயே நின்று பார்க்கலாம். வழியோடு போகிறவனா இருந்தால் — என்னைக் கடந்து போகட்டும். மனத்திற்குள் தீர்மானம் செய்துகொண்டவளாய் அந்தப் பாதையின் வளைவிலேயே நின்றாள் கீதா.

அந்த உருவம் நின்று கொண்டது.

கிட்டத்தட்ட இருபது அடி இடைவெளி தூரம்.

சுற்றிலும் தவளைகள் கொரகொரக்க, இதயம் திக்திக் என்று உதறிக் கொள்ள அந்த சிகரெட்டின் நெருப்பு



முனையையே பார்த்துக் கொண்டு நின்றாள் கீதா. அவனும் அதே இடத்தில் ஆணியடித்த மாதிரி நின்று இருந்தான்.

சேலைத் தலைப்பால் முகத்தில் பொடித்த வியர்வையை ஒற்றிக் கொண்டு பய எச்சிலை சிரமமாய் விழுங்கி விட்டு கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு குரல் கொடுத்தாள்.

யா_யாரது?

உருவம் பதில் கொடுக்காமல் அசையாமல் நின்றது. கீதா மறுபடியும் குரல் கொடுத்தாள் யா_யா_யாரது?

இருட்டில் சிகரெட்டின் சிவப்பு முனை கீழ் தாழ்வது தெரிந்தது. அடுத்த விநாடியில் அது பூட்ஸ் காலுக்குக் கீழ் அணைக்கப்பட்டது.

கீதாவின் பய சதவீதம் அதிகரித்தது.

ஓடலாமா? என்று யோசித்த விநாடி

அந்த உருவம் அவளை நோக்கி நகர்ந்து வர ஆரம்பித்தது.

சர்ர்க்_சர்ர்க்_

## 17

உருவம் அவளை நோக்கி நகர ஆரம்பித்ததும் — கீதாவின் தைரியம் மனோதிடம் எல்லாமே வெயிலில் வைத்த பனிக்கட்டியாயிற்று.

கால்கள் தடுக்கிவிடாமல் இருப்பதற்காக — இடது கையால் சேலையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஓட ஆரம்பித்தாள். ச்சத்_ச்சத்_ச்சத்_

பத்தடி ஓடியிருப்பாள்.

பின்னால் தூரத்தில் வந்த — அந்த உருவத்திடமிருந்து கனைப்பும் குரலும் பீறிட்டது.

கீதா_நில்லு...! ஓடாதே_

இது...இது... அண்ணன் ஜவகரின் குரல் மாதிரி இல்லை? திகைப்பாய் நின்று திரும்பிப் பார்த்தாள். ஆச்சரியித்தாள். ஜவகரேதான்!

கையில் டார்ச் லைட்டை உயிர்ப்பித்துக் கொண்டே ஜவகர் அவளை வேக வேகமாய் நெருங்கினான்.

அ_அண்ணா_நீ_நீயா?

நானேதான் — சிரித்துக்கொண்டே போய்—அவள் தோள் மீது கையை வைத்தான். எ_என்ன கீதா_உன்னோட துணிச்சல் இவ்வளவுதானா? இந்த ஓட்டம் ஓடறே?

அ..அண்ணா...நீ எ....எப்படி...இ...இங்கே?

போ_போலீஸ் உன்னை விட்டுட்டாங்களா?

என்னை ரிலீஸ் பண்ணி ரெண்டு மணி நேரமாச்சு! லாக்கப்பலிருந்து நேரா நம்ம பத்திரிகை ஆபீசுக்குத்தான் வந்தேன். நீ திவாகரைப் பார்க்கப் போயிருக்கிறதா வைபவி சொன்னா! நீ தனியா கிளம்பிப் போனது எம் மனசுக்கு உறுத்தலாவே இருந்தது. உடனே திவாகரோட டெலிபோன் நம்பரை எக்சேஞ்சுக்கு சொல்லி, அட்ரஸ் கேட்டு, இந்த நாலவர் லே-அவுட்டுக்கு வந்தேன். திவாகர் வீட்டு கிட்டே வரும்போதுதான் நீ வெளியே வந்துகிட்டிருந்தே. உனக்கு தெரியாமே இருட்டுல மறைஞ்சு பாதுகாப்பா பின்தொடர ஆரம்பிச்சேன். உன்னோட துணிச்சல் எவ்வளவு உறுதியா இருக்குன்னு சோதனை பண்ணத்தான் பயமுறுத்திப் பார்த்தேன். ம். இந்த ஓட்டம் ஓடறியே? இவ்வளவு பயத்தை மனசுல வெச்சுக்கிட்டு எதுக்காக தனியா வரணும்? நான் இப்போ வராமே இருந்து வேற ஒருத்தன் உன்னை பின்தொடர்ந்து வந்திருந்தால் — நீ எப்படி அவனை சமாளிச்சிருப்பே?

அந்த சமயத்துக்கு எதையாவது பண்ணி தப்பிச்சிடுவேன். அது கிடக்கட்டும்.. உன்னை எப்படி ரிலீஸ் பண்ணினாங்க?

அது அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். நான் லாக்கப்பில் இருக்கிறதை மேலிடத்துல யாரோ விரும்பலை. உடனே ரிலீஸ் பண்ணிட்டாங்க.

ஆச்சரியமாயிருக்கு.

எல்லாம் ஆச்சரியம்தான். சரி! நீ போன காரியம் என்னாச்சு? திவாகரைப் பார்த்தியா?

பார்த்தேன்.

என்ன சொன்னார்?

ஓர் அற்புதமான தடயம் கொடுத்திருக்கிறார்.

தடயமா? என்ன தடயம்?

ஒரு டெலிபோன் நம்பர்.

விவரமா சொல்லு.

இங்கே வேண்டாம். நம்ம ஆபீசுக்கு போயிடலாம்.

பூகம்பம் பத்திரிகை அலுவலகம்.

இராத்திரி பதினோரு மணி.

உள்ளே அச்சு எந்திரங்கள் ரீங்காரித்துக் கொண்டிருக்க சாத்தப்பட்ட கண்ணாடி அறைக்குள் ஜவகர், வைபவி, கீதா மூன்று பேரும் மேசையைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.



அந்த 844296 இரகசியமான நம்பர்தான். கோவை டைரக்டரியை அலசிப் பார்த்துட்டேன். இந்த நம்பரைக் காணோம். ஜவகர் சொல்ல கீதா தலையாட்டினாள்.

திவாகர் சொன்னது சரிதான் போலிருக்கு.

இந்த டெலிபோனை வெச்சிட்டிருக்கிற ஆளை எப்படிக் கண்டுபிடிக்கிறது? கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் ஆளும் பார்ட்டி உஷாராயிடுவாங்க வைபவி கவலையாய்ச் சொன்னாள்.

ஏண்ணா இப்படி செஞ்சா என்ன?

எப்படி?

டெலிபோன் எக்சேஞ்சில் உனக்கொரு நண்பர் இருக்கிறதா சொன்னியே. அவர்கிட்டே இந்த டெலிபோன் நம்பரைக் கொடுத்து இரகசியமா விசாரிச்சா என்ன?

நோ கீதா. இந்த விஷயத்துல வெளியாட்களை நாம நம்பக்கூடாது. நாமே முயற்சி பண்ணித்தான் கண்டுபிடிக்கணும்.

நம்மாலே எப்படிண்ணா நம்பரைக் கண்டுபிடிக்க முடியும்?

ஒரு வழி இருக்கு.

என்ன வழி?

இந்த நெம்பருக்கு டயல் பண்ணி பேசணும்..

உன்னை யார்ன்னு அறிமுகப்படுத்திக்கிட்டு பேசவே. மறுமுனையில் பேசுகிறவனுக்கு கொஞ்சம் சந்தேகம் வந்தாலும் ரிசீவரை வெச்சிடுவானே?

பேச வேண்டிய முறையில் பேசினால், அவன் எதுக்காக ரிசீவரை வைக்கப் போகிறான்?

அண்ணா! நீ சொல்றது எனக்குப் புரியலை.

வெளியே வா! புரியும். வைபவி! நீ ஆபிசிலேயே இரு. நானும் கீதாவும் பப்ளிக் டெலிபோன் பூத் வரைக்கும் போயிட்டு வந்துடறோம்.

நான் வேண்டாமா?

நீ ஆபிசுல இரு! அரை மணி நேரத்துல வந்துடறோம்.

ஜவகரும், கீதாவும் வெளியே வந்து ஸ்கூட்டரில் பறந்தார்கள். நான்கைந்து தெருக்களைத் தாண்டி அதுக்குப் புறமாய் இருந்த டெலிபோன் பூத்தைத் தொட்டார்கள். பூத்துக்கு வெளியே ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு, இருவரும் உள்ளே போனார்கள்.

ஜவகர் நாணயத்தைக் கையில் தயாராய் வைத்துக் கொண்டு 844296 எண்களை டயலில் சுழற்றினான். மறுமுனையில் ரிங் கிடைத்தது. அலோ குரல் கேட்டதும்

நாணயத்தை போட்டு எண்ணை உயிர்ப்பித்துக் கொண்டான். ரிசீவரின் வாய்க்குக் கர்ச்சீப்பை போர்த்தி — ஜவகரும் அலோ என்று குரல் கொடுத்தான்.

யார் பேசறது? மறுமுனை கேட்டது.

நா..தான் அய்யப்பன் நகர் போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்! கவிதா நகர் விபத்தைப் பற்றி பேசணும். இந்த டெலிபோன் நம்பரை உங்களுக்கு கொடுத்தது யாரு?

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ்?

லைன்ல இருங்க. அய்யாவை பேசச்சொல்றேன்.

சில விநாடிகளுக்குப் பின்—

ஒரு குரல் கசுரத்தது. அதட்டலாய்க் கேட்டது.

பேசறது எந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்?

அய்யப்பன் நகர் போலீஸ் ஸ்டேஷன் சார்.

கவிதா நகர் விபத்து பற்றி என்ன சொல்லப் போறீங்க?

உங்களைப் பத்தின உண்மைகளைத் தெரிஞ்ச ஆள் அந்த பத்திரிகைக்காரன் ஜவகருக்கு உதவ முயற்சி பண்ணினான் சார். ஆளை அமுக்கிட்டோம்.

மறுமுனையில் சில விநாடிகளுக்கு நிசப்தம். பின் குரல் கரகரத்தது.

யார் அந்த ஆள்?

பேரை கேட்டோம். ஜனார்த்தன்னு சொல்றான்... சார்?

ஜனார்த்தனா?

ஆமாசார்...

ஆள் எப்படியிருக்கான்?

ஒல்லியா கொஞ்சம் மாறு கண்.

இப்போ அவனை எங்கே வெச்சிருக்கீங்க?

லாக்கப்புல! உங்க ஆள் யாரையாவது ஸ்டேஷனுக்கு அனுப்புங்க சார்... அவனை என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலை.

சரி இன்னும் பதினைஞ்சு நிமிடத்துல, எங்க ஆள் ஒருத்தன் நீலக் கலர் ஸ்கூட்டர்ல வருவான். அவன் அந்த ஜனார்த்தனைப் பார்த்து பேசுவான். அதுக்கப்புறம் அந்த ஜனார்த்தனன் விஷயத்துல நீங்க என்ன பண்ணணும் என்கிறதை நானே போன் பண்ணிச் சொல்றேன்.

நன்றி சார்.

ஜவகர் ரிசீவரை வைத்துவிட்டு தன் அருகே நின்றிருந்த கீதாவைப் பார்த்து கண் சிமிட்டினான்.

வலை விரிச்சாச்சு கீதா.



இப்போ உன்னோட திட்டம் எனக்கு நல்லாப் புரியுது அண்ணா?

என்ன புரியுது? சொல்லு பார்ப்போம்.

நீயும் நானும் இப்போ அய்யப்பன் நகர் போலீஸ் ஸ்டேஷனை — இருட்டுல ஏதாவது ஒரு பக்கமிருந்து கண் காணிக்கப் போகிறோம். அந்த ஜனார்த்தனனை யார்ன்னு பார்க்கிறதுக்காக — எவனாவது போலீஸ் ஸ்டேஷனுக்கு வருவான். போலீஸ் ஸ்டேஷன்ல விசாரிச்சுட்டு அவன் திரும்பிப் போகும்போது அவனை நாம பாலோ பண்ணி இடத்தைக்கண்டு பிடிக்கப்போகிறோம். சரிதானே?

கரெக்ட்! நீலக் கலர் ஸ்கூட்டர்ல எவனோ வருவானாம். அவனைத்தான் மோப்பம் பிடிக்கப் போறோம் கிளம்பு.

டெலிபோன் பூத்தில் இருந்து வெளியே வந்தார்கள். ஸ்கூட்டரை விரட்டிக் கொண்டு அய்யப்பன் நகர் போலீஸ் ஸ்டேஷனைத் தாண்டி — ஐம்பது கெஜதூரத்துக்கு அப்பால் ஒரு மரத்துக்கு கீழே வந்து நின்றார்கள்.

ஆள் நடமாட்டம் அற்ற இடம். போலீஸ் ஸ்டேஷனுக்கு கொஞ்சம் தள்ளியிருந்த செல்வமணி பேக்கரியில மட்டும் நான்கைந்துபேர் டீ தம்ளர்களோடு தெரிந்தார்கள்.

அண்ணா...

கீதா ஜவகரின் தோளைத் தொட்டாள்.

ம்ம்...

இப்படி நாம ரெண்டு பேரும் வெறுமனே நின்னுட்டிருந்தா — பார்க்கிற யாருக்கும் சந்தேகம் வரும்.

சரி, என்ன பண்ணலாங்கிறே?

ஸ்கூட்டரைப் படுக்க வெச்சு, ஏதாவது ரிப்பேர் பார்க்கிற மாதிரி பாவலா பண்ணேன்.

இதுவும் நல்ல ஐடியாதான். — சொன்ன ஜவகர் ஸ்கூட்டரை மரத்தின் அடித்தண்டுக்கு சாய்மானமாய் படுக்க வைத்து அதன் அருகே குத்துக்காலிட்டு உட்கார்ந்து என்ஜின் கவரைக் கழற்றினான்.

கீதா தன் மணிக்கட்டில் இருந்த வாட்சைப் பார்த்தாள்.

மணி பதினொன்று நாற்பது.

அண்ணா! அந்த ஆள் எத்தனை மணிக்கு ஸ்கூட்டர்காரனை அனுப்பறதா சொன்னான்?

இன்னும் பதினைஞ்சு நிமிடத்துல.

போன்ல பேசினவனோட குரல் உனக்கு பரிச்சயமா இருந்ததா?

ஜவகர் சத்தமாய் உதட்டைப் பிதுக்கினான். ஊகூம்...

இதுவரைக்கும் கேட்காத குரல்.

எதிரியைக் கொஞ்சம் கொஞ்சமா அனுமதிவிட்டு இருக்கோம். இந்த முயற்சியில வெற்றி கிடைக்கணும். கீதா கையைப் பிசைந்துகொண்டு தவிப்பாய்ச் சொன்னாள்.

இருவரும் காத்திருந்தனர்.

ஜவகர் ஸ்கூட்டரை மும்முரமாய் ரிப்பேர் செய்வது போல் பாவ்லா பண்ணிக்கொண்டிருக்க கீதா போலீஸ் ஸ்டேஷன் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விநாடிகள் கரைந்து நிமிடங்களாக மாறி–

நேரம் 11–55 ஆனபோது–

ஸ்டேஷன் வாசலில் வேகவேகமாய் வந்து — அந்த ஸ்கூட்டர் நின்றது. நீலநிற ஸ்கூட்டரில் வந்தவன் ஹெல்மெட்டைக் கழற்றியபடி ஸ்டேஷன் படி ஏற ஜவகரும் கீதாவும் எச்சரிக்கையானார்கள்.

## 18

**போ**லீஸ் ஸ்டேஷனுக்குப் போனவன் சரியாய்ப் பத்து நிமிடம் கழித்து வெளியே வந்து ஸ்கூட்டரை உதைக்க ஜவகரும் தன் ஸ்கூட்டரை உசுப்பிக் கொண்டான். கிசுகிசுப்பாய் மெல்லிய குரலில் கூப்பிட்டான். கீதா–

என்னண்ணா?

ஏறி உட்கார்.

ரொம்பவும் நெருங்காமே கொஞ்சம் இடைவெளி விட்டே அந்த ஸ்கூட்டரைத் தொடர்ந்து போ அண்ணா. அவனுக்கு நாம பின். தொடர்றது தெரியக்கூடாது.

அதை நான் பார்த்துக்கிறேன்.

ஸ்டேஷன் வாசலிலிருந்து அந்த ஸ்கூட்டர் வேகமாய்க் கிளம்ப ஜவகரும் தன் ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

இரண்டுக்கும் நூறு மீட்டர் இடைவெளி தூரம் போக்குவரத்து அற்ற நிசப்தமான ரோடுகளில் அந்த ஸ்கூட்டர் பின்பக்க சிவப்பு விளக்கை காட்டிக்கொண்டு புயல் காற்று மாதிரி பறந்தது. கீதா ஆச்சரியப்பட்டாள்.

என்ன இவ்வளவு வேகமா போறான்?

ஏமாந்து போனதுல கோபம் வந்திருக்கும்?.

நீ பார்த்து ஓட்டுண்ணா. இருட்டுல எங்கேயாவது கொண்டு போய் மோதிடாதே.

முன்னால் போனவனின் ஸ்கூட்டர் செல்வபுரத்தைத் தாண்டி போரூர் ரோட்டில் பாய்ந்தது. திருப்பங்களில் விருட்விருட்டென்று மறைந்தது. ஜவகர் நூறு மீட்டர் வித்தியாசத்திலேயே ஸ்கூட்டரை விரட்டினான்.



குளிர்க்காற்று இரண்டு பேர்களின் முகங்களையும் வீசிக்கொண்டு போனது.

ஸ்கூட்டர் தெலுங்குபாளையத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது ஜவகர் கேட்டான். கீதா! புறப்படறப்ப காமிராவை எடுத்து வெச்சுகிட்டியா?

ம் வெச்சிருக்கேன்–

பிலிம்–

லோட் பண்ணியிருக்கேன்.... கீதா சொல்லிக் கொண்டிருக்கும்போது–

முன்னால் போனவனின் ஸ்கூட்டர் சட்டென்று மெயின் ரோட்டில் இருந்து பிரிந்த ஒரு குறுகலான மண்பாதைக்குள் நுழைந்தது.

ஜவகர் ஸ்கூட்டரின் வேகத்தைக், குறைத்தான். ஹெட்லைட்டை மங்கலாக்கி இருட்டான அந்த மண்பாதைக்குள் நுழைந்தான். கொஞ்சம் சிரமமான மண்பாதை திமர் திமரென்று பள்ளங்கள் குறுக்கிட்டது. தொலைவில் சின்னப் புள்ளியாய் அந்த ஸ்கூட்டரின் சிவப்பு விளக்கு இருட்டில் கறுப்பாய் பெண்ணின் நெற்றியில் வைத்த குங்குமம் மாதிரி மின்னியது.

அண்ணா–?

ம்...

வேடப்பட்டிக்குப் போகிற ரோடு இது.

அந்த ஸ்கூட்டர்காரன் ரொம்ப தூரம் போயிட்டான் போலிருக்கு. அதிகமா இடைவெளிவிட்டு அவனைக் கோட்டை விட்டுடாதே.

இனிமே அவன் என்னோட பார்வையிலிருந்து தப்ப முடியாது கீதா. எங்கே போனாலும் சரி– அவனைவிட மாட்டேன்.

சில நிமிடங்கள்தான் அந்த மண் பாதை பயணம் முன்னால்போன ஸ்கூட்டர், தென்னை மரங்கள் சுற்றிலும் அடர்ந்த ஒரு பழைய கட்டிடத்திற்கு முன்பு நின்றது. ஜவகர் உடனே உஷாராகி தன்னுடைய ஸ்கூட்டரையும் பிரேக்கிட்டு நிறுத்தினான்.

கீதா இறங்கிக்க–

அவள் இறங்கிக் கொண்டதும், ஸ்கூட்டரின் ஹெட் லைட் விளக்கை முழுசாய் அணைத்தான். தள்ளி நின்றிருந்த இருட்டு உடனே ஓடிவந்து அவர்கள் மேல் தொற்றிக் கொண்டது.

ஏண்ணா இங்கேயே நிறுத்திட்டே!

அவன் ஸ்கூட்டரை ஆப் பண்ணியிருந்தா நம்ம

ஸ்கூட்டரோட சத்தம் அவனுக்கு கேட்டுவிடும். இந்த இருட்டிலேயே ஸ்கூட்டரைத் தள்ளிக்கிட்டு நடக்கவேண்டியதுதான்!

அவன் கட்டிடத்துக்குள்ளே போயிட்டான் போலிருக்கு.

ஜவகர் ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு நடக்க கீதா ஜோல்னா பையை தோளில் சரியாய் மாட்டிக்கொண்டு தொடர்ந்தாள்.

இரண்டு நிமிட நடைக்குப்பின் கட்டிடம் நெருங்கியது. மெலிதான நட்சத்திர வெளிச்சத்தில் அது உயரமான காம்பவுண்டு சுவர்களோடு தெரிந்தது.

அண்ணா இதென்ன கட்டிடம்?

ஏதோ பஞ்சு ஆலை மாதிரி தெரியுது.

இப்ப என்ன பண்ணலாம்? — கீதா கேட்க ஜவகர் ஸ்கூட்டரை இருட்டில் காம்பவுண்டு சுவரோரமாய் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான்.

கீதா, நீ இங்கேயே நில்லு.

நீ...

நான் கட்டிடத்தை வெளிப்பக்கமா ஒரு தரம் சுற்றிப் பார்த்துட்டு வர்றேன். தைரியமா நிப்பியா?

நானும் உன்கூட வர்றேனே?

வேண்டாம். நீ இங்கேயே நின்னு கட்டிடத்தோட காம்பவுண்டு கேட்டை வாட்ச் பண்ணிட்டிரு. நான் பின் பக்கமா போய் பார்த்துட்டு வர்றேன்.

சீக்கிரமா வந்துடுண்ணா. இந்த இருட்டுல தனியா நின்னுட்டிருக்க எனக்கு திக்திக்குன்னு இருக்கும்.

வந்துடறேன்.

இருட்டில் ஒரு நிழல் மாதிரி நகர்ந்தான் ஜவகர். சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு காம்பவுண்டு சுவருக்கு முதுகைத் தேய்த்துக் கொண்டு கட்டிடத்தின் மறுபக்கமாய் போனான். அங்கேயும் உயரமான நீளமான காம்பவுண்டு சுவர்.

சுற்றிலும் இருட்டு.

சில்வண்டுகளின் சத்தம். காற்றில் சலசலக்கும் தென்னை மரக் கிளைகள். ஜவகர் நடந்தான். காம்பவுண்டு சுவரை முழுசுமாய் சுற்றி முடித்து மறுபடியும் கீதாவிடம் வந்தான். அவள் கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

என்னண்ணா?

நாலாபக்கமும் கோட்டைச் சுவர் மாதிரி கட்டியிருக்காங்க.



இதென்ன கட்டிடம்! போர்டு ஏதாவது போட்டிருக்கா.

போர்டு எதுவுமேயில்லை. வெளியே செடிகள்ல ஒட்டியிருக்கிற பஞ்சைப் பார்த்தால் இது ஒரு பஞ்சு ஆலையாகத்தான் இருக்கணும்னு எம்மனசுக்குப் படுது.

சரி, எப்படி உள்ளே போறது?

காம்பவுண்டு சுவர் ஓரமாய் வளர்ந்திருந்த தென்னை மரத்தைக் காட்டினான் ஜவகர். அதுதான் நமக்கு உதவப் போகுது. நீ வெளியேயே இரு கீதா. நான் மட்டும் உள்ளே போய் ஒரு வெள்ளோட்டம் பார்த்துட்டு வந்துடறேன்.

அண்ணா... பார்த்து—

பயப்படாதே! அந்த ஜோல்னா பையை என்கிட்ட கொடு. ஜவகர் ஜோல்னா பையை வாங்கித் தோளில் மாட்டிக் கொண்டு பக்கவாட்டில் வளர்ந்திருந்த தென்னை மரத்தை நோக்கிப் போனான். இருட்டில் ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு மரத்தில தொற்றி விறுவிறுவென்று ஏற ஆரம்பித்தான். காம்பவுண்டு சுவரின் உயரத்துக்கு வந்ததும் மரத்திலிருந்து சுவரின் உச்சிக்கு வந்து உள்ளே எட்டிப் பார்த்தான்.

உள்ளே எங்கோ ஒரு மூலையில் எரிந்து கொண்டிருந்த ட்யூப்லைட் வெளிச்சத்தின் உதவியால் உட்புறம் நன்றாகவே தெரிந்தது. சுவரோரமாய் நிறைய பஞ்சு மூட்டைகள் கட்டிடத்தின் வடக்குப் பக்கத்தில் ஒரு வரிசையும் வெறும் இருட்டில் நின்றிருந்தன. ஆள் நடமாட்டம் இருக்கிறதா என்று சில விநாடிகளை செலவழித்து உன்னிப்பாய் பார்த்து விட்டு மறுபக்கம் ஒரு பஞ்சு மூட்டையின் மேல் தொம்ம்ம் என்று குதித்தான் ஜவகர்.

வைபவி மணிக்கட்டை உயர்த்தி நேரம் பார்த்தாள். மணி 11—40 பிளாஸ்க்கில் இருந்த டீயை கண்ணாடி தம்ளரில் வார்த்துக்கொண்டு ஒரு வாய் உறிஞ்சியபோது மெஷின்மேன் ஆரோக்கியராஜ் எட்டிப் பார்த்தான்.

என்ன ஆரோக்கியராஜ்?

வேலையெல்லாம் முடிஞ்சுதாம்மா. நான் வீட்டுக்குக் கிளம்பறேன்.

கட்டுகளுக்கு எல்லாம் லேபிள் ஒட்டியாச்சா?

பசங்க ஒட்டிட்டிருக்காங்க. அதுவும் இன்னும் ஒரு மணி நேரத்துல முடிஞ்சுடும்.

சரி, நாளைக்கு காலையில சீக்கிரம் வந்துடு.

சரிங்கம்மா— அவன் தலையாட்டிக் கொண்டே நகர வைபவி டீயைக் குடித்துவிட்டு எழுந்து அலுவலகத்தின் உட்பக்கம் போனாள்.

அச்சிட்ட பூகம்பம் பத்திரிகைகள் சின்னச் சின்ன கட்டுகளாக மாறிக்கொண்டிருக்க அதன்மேல் லேபிள்களை ஒட்டிக் கொண்டிருந்தார்கள் சிறுவர்கள். மிஷின்கள் ஓடி முடித்த களைப்பில் தூங்கிக் கொண்டிருந்தன.

அம்மா… ஒரு சிறுவன் கூப்பிட்டான்.

வைபவி திரும்பினாள்.

என்னப்பா?

கட்டுகளை டெலிவரி எடுத்துக்கிட்டு போகிற லாரி இன்னும் வரலீங்களே? இன்னும் கொஞ்ச நேரம் போனால் கட்டுகள் ரொம்பிடும். மத்த கட்டுகளை வைக்க இடமே இருக்காது.

வழக்கமாய் ராத்திரி 11.20 மணிக்கெல்லாம் வந்து விடும் விநாயகா டிரான்ஸ்போர்ட் லாரி இன்னமும் ஏன் வரலை? யோசித்துக் கொண்டு டெலிபோனை நோக்கிப்போனாள். ரிசீவரை எடுத்து டிரான்ஸ்போர்ட் ஆபீசுக்கு டயல் செய்தாள். போனில் யாரோ பேசினார்கள்.

அலோ…

விநாயகா லாரி டிரான்ஸ்போர்ட்?

ஆமா…

இங்கே பூகம்பம் பத்திரிகையிலிருந்து பேசறோம்…

சொல்லுங்க…

பேப்பர்ல கட்டுகள் எல்லாம் ரெடியாயிடுச்சு. நீங்க இன்னும் லாரியை அனுப்பலையா?

லாரி வேற பக்கம் லோடுக்காக போயிருக்கம்மா?

வேற பக்கம் போயிருக்கா? அந்த லாரியை ஒரு வருடத்துக்கு நாங்கதானே காண்டிராக்டு எடுத்திருக்கோம்.

அந்த காண்ட்ராக்ட்டை கான்சல் பண்ணிட்டோம்.

என்னங்க இது. திடீர்னு சொல்லாமே கொள்ளாமே? ஜவகர் வந்தா சத்தம் போடுவார்.

சத்தம் போட்டாலும் சரி, அவர் கத்தியைக் காட்டினாலும் சரி, இனிமே உங்க பத்திரிகை ஆபீசுக்கு எங்க டிரான்ஸ்போர்ட் லாரி வராது. வேற ஏதாவது ஒரு டிரான்ஸ்போர்ட்ல லாரியை ஏற்பாடு பண்ணிக்கிங்க…

மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட்ட அதே விநாடி–

பத்திரிகை ஆபீசுக்கு வெளியே இரைச்சலோடு ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. வைபவி எட்டிப் பார்த்தாள்.

ஒரு வேன் நின்றிருக்க அதன் முதுகிலிருந்து ஏழெட்டு பேர் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

யார் இவர்கள்?



வைபவி யோசித்துக் கொண்டிருக்கும்போதே–

அவர்கள் திமுதிமுவென்று உள்ளே வந்தார்கள். கைகளில் நீளநீளமாய் இரும்புத் தடிகள்.

யா…யார்…நீங்கள்?

வைபவி திக்கலான குரலில் கேட்டாள்.

எல்லோருக்கும் முன்பாய் ஒருவன் தன் வெற்றிலைக் காவி பற்களைக் காட்டிக் கொண்டே சொன்னான். நாங்க எல்லாரும் சமுகப் பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்தவங்க.

சரி, என்ன வேணும்?

இந்த பத்திரிகை ஆபீசில ஆபாச புத்தகங்கள் அச்சடிக்கிறதா எங்களுக்கு தகவல். சமுதாயத்தை நாசம் பண்ணுகிற உங்க மாதிரியான பத்திரிகைகளை அழிக்கிறதுதான்எங்க லட்சியம். அந்த லட்சியத்தை நிறைவேத்தத்தான் வந்திருக்கோம். அவன் பேசிக்கொண்டிருக்கும் போதே வைபவி குபீரென்று டெலிபோனை நோக்கிப் பாய்ந்து ரிசீவரை எடுத்தாள். டயலில் 100 எண்ணைச் சுழற்றிவிட்டு பதற்றமாய் குரல் கொடுத்தாள்.

அலோ அவசர போலீஸ்…

எஸ்…

பூகம்பம் பத்திரிகையிலிருந்து போன் பண்றோம்… ஒரு ரவுடிக் கும்பல் பத்திரிகை ஆபீசை தாக்கறதுக்காக வந்திருக்கு சார். எங்களுக்கு பாதுகாப்பு வேணும். உடனே வாங்க சார்?

பூகம்பம் பத்திரிகையா? அது எங்கே இருக்கு?

வியர்த்துக் கொண்டு பதற்றமாய் அட்ரஸைச் சொன்னாள் வைபவி. மறுமுனையில் செவிமடுத்த குரல் மெல்லச் சிரித்தது. கேட்டது.

மொத்தம் எத்தனை பேர் வந்திருக்காங்க…?

ஏழெட்டு பேர் இருப்பாங்க சார்?

என்ன சொல்றாங்க?

பத்திரிகை ஆபீசை தாக்கப்போறதா சொல்றாங்க.

தாக்கட்டுமே! தாக்கி முடிச்சதும் பக்கத்துல இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் புகார் கொடுங்க…

வைபவி திடுக்கிட்டாள். நிமிர எதிரே நின்றிருந்தவர்களில் ஒருவன் காது வரை சிரித்துக் கொண்டே முன்னால்வந்து அவள் கையிலிருந்த ரிசீவரை வாங்கிக் கீழே போட்டு பூட்ஸ் காலால் ஓங்கி மிதிக்க அது நொறுங்கியது.

# 19

டெலிபோன் ரிசிவரைக் கீழே போட்டு உடைத்தவன் தன் மொச்சையான பற்களைக் காட்டி வைபவியைப் பார்த்து சிரித்தான்.

நீ உலகத்துல இருக்கிற எந்த போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் பண்ணிச் சொன்னாலும் சரி, விடிகிற வரைக்கும் யாரும் வரமாட்டாங்க– சொல்லிக்கொண்டே அவனுடைய கைகளைப்பற்ற வைபவி திமிறிக் கொண்டு வெளியே பாய்ந்தாள்.

டேய், மைனா பறக்குது அமுக்குங்கடா...

அவன் கத்த உடனே இரண்டுபேர் பாய்ந்து வைபவியின் தோள்பட்டையைப் பற்றி நாற்காலிக்கு இழுத்து வந்து உட்கார வைத்தார்கள்.

கயித்தாலே கட்டி அம்மிணியோட அழகான வாய்க்கு ஒரு பிளாஸ்திரியை ஒட்டுங்கடா...!

அடுத்த சில விநாடிகளில்–

வைபவி ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டாள். கையகல பிளாஸ்த்திரியால் வாய் ஒட்டப்பட்டாள்.

இந்த பத்திரிகைக்கு பேரென்ன? பூகம்பம்தானே? உண்மையாகவே இங்கே ஒரு பூகம்பம் நடக்கப்போகுது. பார்... கையில் நீளமாய் இரும்புக்கழி வைத்திருந்தவன் சொல்லிக்கொண்டே கண்ணாடி மேசை மேல் ஓங்கி ஒரு போடு போட்டான். அந்த கண்ணாடி மேசை ச்சலீரென்ற சத்தத்தோடு சின்னச்சின்ன துகள்களாய் சிதறியது.

மேசைக்கு அடுத்தபடியாய் நின்ற கண்ணாடி பீரோவுக்கும் அதே கதி ஏற்பட்டது. மர நாற்காலிகள் நொறுக்கப்பட்டன.

வெறி பிடித்த மாதிரி அந்த ஏழெட்டு பேரும் அச்சகம் பூராவும் பரவினார்கள்.

அண்ணே! இந்த அச்சு எழுத்துக்களை என்ன பண்றது?

வாசல் பக்கமா ஒரு பெரிய சாக்கடை ஓடுதே, அதுல கொண்டு போய்க் கொட்டு, ஒரு எழுத்தையும் விடாதே. எல்லாத்தையும் கொண்டுபோய்க் கொட்டு.. நாளைக்கு கம்போஸ் பண்ண அந்த ஜவகர்க்கு ஒரு எழுத்துக்கூட இருக்கக் கூடாது.

சரிண்ணே–

அவன் ஓடினான்.



ஒருவன் பேப்பர் பண்டல்களை வீதிக்கு கொண்டு போய் குவித்து வைத்து மண்ணெண்ணெய் ஊற்றிக் கொளுத்தினான். இன்னொருவன் குரல் கொடுத்தான்.

பேப்பர்களை என்ன பண்றதுண்ணே?

அதான் டின் டின்னா இங்க இருக்கே கொண்டுபோய் மேலே கொட்ட வேண்டியதுதானே–

அண்ணே நேரமாயிட்டே போகுது எல்லா மிஷின்களுக்கும் அமில அபிஷேகம் பண்ணிடலாமே? வரி வரியாப் பனியன் போட்ட ஒருத்தன் கேட்டான்.

பண்ணிடலாம். யாராவது ஒருத்தர் போய் அமில ஜாடியைக் ஜாக்கரதையா கொண்டு வாங்க. மேல கீழே கவுத்துக்காதீங்க. உடம்புல இருக்கிற சதையில பாதி காணாமே போயிடும்.

நான் போய் கொண்டாறேன்... உருட்டுக்கட்டை சைசில் உயரமாய் இருந்த ஒருவன் வேக வேகமாய் வாசலில் நின்றிருந்த வேனை நோக்கிப் போய் அடுத்த நிமிடத்தின் ஆரம்பத்தில் ஒரு பெரிய அமில ஜாடியை தூக்கிக் கொண்டு வந்தான்.

ஊத்து! செங்கோடா, ஒரு மிஷின்கூட உருப்படியா இருக்கக் கூடாது. போலீஸ்வந்து பார்க்கும்போது எல்லாமே உருக்குலைஞ்சு போயிருக்கணும்...

மிஷின்கள் இருந்த உள்ளறையை நோக்கி ஜாடியைக் கொண்டு போனார்கள். வைபவி திக்கென்று நிலைத்துப் போன கண்களோடு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்க உத்தரவுகளை பிறப்பித்தவன் அவளருகே வந்தான்.

இரும்பையே பொசுக்கக்கூடிய அமிலம் உள்ளே போயிருக்கு! கவிதா நகர் விபத்தைப் பத்தி அச்சடிச்ச ஒவ்வொரு மிஷினும் நாளைக்கு விடியறதுக்குள்ளே இரும்புக் கூழ்மபா உருகிப் போயிருக்கும்...

வைபவி வேண்டாம் என்று சொல்கிற மாதிரி நாற்காலியில் இருந்து திமிறினாள். அவன் சிரித்தான்.

நியாயத்துக்குப் போராடறோம், தர்மத்துக்கு போராடறோம்னு சொல்றவங்களுக்கெல்லாம் இதுதான் கதி. மிஷின்களுக்கு எல்லாம் தெளிச்சது போக மிச்ச அமிலம் ஏதாவது இருந்தா உனக்கும் அந்த அபிஷேகம்நடக்கும்...

அவன் சொன்ன வார்த்தைகளின் பயங்கரத்தில் அப்படியே உறைந்து போனாள் வைபவி.

ஏறக்குறை பதினைந்து நிமிடம்...

அமிலம் காரமான நெடியோடு மிஷின்களை புகையோடு அரித்துக் கொண்டிருக்க அச்சகம் முழுவதும் ஒரு சுடுகாடு மாதிரி காட்சியளித்தது. எந்த இடத்தைப் பார்த்தாலும் நொறுக்கப்பட்ட சாமான்கள் கனமாய் விழுந்து கிடந்தது.

அண்ணா ராசண்ணே! நம்ம வைவ்ஸியம் முடிஞ்சுது. அமில ஜாடியோடு உள்ளே போனவன் வெளியே வந்தான். அசிங்கமாய் சிரித்தான்.

ஆசிட் மிச்சம் ஏதாவது இருக்கா?

கொஞ்சூண்டு இருக்கு?

அம்மணி தலை தலை மேல ஊத்து.

அவன் லேசாய் திடுக்கிட்டான். வேண்டாண்ணே! அழகான பொண்ணு!

அவள் யார் தெரியுமா? அந்த ஜவகரை கட்டிக்கப் போறவள். அவனோட திமிரை அடக்கணும்னா அவனுக்கு பிடிச்சமானவங்களை ஏதாவது பண்ணணும். உயிர்க்கு ஆபத்து இல்லாத அளவுக்கு மூஞ்சி மட்டும் விகாரப் படற மாதிரி அமிலத்தைத் தெளி...

வேண்டாண்ணே.. பச்சக் குருத்து பொசுங்கிப் போயிடும்... எனக்கும் வூட்ல ஒரு தங்கச்சி இருக்கா...

அவன் கோபமானான்.

மனசுக்குள்ளே இந்த மாதிரி ஈரத்தை வெச்சிட்டிருக்கிறவன் எல்லாம் ஏண்டா என்கூட வர்றீங்க? ஜாடியை என் கையில கொடுத்துட்டு நீ போய் வேன்ல உட்காரு... அம்மிணிக்கு அமிலத்தோட வேலையைக் காட்டிட்டு நான் வர்றேன்...

அவன் ஜாடியைக் கொடுத்துவிட்டு – தயக்கமாய் நகர்ந்து போக – ஜாடியை வாங்கிக் கொண்டவன் வைடவியை நெருங்கினான்.

அவள் நாற்காலியோடு சேர்ந்து திமிறினாள். எழ முயன்றவள் தோற்றுப் போய் அவனையே பார்த்தாள். கண்கள் அப்படியே பயத்தில் நிலைகுத்தி நின்றது. அவன் சிரித்துக் கொண்டு – வைடவியின் முகத்தை நோக்கி பிளாச்ச்ச் என்று வீசினான்.

அடுத்த விநாடி–

நெருப்புக் கங்குகள் முகத்தின்மீது பட்டமாதிரி துள்ளி நாற்காலியோடு சேர்ந்து முன் பக்கமாய் உருண்டாள் வைடவி.

சதையும் தலை முடியும் பகபக என்று புகைந்தது. வைடவி நாற்காலியோடு சேர்ந்து – துள்ளிக் கொண்டிருக்க



அவன் சிரித்துக் கொண்டே சாவகாசமாய் – வாசலில்– நின்றிருந்த வேனை நோக்கிப் போனான்.

வாசலில் பேப்பர் பண்டல்கள் திமுதிமுவென்று ஆளுயரத்திற்கு உற்சாகமாய் எரிந்து கொண்டிருந்தது. அந்த ராத்திரி நேரத்திலும் சத்தம் கேட்டு கூடிவிட்ட சின்ன மக்கள் கூட்டம் ஒன்று தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேன் உற்சாக ஆரவாரத்தோடு கிளம்பியது.

ஜின்னிங் பேக்டரியின் சுவர்மேலிருந்து – உட்பக்கமாய்க் குதித்த ஜவகர் – ஒரு நிமிடம் நின்று– நிதானித்து சுற்றும் முற்றும் பார்த்தான். பிறகு சுவரோரமாய் கொட்டிக் கிடந்த பஞ்சு மூட்டைகளுக்குப் பின்னால் மெதுவாய் ஊர்ந்து லேசாய் வெளிச்சம் வந்து கொண்டிருந்த அந்த ஆஸ்பெஸ்டாஸ் கட்டடத்தை நோக்கி நடந்தான்.

கட்டடத்தை நெருங்க நெருங்க–

உள்ளே பேசுக் குரல் கேட்டது. ஜவகர் சரசர என்று பஞ்சு மூட்டைகளுக்கு மத்தியில் ஒரு பிராணி மாதிரி தவழ்ந்து போய் கட்டடத்தின் பின் சுவருக்கு ஒண்டிக் கொண்டு நின்றான். காதுகளுக்கு உன்னிப்பைக் கொடுத்தான். இப்போது–

இன்ஸ்பெக்டர் இப்போது போன் பண்ணலை?

பண்ணலையாம்...

அப்போ... எவனோ நம்ம டெலிபோன் நெம்பரை மோப்பம் புடிச்சு போன் பண்ணியிருக்கான்.

இது அந்த பத்திரிகை ஆசிரியன் ஜவகரோட வேலையாய் இருக்குமோ...?

என்னோட சந்தேகமும் அதுதான்.

அவனுக்கு எப்படி இந்த ரகசிய டெலிபோன் நெம்பர் கிடைச்சிருக்கும்?

போலீஸ் சைடிலிருந்து யாராவது சொல்லியிருப்பாங்களா?

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜை விசாரிச்சுப் பார்க்கணும்.

அதுக்கு முன்னாடி அம்மாவுக்குப் போன் பண்ணி இந்த விவகாரத்தை சொல்லணும்.

நாளைக்கு காலையில அஞ்சு மணிக்கெல்லாம் அம்மா டெல்லி புறப்பட்டு போறாங்க... பிரதம மந்திரி வரச் சொல்லியிருக்காராம்... விஷயத்தை சொல்றதா இருந்தா இப்பவே சொல்லணும்...

சரி, நீயே போன் பண்ணி சொல்லிடு...

ஜவகர் காதைத் தீட்டிக்கொண்டு சுவரோரமாய்க் காத்திருக்க உள்ளே டெலிபோன் டயல் ர்ர்ர்ர்_ர்ர்ர்ர் என்று உறுமிக் கொண்டிருந்தது.

சில விநாடிகளுக்கு நிசப்தம்.

பிறகு – டெலிபோன் டயல் சுழற்றப்படும் சத்தம். ஒவ்வொரு டயல் சுழற்றையும் எண்ணிக் கொண்டே வந்தான் ஜவகர்.

மொத்தம் ஒன்பது தடவை.

அப்படியானால்...?

இது எஸ்.டி.டி.கால்.

வெளியூர் ஏதோ ஒன்றில் அந்த அம்மா இருக்கிறாள். ஜவகர் யோசித்துக் கொண்டிருக்கும்போதே உள்ளே ஒரு குரல் டெலிபோனில் இறைந்து கத்தியது.

அலோ...

—

அலோ கோயமுத்தூரிலிருந்து நான் அரிகிருஷ்ணன் பேசறேன்...

—

அம்மா இருக்காங்களா?

—

தூங்கறாங்களா? ஓர் அவசர விஷயம்... உடனே சொல்லியாகணும்... நாளைக்கு காலையில போன் பண்ணி சொல்லிக்கலாம்னு இருந்தேன். ஆனால் அம்மா காலையில சீக்கிரமே டெல்லி புறப்பட்டுப் போறதா கேள்விப்பட்டேன்.

சிறிது நேரம் மௌனம்...

ஜவகர் காதை உன்னிப்பாக்கிக் கொண்டு – மூச்சு காட்டாமல் நின்றிருந்தான். சில விநாடிகளுக்குப் பின் குரல் தொடர்ந்தது.

வணக்கம்மா... நான் அரிகிருஷ்ணன் பேசறேன்...

—

நம்ம ஜின்னிங் பேக்டரி ரகசிய டெலிபோன் நெம்பரை யாரோ மோப்பம் பிடிச்சு இன்ஸ்பெக்டர் பேசற மாதிரி பேசி நம்மை ஏமாத்திட்டான்.

—

கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான்...

சொல்லுங்கம்மா... நீங்க என்ன சொன்னாலும் செய்யறோம்...

—

சரிங்கம்மா...



உள்ளே ரிசீவர் வைக்கும் சத்தம் கேட்டது. கூடவே நாற்காலி நகர்த்தப்படும் சத்தம்.

அரி, நம்ம அம்மா என்ன சொன்னாங்க?

ஏதோ ஏற்பாடு பண்ணியிருக்காங்களாம்... அந்த ஜவகர் இனிமே வாலாட்ட மாட்டானாம்... அவனோட பத்திரிகை இனிமே வெளியே வராதாம்...

நாம என்ன பண்ணணும்ன்னு சொல்லலையா?

சொல்லியிருக்காங்க... பேக்டரி ஷெட்ல இருக்கிற காரை உடனே பார்ட் பார்ட்டா பிரிச்சு வித்துடச் சொன்னாங்க. நாளைக்குக் காலையில முதல் வேலையா மெக்கானிக் ஜேக்கப்பை போய் பார்க்கணுமாம்!

சரி வா, ஒரு ரவுண்ட் போடலாம்.

என்ன வெச்சிருக்கே?

த்ரி ஸ்டார் ரம் ஒரு பாட்டில் கிடைச்சது...

கொறிக்க...?

நேந்திரம் வறுவல் இருக்கு போதாதா?

குரல்கள் கேட்டுக் கொண்டிருக்க ஜவகர் சுற்றும் முற்றும் பார்த்தான். பேக்டரி ஷெட்டில் கார் இருப்பதாக சொன்னானே, ஷெட் எங்கே இருக்கிறது.

ஜவகர் பார்வையைத் துரத்தினான்.

## 20

ஜவகர் அந்த மெலிதான இருட்டில் சுவரோடு சுவராய் ஒண்டிக் கொண்டு – சுற்றும் முற்றும் பார்த்தான். அந்த பேக்டரியின் கிழக்கு பகுதியில் தென்னை மரங்களுக்கு மத்தியில் மசமசப்பாய் ஏதோ கட்டிடம் மாதிரித் தெரியவே – அதை நோக்கி மெல்ல நகர்ந்தான். உள்ளே பேச்சுக் குரல்கள் இன்னமும் கேட்டுக் கொண்டிருந்தன.

உனக்கு எப்படிடா இந்த மிலிட்டரி கிடைச்சது?

என் மச்சினன் ஒருத்தன் பட்டாளத்துல இருக்கிறதா ஏற்கனவே உன்கிட்ட சொல்லியிருக்கேனே? அவன்தான் கொண்டு வந்தான். திரீ ஸ்டார் ரம்.

ஊத்து... ஊத்து...

ஜவகர் பஞ்சு மூட்டைகளுக்குப் பின்னால் லாவகமாய் மறைந்து பேக்டரியின் கிழக்குப் பக்கத்தை நோக்கிப் போனான். அடர்த்தியான தென்னை மரங்களுக்கு மத்தியில் ஒரு கார் போகும் அளவுக்கு செம்மண் பாதை தெரிய ஐம்பதடித் தொலைவில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வேய்ந்த ஒரு ஷெட் தெரிந்தது. அநேகமாய் அதுதான் கார் ஷெட்டாய் இருக்கலாம் – முடிவுக்கு வந்தவனாய் செம்மண்

பாதையை நெருங்கி ஒரு தென்னை மரத்துக்குப் பின்னால் மறைந்து நின்று யாரேனும் கண்களுக்கு தட்டுப்படுகிறார்களாவென்று உன்னிப்பாய் பார்த்தான்.

நான்கு திசைகளிலும் நிசப்தம்.

இருட்டு.

காற்றில்லாத காரணத்தினால் தென்னை மரங்கள் கூட கிளைகளை அசைக்காமல் வரைந்த ஓவியம் மாதிரி நின்றன. ஜவகர் மரத்துக்குப் பின்புறமிருந்து வெளிப்பட்டு கார் ஷெட்டை நோக்கி சத்தமில்லாமல் ஓடினான். சில வினாடிகள் ஓட்டத்திற்குப் பிறகு ஷெட்டை நெருங்கினான். மோசமாய்த் துரு பிடித்த தகரத்தாலான ஒரு பெரிய கதவு ஷெட்டை அடைகாத்திருக்க முகப்பில் பூட்டு தொங்கியது.

ஜவகர் பூட்டை நெருங்கி இழுத்துப் பார்த்தான். அது வாயை இறுக்கமாய் சாத்தியிருந்தது. பூட்டைத் திறப்பது சாத்தியமில்லை என்று தெரிந்ததும் ஷெட்டின் பின் பக்கம் நகர்ந்தான்.

கார் ஷெட்டின் பின்பக்கம் பக்கவாட்டு சுவர்களும்— ஆஸ்பெஸ்டாஸ் கூரைக்கும் நடுவில் ஓர் ஆள் நுழையக்கூடிய அளவுக்கு இடைவெளி ஒன்று பிறந்திருந்தது. செங்கற்கள் நீட்டிக் கொண்டிருந்தன.

ஜவகர் காமிராவை தோளில் மாட்டிக் கொண்டு பக்கத்திலிருந்து தென்னை மரத்தைப் பற்றிக் கொண்டு விறுவிறுவென்று மேலே ஏறி —சுவரின் மட்டத்திற்கு வந்ததும் அந்த இடைவெளியைப்பற்றிக் கொண்டு ஷெட்டுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே கொட்டியிருந்த இருட்டில்.

ஓர் கார் நின்றிருப்பது தெரிந்தது.

இந்தக் கார்தான் மோகன் — சாந்தாவின் மேல் மோதியதா? இல்லை. இது வேறு காரா? ஜவகருக்கு குழப்பமாய் இருந்தது.

ஷெட்டுக்குள் இறங்கிப் பார்த்துவிடலாமா?

பொறு! உள்ளே இறங்கினால் மறுபடியும் மேலே வருவதற்கு வழி இருக்கிறதாவென்று பார் — மூளை எச்சரிக்கை செய்ய — ஜவகர் ஷெட்டின் உள்பரப்பை அவசர அவசரமாய் ஆராய்ந்தான்.

காரின் தலைமேல் ஏறி நின்று ஓர் எம்பு எம்பினான். இந்த இடைவெளிச் சுவரைப் பிடிமானமாய் பற்றிக்கொண்டு மேலே வந்து விடலாம். தீர்மானம் செய்தவனாய், இடைவெளிக்குள்உடம்பை நுழைத்து, ஷெட்டுக்குள் கால்களைத் தொங்கிவிட்டு — சுவரோடு



சுவராய் உராய்ந்து உள்ளே கொட்டியிருந்த இருட்டில் குதித்தான் ஜவகர். பாண்ட் பாக்கெட்டிலிருந்த பென் டார்ச்சை எடுத்து பட்டனை அழுத்த வெளிச்சம் கூர்மையாய் நீட்டியது — டார்ச்சினை திருப்பி—

அந்த வெளிச்சத்தை காரின் மேல் கொட்டினான்.

நீலநிறக் கார்.

அது ஓர் அம்பாசிடர்.

ஜவகர் அவசர அவசரமாய்க் காரின் முகப்புக்கு சீ. பக்கமாய் போய் நின்று — பானெட்டைப் பார்க்க அதன் இடது பக்கம் சப்பைத் தட்டிப் போய் ஏராளமான கீறல்கள்.

ஜவகருக்குத் தீர்க்கமாய்த் தெரிந்தது.

அந்த கொலைக்கான கார் இதுதான்.

காரின் நெம்பர் பிளேட்டைப் பார்த்தான். எமஎச்எஸ் 8676. வெளி மாநிலக்கார். ஜவகர் காமிராவை எடுத்து பிளாஷ் லைட்டைப் பொருத்தி காரை க்ளிக் செய்ய ஆரம்பித்தான். நெம்பர் பிளேட். இடது பக்கம் குப்பைத் தொட்டியின் மேல் மோதி சப்பையாகியிருந்த பாகம். பானெட்டின் மேல் பட்டிருந்த கீறல்கள் முன் சக்கர டயர்கள் — பின் சக்கர டயர்கள்.

கிட்டத்தட்ட பன்னிரெண்டு க்ளிக்குகள்.

போதும்! இதுபோதும் இந்த போட்டோக்களை ஏராளமாய் காப்பி எடுத்து — டெல்லியின் அத்தனை மந்திரிகளுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் அனுப்பி — இந்த கவிதா நகர் விபத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்து—

யோசித்துக் கொண்டிருக்கும்போதே—

கார்ஷெட்டுக்கு வெளியே பேச்சுக்குரல் கேட்டன.

உண்மையாகவா நீ பார்த்தியா?

என்ன அரி.. நான் பொய் சொல்வேனா? நீ தட்டி விட்டுகீழே விழுந்து உடைஞ்சுப் போன கண்ணாடி தம்ளரை எடுத்து வீசறதுக்காக ரூமை விட்டு வந்தப்ப அந்த சுவர் இடைவெளியில் எவனோ தொற்றிட்டிருந்தான்.

இப்ப காணோம்..

ஷெட்டுக்குள்ளே போயிருப்பானோ? அதையும் பார்த்துடலாம்.. கொஞ்சம் இரு நான் போய் ஷெட்டோட சாவியைக் கொண்டு வந்துடறேன்..

சீக்கிரமா வா.. குடிச்ச ரம் வேற கிர்ர்ன்னு இருக்கு. வெளியே இருந்து கசிந்த பேச்சுக்களை கேட்கக் கேட்க கார் ஷெட்டுக்குள் இருந்த ஜவகருக்கு இதயத் துடிப்பு எகிறியது. உடம்பு முழுக்க குப்பென்று வியர்வை.

என்ன செய்யலாம்?

இப்போது வெளியே போனால் நிச்சயம் அவர்களிடம் மாட்டிக் கொள்ள வேண்டும். இங்கேயே ஷெட்டுக்குள் ஏதாவது ஓர் இடத்தில் பதுங்கி அவர்கள் உள்ளே வந்ததும் தாக்க வேண்டியதுதான்.

யோசித்த ஜவகர் சுற்றும் முற்றும் பார்த்தான்.

கவிரோரமாய் ஒட்டடை அடிக்கும் குச்சியொன்று சாய்த்து வைக்கப்பட்டிருக்க அதைக் கையில் எடுத்துக் கொண்டு காரின் பின்பக்கமாய் போய் பதுங்கினான். இருட்டில் மூச்சு வாங்கிக் கொண்டு காத்திருந்தான்.

விநாடிகள் கூட்டம் கூட்டமாய் செத்துப் போக – ஐந்து நிமிடங்களுக்குப் பின்னால் மறுபடியும் பேச்சுக் குரல் கேட்டது. ஷெட்டுக்கு வெளியே–

இந்தா சாவி, திற..

அந்தக் கையில என்ன?

கத்தி! ஆள் உள்ளே இருந்துட்டான்னா?

கலகலவென்று பூட்டு விடுபடும் சத்தம் கேட்டது. தொடர்ந்து தகர கேட் கர்ண கடூரமாய் கொஞ்சம் கொஞ்சமாய்த் திறக்கப்பட.

ஜவகர் காரின் பின்னாலிருந்து மெல்ல எட்டிப் பார்த்தான். இரண்டுபேர் உயரமாய் நிழலுருவங்களாய் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்கள்.

அரி..

ம்..

ஒரு தீக்குச்சியை உரசு! இந்த நேரம் பார்த்து டார்ச்ல செல் இல்லை.

சார்ர்க் அவன் உரச –குச்சியின் நுனியில் ஒரு நெருப்புப் பூ பூத்து மலர்ந்தது வெளிச்சத்தை வீசியது.

உள்ளே யாரது? குரல் கொடுத்துக் கொண்டே அந்த இருவரும் முன்னோக்கி வந்தார்கள். தீக்குச்சி அதற்குள் அணைந்து .போக இன்னொரு தீக்குச்சி தீக்குளிக்க ஆரம்பித்தது.

அரி..! அவன் ஷெட்டுக்குள்ளே இருக்க முடியாது.. பேக்டரிக்குள்ளே ஏதாவது பஞ்சு மூட்டைக்குப் பின்னாடி பதுங்கியிருக்கணும்.

மொதல்ல இங்கே பார்த்துட்டு.. அப்புறம் பேக்டரி பூராவும் தேடுவோம்.

கார்க்குள்ளே எட்டிப்பாரு..

மூன்றாவது தீக்குச்சி உயிர்ப்பிக்கப்பட்டது. காருக்குள்-

ஜவகர் குபீரென்று கையில் ஒட்டடைக் கம்போடு எழுந்து- தீக்குச்சி வைத்திருந்தவனின் மணிக்கட்டை தாக்க குச்சி எகிறி விழுந்து அணைந்தது – உடனே கவிழ்ந்து கொண்ட இருட்டை உபயோகப்படுத்தி ஜவகர் அவர்கள் மேல் பாய்ந்தான். கம்பை சுழற்றி இருவரின் பின்னந் தலைகளையும் பதம் பார்த்துவிட்டு ஷெட்டுக்கு வெளியே ஓடினான்.

அரி! அவன் ஓடறான்..

என் தலையில பலமா அடிச்சுட்டான்.. என்னால அவனை துரத்த முடியாது. நீ போய்ப்பிடி.. நழுவும் சுத்தியோடு அரி தளர்ந்துபோய் தரையிலேயே உட்கார்ந்து கொள்ள மற்றவன் ஜவகரை துரத்திக் கொண்டு ஓடினான்.

டேய்! நில்லு.

ஜவகர் பஞ்சு மூட்டைகளுக்கு மத்தியில் புகுந்து தாம்பவுண்டு சுவரோரமாய் ஓடி சுவரை யொட்டியிருந்த தென்னை மரத்தைப் பற்றிக் கொண்டு ஒரு குரங்கின் லாவகத்தோடு மேலே ஏறி சுவரின் உச்சிக்கு தாவி – மறு பக்கம் குதித்தான். தோளில் இருந்து நழுவிக் கீழே விழுந்த தாமிராவை அள்ளி எடுத்துக் கொண்டு பேக்டரியின் முன்பக்கம் ஓடினான். தப்.தப்.தப்..

ஸ்கூட்டரோடு காத்திருந்த கீதா தவிப்பாய் எதிர்கொண்டாள். அண்ணா என்னாச்சு..?

சொல்றேன் மொதல்ல இடத்தை விட்டு கிளம்பணும். பின்னாடி ஒருத்தன் தொரத்திட்டு வர்றான்.

ஜவகர் ஸ்கூட்டரின் இடுப்பை உதைத்தான். எஜமானின் அவசரத்தை அதுவும் புரிந்து கொண்டது போல் கபகபவென்று அலறி உயிர் பிடித்துக் கொண்டது.

ம்.. ஏறு....

கீதா ஏறி பில்லியனில் அமர்ந்ததும் ஸ்கூட்டரை விரட்டினான் ஜவகர். அது காற்றை அறைந்து கொண்டு போயிற்று.

அண்ணே! உள்ளே போன காரியம் என்ன ஆச்சு?

வெற்றி.

உள்ளே யார் இருக்காங்க?

ரெண்டு தடியன்கள்.

இந்த பேக்டரி யாரோடது

யாரோ ஒரு பிரபலமான அம்மாவுக்கு சொந்த மான்து. நாளைக்குக் காலையில டெல்லிக்குப் போய் பிரதமரைச் சந்திச்சு பேசக்கூடிய அளவுக்கு செல்வாக்கு படைச்ச அம்மா.

பேரு?

தெரியலை. நாளைக்கு விசாரிச்சு தெரிஞ்சுக்கலாம். உன்னோ ஏதாவது உபயோகமான தகவல் கிடைச்சுதா?

அந்தக் கொலைக்கார காரை பார்த்தேன். ஷெட்டுக்குள்ளே வெச்சு பூட்டியிருந்தாங்க. பக்கவாட்டு சுவர் இடைவெளியில் புகுந்து உள்ளே போய் காரை விதவிதமா படம் பிடிச்சு காமிராவுக்குள் அடைச்சுக்கிட்டேன்.

சரியான சாட்சியம் கிடைச்சிடுச்சு. கீதா சந்தோசப் பட்டாள்.

சரியான சாட்சியம் கிடைச்சு பிரயோஜனம் இல்லை கீதா. அம்மாவுக்கு பிரதமருடன் பேசக்கூடிய அளவுக்கு செல்வாக்கு இருக்கு. அந்த செல்வாக்கை வெச்சுகிட்டே நம்ம சாட்சியங்களை உடைக்க அவங்களால முடியும்.

அப்போ இதை எப்படி நிரூபிக்கப் போறோம்?

தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா பத்திரிகைகளையும் ஒண்ணு திரட்டி – இந்த போட்டோக்களை பிரசுரிக்க வெச்சு, போலீசுக்கு எதிரா போராடணும். இனிமேத்தான் நமக்கு வேலை அதிகம் கீதா....

ஸ்கூட்டர் மண் ரோட்டை விழுங்கிவிட்டு மெயின் ரோட்டுக்குள் சீறி – தெலுங்குப்பாளையம், செல்வபுரத்தை கடந்து – அவர்களுடைய பத்திரிகை அலுவலகம் இருந்த தெருவுக்கு வந்தபோது-

தெரு முழுக்க கும்பல்.

பத்திரிகை அலுவலகம் முன்பு அதிகப்படியான கும்பல்.

கீதா பதற்றமாய் கத்தினாள். அண்ணா நம்ம ஆபீசில் என்னமோ நடந்திருக்கு...

பேப்பர் கட்டு எல்லாம் எரிஞ்சிட்டிருக்க...

ஸ்கூட்டரை பார்த்ததும் பத்திரிகை அலுவலக ஊழியர் ஒருவர் கண்களில் நீரோடு ஓடிவந்தார்.

இராயப்பா! என்னாச்சு? ஜவகர் ஸ்கூட்டரை ரேக்கிட்டு நிறுத்திக் கொண்டே கேட்டான்.

இராயப்பன் நடந்த விஷயங்களைச் சொல்ல – ஜவகரும் கீதாவும் அதிர்ந்து போய்க் கேட்டார்கள்.

வைபவி... இப்ப... எங்கே?

ஆஸ்பத்திரி கொண்டு போயிருக்காங்க...

போலீசுக்கு தகவல் சொன்னியா...?

சொல்லி அரைமணி நேரம் ஆச்சுங்க... யாரும்

அந்த போலீஸ் ஜீப் மாப்பிள்ளை ஊர்வலக் கார் மாதிரி மெதுவாய் நகர்ந்து வந்தது. ஜவகர் அருகே வந்ததும் நின்றது.

# 21

சூறையாடப்பட்ட சின்னாபின்னமாய்க் கிடந்த பத்திரிகை அலுவலகத்தை எரிகிற வயிற்றோடு கண்களில் நீர் மல்க பார்த்தார்கள் ஜவகரும், கீதாவும். சப்–இன்ஸ்பெக்டர் ஒருவர் வாசலுக்கு – முன்பாக நாற்காலியை எடுத்துப் போட்டுக் கொண்டு சாவதானமாய் சிகரெட் பிடித்தபடி விசாரணையை நடத்தினார். வேலையாட்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

மொத்தம் எத்தனை பேர் வந்தாங்க?

ஏழெட்டுப் பேர் இருக்கும் சார்.

மறுபடியும் பார்த்தால் அடையாளம் காட்டுவீர்களா?

காட்டுவோம் சார்...

வந்தவங்க, என்ன காரணம் சொல்லி தாக்கினாங்க?

ஆபாச பத்திரிகைகளை அச்சிட்டு சமுதாயத்தைப் பாழ்பண்றீங்களோன்னு சொல்லித் தாக்கனாங்க.

இந்த ஆபீஸ்ல ஆபாசப் புத்தகங்களை அச்சிட றாங்களா? சப்–இன்ஸ்பெக்டர் கேட்க கேட்க ஜவகர் ஆவேசமாய் அவர் முன்பாக போய் நின்றான். கண்களில் நீர் ததும்ப கத்தினான். எங்க இரத்தத்தாலும், வேர்வையாலும் உருவாக்கின பத்திரிகை அலுவலகம் சார் இது. நாட்டில் நடமாடுகிற ஆபாசங்களை களையறதுக்காகத்தான் இந்த பத்திரிகையையே ஆரம்பிச்சோம். இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள எந்திரங்களையெல்லாம் நாசம் பண்ணிட்டு போயிருக்காங்க. அவங்களைப் பிடிச்சுப் போடாமே இங்கே சாவகாசமா நாற்காலியைப் போட்டு உட்கார்ந்துகிட்டு விசாரணை என்கிற பேர்ல, பொழுது போக்கிக்கிட்டிருக்கீங்களே?

அந்த சப்–இன்ஸ்பெக்டர்ஜவகரின் கோபத்தைப் பார்த்து புன்னகைத்தார். விசாரணை பண்ணாமே குற்றவாளிகளை எப்படி பிடிக்க முடியும்?

குற்றவாளிகளைப் பிடிக்கணும் என்கிற ஆர்வம் உங்களுக்கு இருந்திருந்தா அரை மணி நேரத்துக்கு முன்னாடியே இங்க வந்திருப்பீங்களே?

உங்க பத்திரிகை தாக்கப்பட்டதா எங்களுக்கு தகவல் வந்தப்பா நானும் இன்ஸ்பெக்டரும் ஸ்டேஷன்ல இல்லை. விபச்சார ஒழிப்புக்காக ஒவ்வொரு லாட்ஜா ரெய்டு சோதனை

போட்டுக்கிட்டு இருந்தோம். அதான் வர லேட்டு.

ஜவகர் அவரை ஏறிட்டான். சார், நீங்க போட்டிருக்கிற காக்கி யூனிபார்ம் மக்களோட வரிப்பணத்திலிருந்து வந்தது. வாங்கற சம்பளமும் மக்களோட வரிப்பணம் தான். ஆனால் நீங்கள் அந்த மக்களைப் பத்தி கவலைப்பட்டதில்லை. உங்க வீடுகளிலும் பெண்கள் இருக்காங்க ஆனால் பெண்களைப் பத்தி கவலைப்பட்டதேயில்லை. அவங்களோட கற்புக்கு ஆபத்து சமூக விரோதிகளினால் மட்டும் வர்றதில்லை. உங்களை மாதிரியான போலீஸ் அதிகாரிகளிடம் இருந்தும் வருது. மக்களைக் கொஞ்சம் கொஞ்சமா மறந்திட்டு — அரசியல்வாதிகளுக்கு தலையாட்டிக்கிட்டு இருக்கீங்க. சமூக விரோதிகளை காப்பாத்தத்தான் உங்க போலீஸ் இலாகாவே இயங்கிட்டிருக்கு. யூனிபார்மை மாட்டிக்கிட்டு

நிறுத்து! கத்திக்கொண்டே நாற்காலியிலிருந்து கோபமாய் எழுந்தார் அந்த இன்ஸ்பெக்டர். கண்கள் இரண்டும் ஜிவுஜிவுத்தன.

உன்னோட இஷ்டத்திற்கு எதையும் பேசிட்டிருக்காதே! அநியாயமோ அக்கிரமமோ அது எங்கே நடந்தாலும் சரி, போலீஸ் நடவடிக்கை எடுத்து உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிச்சுட்டுத்தான் இருக்காங்க. உன்னோட பத்திரிகை ஆபீஸ்ல என்னமோ தப்பு இருக்கு தேசவிரோத சக்திகளுக்கு நோட்டீஸ் அடிச்ச. ஏற்கனவே ஒரு புகார் உம்மேல இருக்கு. உனக்கும் அந்த தேச விரோத சக்திகளுக்கும் ஏதாவது தகராறு இருந்திருக்கலாம். அதான் பத்திரிகை ஆபீசை நிர்மூலப்படுத்திட்டு போயிட்டாங்க.

ஜவகர் கீதாவின் பக்கம் திரும்பினான். கீதா! இவர் கிட்டே பேசிட்டிருக்கிறதுனால ஒரு பயனும்இல்லை. செத்த பிணத்திற்கு ஆபரேஷன் பண்ற டாக்டர் மாதிரி— இங்கே எல்லாம் முடிஞ்சு போன பின்னாடி விசாரணை என்கிற பேர்ல ஜாலியா பேசிட்டு போக வந்திருக்கார். வா, நாம வைபவியைப் பார்க்கப் போலாம். இப்போ நமக்கு வைபவியோட உயிர்தான் முக்கியம்.

அவர்கள் இருவரும் ஸ்கூட்டரை நோக்கிப் போக அந்த சப்-இன்ஸ்பெக்டர் முறைத்துப் பார்த்தபடி நின்றிருந்தார்.

அரசாங்க பெரிய மருத்துவமனை, அந்த நடு நிசி நேரத்தில் ஒரு பாலைவனத்தின் அமைதியோடு காட்சியளிக்க, ஜவகரும், கீதாவும் ஸ்கூட்டரில் இருந்து இறங்கி — வராந்தாவில் ஓட்டமும் நடையுமாய் ஓடி, எதிர்ப்பட்ட அந்த நர்சைக் கேட்டார்கள்.



முகத்தில் திராவகம் பட்ட பெண் எந்த வார்டில் அட்மிட் ஆயிருக்கா?

அந்தப் பெண்ணுக்கு நீங்க என்ன வேணும்?

கீதா படபடென்று சொன்னாள். அவங்க என்னோட அண்ணிதான்.

நேரா இன்டென்சிவ் வார்டுக்கு போங்க. நர்ஸ் சொல்லிவிட்டு நகர்ந்து போக, கீதாவும், ஜவகரும் மறுபடியும் வராந்தாவில் ஓடி இன்டென்சிவ் வார்டை தொட்டார்கள். வார்டுக்கு நுழைகிற போதே ஜவகருக்கு ஓரளவு பரிச்சயமான அந்த டாக்டர் எதிர்ப்பட்டார்.

டாக்டர்—

அவர் கவலையாய் சொன்னார் — அடர் நைட்ரிக் அமிலம் உபயோகப்படுத்தியிருக்காங்க. சம்பவம் நடந்தப்ப நீங்க அங்கே இல்லையா ஜவகர்?

நானும் கீதாவும் வெளியே போயிருந்தோம் டாக்டர். மிகமிக மோசமான சம்பவம்.

வைபவி இப்போ எப்படியிருக்கா டாக்டர்?

இன்னும் நினைவு திரும்பலை. முகத்தோட வலது பக்கம்தான் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கு.

பார்க்கலாமா டாக்டர்?

வாங்க.

டாக்டர் கூட்டிக் கொண்டு வார்டுக்குள் போனார். சற்று உயரமான கட்டிலின் மேல் வைபவி படுக்க வைக்கப்பட்டிருந்தாள். தலையும், பாதி கழுத்தும் பாதி முகமும், கெட்டியான பாண்டேஜ்க்குள் புதைந்து போயிருந்தது. மார்பு பிரதேசம் மட்டும் சீரான சுவாசத்துல ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

கீதா பீறிட்டு வந்த அழுகையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் — சேலைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டாள். ஜவகரின் கண்களில் நீர் தத்தளித்தது.

டாக்டர்...? வைபவியோட உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லையே?

உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஆனால் கண், பார்வை பாதிக்கப்படலாம்னு நினைக்கிறேன். அமிலம் பட்ட காயங்கள் ஆறின பின்னாடிதான் எதையுமே தீர்மானமா சொல்ல முடியும்.

ஜவகரும் கீதாவும் கண்களில் நீர் கொப்பளிக்க, கட்டிலில் கிடக்கும் வைபவியையே இமைக்காமல் பார்த்தார்கள்.

சில விநாடிக்குப் பின் — டாக்டர் ஜவகரின் தோளைத்

தொட்டார். வெளியே வாங்க ஜவகர்! உங்ககூட கொஞ்சம் பேசணும்.

இருவரும் வார்டுக்கு வெளியே வந்தார்கள். டாக்டர் சொன்னார். பொதுவா இதுமாதிரியான அமில வீச்சு கேசுக்கெல்லாம் போலீஸ் உடனடியா வந்து – பேஷண்ட்கிட்டே வாக்குமூலம் வாங்குவாங்க. ஆனால் சம்பவம் நடந்து கிட்டதட்ட ஒரு மணி நேரமாகியும், ஒரு போலீஸ்காரர்கூட ஆஸ்பத்திரிக்கு வரலையே ஏன்?

வைபவியை இங்கே கொண்டு வந்து அட்மிட் பண்ணினது யார் டாக்டர்?

உங்க தெருவைச் சேர்ந்த யாரோ ரெண்டு பேர் அட்மிட் பண்ணினதும் உடனே போயிட்டாங்க.

நீங்க போலீசுக்கு போன் பண்ணலையா டாக்டர்?

சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும்போதே நர்சை விட்டு போன் பண்ணச் சொன்னேன். வர்றதா சொன்னாங்களாம். ஆனால் இன்னமும் வரலை.

ஜவகர் கசப்பாய் சிரித்தான்.

என்ன ஜவகர் சிரிக்கறீங்க?

போலீஸ் ஆசிர்வாதத்தோடுதான் – இந்த சம்பவம் நடந்திருக்கு.... டாக்டர்.... நோயாளி கண்ணை மூடினாத்தானே அவங்களுக்கு நல்லது?

போலீசுக்கும் உங்களுக்கும் என்ன தகராறு?

அநியாயத்துக்கும் நியாயத்துக்கும் நடக்கிற போராட்டம் இது டாக்டர்.

எனக்குப் புரியலை.

அந்தக் கவிதா நகர் கடைசித் தெருவில் நடந்த விபத்துக் கேசை வெளிச்சம் போட்டுக் காட்ட முயற்சிக்கிற எங்களை இருட்டுல தள்ளப் பார்க்கிறாங்க டாக்டர்–

அந்த சாந்தா கேசைத்தானே சொல்றீங்க?

ஆமா டாக்டர்.

எனக்கும் அதுதான் ஆச்சரியமாயிருக்கு. புதுசா வந்திருக்கிற தலைமை டாக்டர் சாந்தாவோட கேசில் ரொம்பவும் அக்கறை காட்டினார். அந்தப் பெண்ணோட உடல் நிலைமையில் ரெண்டு நாளைக்கு முன்னாடி நல்ல அபிவிருத்தி தெரிந்தது. ஆனால் இப்போ பழையபடி கோமா ஸ்டேஜில் இருக்கிறாள்.

அந்த சாந்தாவை வேணும்னே கோமா ஸ்டேஜில் வெச்சிருக்காங்க. டாக்டர் அவளுக்கு சுயநினைவு வந்து– உண்மையைச் சொல்ல ஆரம்பிச்சா, ஒரு பெரிய புள்ளியோட கைக்கு இரும்புக் காப்பு ஏற்படும். அதைத்



தடுக்கத்தான் சாந்தாவை கோமா ஸ்டேஜிலேயே வெச்சிருக்காங்க–

ஜவகர் பேசிக் கொண்டிருக்கும்போதே–

வராந்தாவில் பூட்ஸ் சத்தம் கேட்டது.

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் இரண்டு கான்ஸ்டபிள்களோடு வேகவேகமாய் வந்து கொண்டிருந்தார்கள். முகத்தில் கோபம் ஜிவுஜிவுத்தது. கையில் லத்தி சுழன்றது.

வாங்க இன்ஸ்பெக்டர்.

அந்தப் பொண்ணுக்கு இப்போ எப்படியிருக்கு டாக்டர்.

அபாய கட்டத்தை தாண்டிட்டா.

அட்மிட் பண்ணினது யாரு?

யாரோ ரெண்டு பேர் ஆட்டோவில் போட்டுக் கொண்டு வந்தாங்க. நான் பேஷண்ட்டுக்கு சிகிச்சை கொடுத்திட்டிருக்கும்போதே போயிட்டாங்க.

நோயாளியைப் பார்க்கலாமா?

வாங்க.

டாக்டர், இன்ஸ்பெக்டர் நவீன்ராஜை வார்டுக்குள் கூட்டிப் போக, ஜவகர் தொய்வாய் நடந்து போய் வெள்ளை பெயிண்ட் அடித்திருந்த நீளமான பெஞ்சின் நுனியில் தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்தான். மனசுக்குள் யோசனைகள் பிறிட்டன.

ஒரே இராத்திரியில் பத்திரிகை ஆபீசையும் – வைபவியையும் நாசம் பண்ணியிருக்கிறார்கள். இந்த அக்கிரமத்தை எங்கே போய் முறையிட்டால் நியாயம் கிடைக்கும்?

யார் அந்த சக்தி வாய்ந்த அம்மா?

அவளை எதிர்த்து நிற்க முடியுமா?

ஜவகரின் மனசுக்குள் முதன் முதலாய் ஒரு பயம் வந்து அடிவயிற்றைக் கலக்கியது. கண்களில் கண்ணீர் கீறிக் கொண்டு புறப்பட்டது. தர்மத்தினை சூது கவ்வும். தர்மம் மறுபடியும் வெல்லும் என்பதெல்லாம் பொய்தானோ? குற்றவாளிகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர முடியுமா?

யோசனையில் நிமிடங்கள் ஓடிக் கொண்டிருந்தபோது–

அவன் தோள் மேல் மிருதுவாய் ஒரு கை விழுந்தது. ஜவகர் கண்ணீரோடு நிமிர்ந்தான்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் நின்றிருந்தார். மெல்லிய குரலில் சொன்னார். ஜவகர்! எந்திரிச்சு என்கூட வாங்க.

சார்_

பயப்படாதீங்க. நான் பழைய நவீன்ராஜ் இல்லை. உங்களுக்காக இப்போ உதவி செய்யப்போகிற புது நவீன்ராஜ்.

சார்_

வாங்க வராந்தாவில் நடந்துகிட்டே பேசுவோம்_

ஜவகர் திகைப்பாய் எழுந்து நவீன்ராஜோடு நடந்தான். அவர் தொப்பியைக் கழற்றி கக்கத்தில் இடுக்கிக் கொண்டு சொன்னார். ஜவகர்! உங்களை மாதிரி உண்மைக்காகப் போராடுகிற ஆளை நான் பார்த்ததே இல்லை. இந்த உறுதிதான் எம் மனசை மாத்தியிருக்கு.

கவிதா நகர் கேசுல நீங்க காட்டுற தீவிரம் — அரசியல்வாதியான ஒரு பெண்ணுக்குப் பிடிக்கலை. அதான் இவ்வளவு தொந்தரவுகள். உங்க பத்திரிகை ஆபீஸ் நொறுக்கப்பட்டிருக்கிறதும்.... வைபவியோட முகம் அமிலத்தாலே சிதைக்கப்பட்டிருக்கிறதும்.... ஆரம்ப தொந்தரவுகள். நீங்கள் இன்னமும் தீவிரம் காட்டினா அந்த தொந்தரவுகள் தொடரும். இந்த கட்டத்துலதான் நான் மனசு மாறியிருக்கேன். உங்களுக்கு உதவியும் பண்ணப்போறேன்.

உதவியா?

எஸ். காட்டாற்று வெள்ளத்துல நீச்சல்போட்டு கரையேற முடியாது. ஆற்றோடு போக்கிலேயே போய்த்தான் கரையேறணும். அரசியல் சக்தி வாய்ந்த அந்த அம்மாவை எதிர்க்கிறதுக்கு உங்களாலே முடியாது. நான் சில வழிமுறைகளை சொல்லித் தர்றேன். அதன்படி நடந்தா வெற்றி உங்க பக்கம்.

ஜவகர் குழப்பமாய் நவீன்ராஜைப் பார்க்க அவர் தொடர்ந்தார். என்னை நம்பறதா வேண்டாமான்னு உங்களுக்குள்ளே ஒரு தடுமாற்றம் இருக்கும். என்னை தாராளமா நம்பலாம். என்னோட மனசு மாறினதுக்கு காரணம் ரெண்டே ரெண்டுதான். ஒண்ணு சப்—இன்ஸ்பெக்டர் ஆனந்த் அந்த அம்மாவோட ஆட்களாலே அநியாயமா கொலை செய்யப்பட்டது. இரண்டு... உங்க பத்திரிகை ஆபீசை துறையாடி..... வைபவி மேல் திராவகத்தை வீசியது. இந்த இரண்டு கொடுமையும்தான் என்னை மனிதனா மாத்தியிருக்கு. கொலையாளிகளை வெளிச்சத்துக்கு கொண்டு வர்ற முயற்சியில் இந்த



நிமிஷத்திலிருந்து உங்களுக்கு உதவி புரிய காத்திட்டிருக்கேன். இந்த ஒப்பந்தம் நமக்குள்ளே மட்டும் இருக்கட்டும். வெளியில் யாருக்கும் தெரிய வேண்டாம். தெரிஞ்சா_ ஆனந்துக்கு ஏற்பட்ட அதே கதிதான் எனக்கும் ஏற்படும். நவீன்ராஜ் பேசி முடித்ததும்_

ஜவகர் மெல்லிய குரலில் கேட்டான்.

சார்... அம்மான்னு சொல்றீங்களே? அந்த அம்மா யாரு— ? அவங்க பேரென்ன?

நவீன்ராஜ் பெயரைச் சொல்ல—

ஜவகர் உச்சபட்ச அதிர்ச்சிக்குப் போனான்.

## 22

ஜவகர் ஆச்சரியமான குரலில் கேட்டான். சார்! நீங்க சொல்றதை என்னால் நம்ப முடியலை... இத்தனை நாசங்களுக்கும் காரணம் எம்.பி. மங்களா தேவியா?

நவீன்ராஜ் கசப்பாய் புன்னகைத்தார். சுற்றும் முற்றும் பார்த்தபடி மெல்லிய குரலில் சொன்னார். அந்த அம்மாவேதான் காரணம்.

ஜவகரின் மனதில் சென்ற வாரம் எங்கோ பார்த்த மங்களாதேவியின் பிறந்த நாள் வாழ்த்துப் போஸ்டரில் இருந்த வாசகங்கள் ஊர்வலம் போயின.

மாரியும் பொய்க்கலாம்
பாரியும் இன்று
உயிரோடு இருந்தால்—
இல்லை என்று சொல்லி
கைவிரித்திருப்பான்
ஆனால் — எங்கள்
உயிர்க்கு உயிராம்
எம் தலைவி நீயோ
இன்று வாரி வாரி
வழங்குகிறாய் 50—வது
பிறந்த நாள் காணும்
நீ அகிலம் உள்ளளவும்
வாழ்வாய்!

என்ன ஜவகர் அப்படியே பிரமிச்சுப் போயிட்டீங்க?

சார்... நீங்க சொன்னதை இன்னமும் என்னால நம்ப முடியலை. அந்த மங்களாதேவி எம்.பிக்கு ஊர்ல எவ்வளவு நல்ல பேர் இருக்கு. செத்துப்போன கணவரோட ஞாபகார்த்தமான... பள்ளிக்கூடம். ஆஸ்பத்திரி எல்லாமே கட்டியிருக்காங்களே... சார்?

அதெல்லாம் மக்களை ஏமாத்தறதுக்காக. தேர்தல் வந்தால் ஓட்டுக்களை வாங்கறதுக்காக! போலீஸ் இலாகாவில் இருக்கிற எங்களுக்குத்தான் அந்த அம்மாவைப் பற்றி தெரியும். அந்த அம்மாவை பகைச்சுகிட்டா எவன் ஒருத்தனும் இந்த தமிழ்நாட்டுல நிம்மதியா இருக்கவே முடியாது—

ஜவகர் மெல்ல கேட்டான். மோகன் சாந்தா தம்பதிமேல் அந்த அம்மாவுக்கு என்ன கோபம்? எதுக்காக அந்தகவிதா நகர் விபத்து...? சாரி கொலை...?

அதுக்கான காரணம் எங்களுக்கும் தெரியலை.. ஜவகர், சம்பவம் நடந்த அன்னிக்கு ராத்திரியே எல்லா போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் அந்த அம்மாவோட பி.ஏ. மூலமா தகவல் வந்துடுச்சு. விபத்து சம்பந்தமா யார் புகார் பண்ணினாலும் வாங்கக்கூடாதுன்னு—

அதான் காரை வாரியா மாத்தினீங்களா?

வேற வழி? அந்த அம்மாவுக்கு தமிழ்நாட்டுல மட்டுமில்லை.. டெல்லி வரைக்கும் எல்லா மட்டத்திலேயும் ஆட்கள் இருக்காங்க. மாதத்துக்கு ரெண்டு தடவை பிரதம மந்திரியை அவர் சந்திச்சுப் பேசுவார்.

ஜவகர் முகம் சிவந்தான். செல்வாக்கு இருக்கு என்கிறதுக்காக இப்படியொரு அநியாயத்தை அந்த அம்மா பண்ணலாமா சார்?

நான்தான் ஏற்கனவே சொன்னேனே? அந்த அம்மாவை எந்த காரணத்துக்காக பகைச்சிகிட்டாலும் சரி, அவங்க நிம்மதியா இருக்க முடியாது. உயிரோடவும் இருக்க முடியாது. மோகனும் சாந்தாவும் ஏதோ ஒரு வகையில் அந்த அம்மாவை சீண்டி விட்டிருக்காங்க. அதான் காரைக் கொண்டுபோய் மோதியிருக்காங்க—

சார் நான் இந்த விஷயத்துல மேற்கொண்டு என்ன பண்ணனும்? எப்படி மூவ் பண்ணினால், என்னால் அவங்களை மடக்க முடியும்?

நவீன்ராஜ் பெருமூச்சு விட்டார். இப்போ இருக்கிற தமிழ்நாட்டு அமைச்சர்களில் சமூகப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கிற சத்தியமூர்த்தியை நீங்க சந்திச்சு இந்த விவரத்தை சொன்னால் அவர் ஏதாவது செய்வார். ஏன்னா அந்த அம்மாவை கட்சி மேடைகளில் தைரியமா தாக்கிப் பேசக்கூடியவர் அவர் ஒருவர்தான்.

ஜவகர் மெல்லச் சிரித்தான்.

ஏன் சிரிக்கிறீங்க?

அந்த மங்களாதேவிக்கு பிரதமரோடு அவ்வளவு



நெருக்கம் இருக்கும்போது — நம்ம தமிழ்நாட்டு அமைச்சராலே என்ன பண்ண முடியும் சார்?

அந்த அம்மாவுக்கு பிரதமர் பக்கபலமா இருக்கலாம். ஆனால், நம்ம பக்கம் சட்டமும், நியாயமும் பக்கபலமாக இருக்கே!

வேண்டியதில்லை. நாளைக்கு அவரே இங்கே சமுதாய மேம்பாட்டு வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை தொடங்கி வைக்க வர்றார். நாளைக்கு ராத்திரி எட்டு மணிக்கு மேலே சர்க்யூட் அவுசில் அவரை நீங்க பார்த்துப் பேசலாம்.

அப்பாய்ண்மெண்ட் கிடைக்குமா சார்?

அந்த சத்தியமூர்த்தி பந்தாவெல்லாம் பண்ணிக்க மாட்டார். யார் வேணுமின்னாலும் பார்க்கலாம். அவர் ஒரு வித்தியாசமான அமைச்சர்.

ஜவகர் நெகிழ்ச்சியோடு நவீன்ராஜின் கைகளைப் பற்றிக் கொண்டான். சார்.. இந்த அளவுக்கு நீங்க மனசு மாறி எங்களுக்கு உதவி செய்வீங்கன்னு நான் நினைச்சே பார்க்கலை சார்...

காரியம் வெற்றிகரமாக முடியட்டும். நீங்க சொல்ற எல்லா நன்றியையும் ஒட்டு மொத்தமா ஏத்துக்கிறேன்.

சொன்ன நவீன்ராஜ் மெல்லச் சிரித்தபடி — ஜவகரின் தோளைத் தட்டிக் கொடுத்தார். — வாங்க லைப்ரரியைப் போய்ப் பார்க்கலாம்.

மறுநாள் இரவு எட்டரை மணி. சர்க்யூட் அவுஸ் அமைச்சர் சத்தியமூர்த்தி தோளில் போட்டிருந்த கட்சிக் கரைத் துண்டால் முகத்தை ஒற்றிக்கொண்டே, ஜவகரும் கீதாவும் மாறி மாறி சொன்னதைக் கேட்டார் — கவலையாய் மோவாயைத் தாங்கினார். பெருமூச்சுவிட்டபடி —

சொன்னார். அங்க மங்களாதேவிக்கு போலீஸ் உடந்தையாய் இருந்திருக்காங்க...?

ஆமா சார்—

மோகன் — சாந்தா மேல மோதின காரை அந்த அம்மாவோட ஜின்னிங் பேக்டரியில்தான் பார்த்தீங்களா?

ஆமா சார்..

அந்தக் காரை போட்டோ எடுத்திருக்கிறதா சொன்னீங்களே? அந்த போட்டோவெல்லாம் வெச்சிருக்கீங்களா?

வெச்சிருக்கேன் சார்.

எங்கே எடுங்க பார்க்கலாம்.

ஜவகர் தன் தோளில் மாட்டியிருந்த ஜோல்னா பையிலிருந்து ஒரு பழுப்பு நிறக்கவரை எடுத்து அவரிடம்

நீட்டினான். அவர் வாங்கிப் போட்டோக்களைப் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் கேட்டார். இந்த கார்தான் மோகன் சாந்தாமேல் மோதினதா?

ஆமா சார்.

அதை எப்படி நிரூபிப்பீங்க?

கார் குப்பைத் தொட்டி மேல் மோதியிருக்கிற அடையாளம் இருக்கு சார்.

கவிதா நகர் கடைசித் தெருவுல மட்டும்தான் குப்பைத் தொட்டி இருக்கா? வேற எங்கேயும் இல்லையா?

சார்.. பதில் சொல்ல முடியாமல் திணறினான் அவன்.

தம்பி! நீங்க என்ன அடையாளங்களைக் காட்டினாலும் அந்த மங்களாதேவி அதை நொறுக்கிடுவா. அவளை இந்தக் கேசில் மாட்ட வைக்கணும்னா, சாந்தாவோட அம்மாவும், அப்பாவும் அவள் மேல போலீசுல புகார் தரணும். அந்தப் புகாரை வெச்சே நாம அவளை கோர்ட்டுக்கு இழுத்துடலாம். சாந்தாவோட அம்மாவும் அப்பாவும் அவள் மேல புகார் மனு தருவாங்களா?

அவங்க தரமாட்டாங்க சார்..

ஏன்?

காரணம் என்னன்னு தெரியலை. அந்த காரணத்தை வெளியே சொல்லவும் பயப்படறாங்க. நான் ஒரு தடவை அனுப்பிப் பார்த்துட்டேன்.

என்ன சொன்னாங்க?

விஷயத்தை வெளியே சொன்னா.. அவங்களோட மத்த இரண்டு மகளுக்கு ஆபத்து வருமாம். அந்த மங்களாதேவி மிரட்டியிருக்கலாம்னு நினைக்கிறேன்.

அமைச்சர் சத்தியமூர்த்தி சில விநாடி நேரம் மவுனமாக இருந்தவர் உள் அறையைத் திரும்பிப் பார்த்து குரல் கொடுத்தார்

ராகவன்...

உள்ளேயிருந்து ராகவன் வந்தான்... ராகவன் அருடைய உதவியாளர்.

சார்..

போன்ல எஸ்.பி.யைப் பிடி. நான் பேசணும்னு சொல்லு. லைன் கிடைச்சதும் டெலிபோனை இங்கேயே கொண்டு வா..

சரி சார்..

உதவியாளர் ராகவன் உள்ளே போய் ஐந்து நிமிடம் கழித்து டெலிபோனை தூக்கிக் கொண்டு வந்தார்.



சார்.. எஸ்.பி. லைன்ல இருக்கார்.

சத்தியமூர்த்தி ரிசீவரை வாங்க அலோ.. என்றார்.

எஸ்பி மறுமுனையில் பவ்யமாகி வணக்கம் சார் என்று குரல் கொடுத்தார்.

வணக்கம்! உங்கக்கிட்டேயிருந்து ஒரு தகவல் வேணும்.

சொல்லுங்க சார்..

கவிதா நகர் கடைசித் தெருவுல சில நாட்களுக்கு முன்பு ஒரு புதுமணத் தம்பதி மேல் கார் மோதினதாகவும் .. அதுல கணவன் இறந்துவிட்டதாகவும் செய்தி கேள்விப்பட்டேன். உண்மையா?

ஆமா சார். ஆனால், மோதினது கார் இல்லை. ஒரு லாரி. அந்த லாரி டிரைவரை தேடிக்கிட்டிருக்கோம்.

இந்த போலீஸ் உத்தியோகப் பதிலெல்லாம் என்கிட்ட சொல்லிட்டிருக்காதீங்க சூப்ரெண்ட் சார். மோதினது கார்தான். அதுவும் விபத்தில்லை. வேணுமின்னே திட்டமிட்டு அந்த புதுமணத் தம்பதி மேலே மோதப்பட்டார். நான் சொல்றது சரியா?

ச..சார்..

எனக்கு எல்லாம் தெரியும். அந்த கார் மங்களாதேவி அம்பிக்கு சொந்தமானதுதானே?

மறுமுனையில் மவுனம்.

சத்தியமூர்த்தி எரிச்சலான குரலில் கேட்டார். என்ன பேச்சையே காணோம் எஸ்.பி. சார்?

சார்! அந்த விபத்தை கண்டுக்க வேண்டாம்னு மேலிடத்திலிருந்து உத்தரவு சார்?..

மேலிடம்ன்னா யாரு?

சாரி, சார்.. அதை வெளியே சொல்லக்கூடாதுன்னு உத்தரவு எங்களுக்கு.

போலீஸ் அதிகாரி நீங்களே இப்படி நடந்துகிட்டா.. பொதுமக்கள் எங்களைத்தனே குறை சொல்லிப் பேசுவாங்க?

எனக்கு வர்ற கட்டளைப்படிதானே சார் நான் நடக்க முடியும்? அவங்க கட்டளையை மீறி நடந்தால் நான் வேலையில் இருக்க முடியாதே?

இப்ப நான் ஒரு மந்திரி என்கிற முறையில் உங்களுக்கு ஒரு கட்டளையிடலாமா?

சொல்லுங்க சார்.

வேடப்பட்டிக்கு போகிற ரோட்டில் மங்களாதேவிக்கு சொந்தமான ஒரு பங்களில் இருக்கு. நீங்க இப்பவே போலீஸ் படையோடு போய் — அந்த மில்லை சோதனை

பண்ணனும்.

எதுக்கு சார்?

புதுமணத் தம்பதிகளின் மேல் மோதினக் கார் அந்த பங்க பில்டிங்லதான் இருக்காம். நீங்க உடனடியாக போய் காரை கைப்பற்றுங்க.

ச..சார்?

பேசிட்டிருக்காதீங்க... சொன்னதைச் செய்யுங்க_ கோபமாய் கத்திவிட்டு ரிசீவரை சாத்தினார் அமைச்சர் சத்தியமூர்த்தி. முகத்தில் பொடித்திருந்த வியர்வையை மேல் துண்டால் ஒற்றிக் கொண்டு, ஜவகரையும் கீதாவையும் ஏறிட்டார்.

இனிமேல்தான் பார்த்துக்கிறேன். தம்பி! எந்த டெல்லி மந்திரி தலையிட்டாலும் சரி, அந்த மங்களாதேவியை இனிமே காப்பாத்த முடியாது. இந்த போட்டோவெல்லாம் என்கிட்டேயே இருக்கட்டும். நம்ம முதலமைச்சர் கிட்டே காட்டினால் அவர் இன்னமும் தன் செல்வாக்கை காட்டி, ஏதாவது முயற்சி எடுப்பார்.

ரொம்பவும் நன்றிசார்.

அந்த பொண்ணு வைபவிக்கு இப்போ எப்படியிருக்கு?

முகத்தோட வலது பக்கம் மிகமிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருக்கு சார்.

இந்த அநியாயத்துக்கெல்லாம் அந்த அம்மா பதில் சொல்லியே ஆகணும். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் மறுபடியும்வெல்லும் என்கிறதை அந்த எம்பி. அம்மாவுக்கு காட்டணும். நீங்க போயிட்டு நாளைக்கு காலையில வாங்க. உங்களுக்கு ஒரு நல்ல முடிவு காத்திட்டிருக்கும்.

நன்றி சார்.

கைகளைக் குவித்துவிட்டு, ஜவகரும், கீதாவும் அறைக்கு வெளியே போனதும் அமைச்சர் உள் அறைப் பக்கமாய் திரும்பி குரல் கொடுத்தார்.

ராகவன்.

சார்_ அவர் எட்டிப் பார்த்தார். போய் கதவை சாத்திட்டு வா.

அவர் அறைக் கதவைச் சாத்திவிட்டு வருவதற்குள் மேஜையின் மேலிருந்த அந்தக்கவரை எடுத்தார் சத்தியமூர்த்தி. காரின் பல்வேறு தோற்றத்தைக் கொண்ட புகைப்படங்களையும், நெகடிவ்களையும் வெளியே எடுத்தார். உயர்த்திப் பிடித்தார்.



ராகவன்! அந்த தீப்பெட்டியை எடு.

உதவியாளர் ராகவன், தீப்பெட்டியை எடுத்துக் கொடுக்க, அதிலிருந்து ஒரு குச்சியை எடுத்து உரசி — உதித்த தீப்பிழம்புகளுக்கு ஒவ்வொரு போட்டோவாய் — நெகடிவ்வாய் தின்னக் கொடுத்தார் அமைச்சர் சத்தியமூர்த்தி.

# 23

பாதி ரணமான முகத்தோடு புலம்பினாள் வைபவி. ஆபிஸ்ல இருந்த ஒவ்வொரு பொருளையும் நாசமாக்கிவிட்டு போயிட்டாங்க ஜவகர், என்னால அவங்களை எதிர்த்து ஒண்ணுமே செய்ய முடியலை. இடம் ஆஸ்பத்திரி. நேரம் சாயந்தரம் ஆறு மணி.

ஜவகரும் கீதாவும் வைபவியின் கைகளைப் பற்றிக் கொண்டார்கள். ஜவகர் சொன்னான். இதோ பார் வைபவி! நீ மனசைப் போட்டு அலட்டிக்க வேண்டாம் நம்ம ஆபிஸில் இருந்த எல்லா அச்சு எந்திரங்களையும் இன்சூரன்ஸ் பண்ணியிருக்கோம். புது எந்திரங்களை வாங்க இன்சூரன்ஸ் கம்பெனி அடுத்த மாதம் பணம் தர்றதா சொல்லியிருக்காங்க. எந்த வகையில் பார்த்தாலும் நமக்கு பொருள் இழப்பு கிடையாது. என்னோட வருத்தமெல்லாம் உன்னைப் பத்தித்தான். உன்னோட முகத்தை சிதைச்ச அந்த பாவிகளை கோர்ட் கொண்டுபோய் நிறுத்தாமல் விடமாட்டேன்.

டாக்டர் அறைக்குள் நுழைந்தார். ஜவகர் நோயாளியை அதிகமாக பேசவிடாதீங்க_ ஓய்வு எடுக்கணும்_

சாரி டாக்டர்_

நீங்க மொதல்ல கிளம்புங்க... நீங்க இங்க இருந்தா வைபவி பேசிகிட்டே இருப்பாங்க_

ஜவகரும் கீதாவும் வைபவியிடம் விடைபெற்றுக் கொண்டு அறையிலிருந்து வெளிப்பட்டார்கள்.

அதே விநாடி —

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் வராந்தாவில் வேகவேகமாய் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அண்ணா! இன்ஸ்பெக்டர் வர்றார்.

அவர் வர்ற வேகத்தைப் பார்த்தால்_ என்னவோ முக்கியமான தகவல் இருக்குன்னு என் மனசுக்குப் படுது.

நவீன்ராஜ் நெருங்கினார்.

ஜவகர்.

சார்_

அப்படி ஓரமா வாங்க.. உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்.. சொல்ல வராததாவின் ஓரமாய் தான் அருகே நின்று கொண்டார்கள்.

என்ன விஷயம் சார்?

அமைச்சர் சத்தியமூர்த்தியைப் போய்ப் பார்த்தீங்களா?

பார்த்தோம் சார்..

என்ன சொன்னார்?

குற்றத்தை யார் செஞ்சிருந்தாலும் சரி.. அவர் தண்டிக்கபட ணும்.. மங்களாதேவி விவகாரத்தை நான் பார்த்துக்கிறேன்னு சொன்னார்.

நவீன்ராஜ் உதட்டோரம் கசப்பாய், ஒரு சிரிப்பு தவழவிட்டார். ஜவகர் நெற்றியைச் சுருக்கினான். ஏன் சிரிக்கிறீங்க?

அமைச்சர் சத்தியமூர்த்தியைப் பற்றி நான் போட்டு வெச்சிருந்த கணக்கு தப்பாயிடுச்சு.. ஜவகர்.

சார்.. நீங்க என்ன சொல்றீங்க?

மங்களாதேவி சார்ந்திருக்கிற கட்சியும், அமைச்சரோட ஆளும் கட்சியும் வரப்போகிற தேர்தலில் கூட்டணி வெச்சிருக்கிறதா ஏற்பாடு. அதனால சத்தியமூர்த்தி மங்களாதேவி விஷயத்துல தலையிட மாட்டார். விஷயம் எனக்கு கொஞ்ச நேரத்துக்கு முந்திதான் தெரியவந்தது.

உங்களுக்கு யார் சார் சொன்னாங்க?

அமைச்சரோட உதவியாளர் ராகவன். எனக்கு நல்ல பழக்கம். அவர்தான் எனக்குப் போன்பண்ணி விஷயத்தைச் சொன்னார். நீங்க கொடுத்த போட்டோக்களையும் அதனோட நெகடிவ்களையும் அந்த நிமிடமே எரிச்சிட்டாராம்.

ஜவகர் ஆவேசப்பட்டான். குரல் கோபமாய் வெளிப்பட்டது. சார்! நான் இப்பவே.. அந்தப் பெரிய மனிதனைப் போய் பார்த்து நாலு வார்த்தை நறுக்குன்னு கேட்டுட்டு வர்றேன்.

நவீன்ராஜ் ஜவகரின் கையைப் பற்றிக் கொண்டார். ஆள் சென்னைக்குப் போயிட்டார். இனிமே நீங்க அவரை சந்திக்க முடியாது. அப்படியே மீறி நீங்க சந்திச்சாலும் உங்களை தெரிஞ்ச மாதிரி அவர் காட்டிக்க மாட்டார்.

இவனெல்லாம் ஒரு மந்திரி.. த்தூ! என்று சொல்லி பக்கத்திலிருந்த எச்சில் தொட்டியில் காரித் துப்பினான் ஜவகர். அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டான். நவீன்ராஜ் அவன் தோளில் கையை வைத்தார். மெல்லிய



குரலில் கேட்டார்.

இன்னொரு விஷயம் உங்களுக்குத் தெரியுமா ஜவகர்?

என்ன சார்?

அந்த மங்களாதேவி இப்போ இந்த ஊரில்தான் இருக்கா?

அப்படியா? டெல்லி போகலையா?

டெல்லி பயணம் ரத்தாகிவிட்டதாம்.

இந்த ஊரில் எங்கே தங்கியிருக்காங்கன்னு உங்களுக்கு தெரியுமா சார்?

ஓட்டல் சிட்டி டவர்.

ஜவகர் தன் தங்கையின் பக்கம் திரும்பினான். கீதா அந்த அம்மாவைப் போய்ப் பார்க்கலாமா?

பார்த்து என்ன பிரயோஜனம்?

பார்த்துப் பேசலாம். ஒரு பெண்ணா இருந்துகிட்டு இப்படி அரக்கத்தனமா நடந்துக்கறீங்களே? இது நியாயமான்னு கேட்கலாம்.

நவீன்ராஜ் தீர்க்கமாய் தலையாட்டினான். அந்த அம்மாவை நீங்க பார்க்கவே முடியாது ஜவகர். ஒரு டெல்லி மந்திரிக்கு என்ன பாதுகாப்பு இருக்குமோ அந்த அளவுக்கு அந்த அம்மாவுக்கு இருக்கும்.

நேர்வழியில் போனாத்தானே அனுமதி கிடைக்காது? குறுக்கு வழியில் போனால் எப்படியும் பார்த்துவிடலாம்.

ஜவகர்! அந்த அம்மாவைப் போய் நீங்க பார்க்கத்தான் வேணுமா?

கண்டிப்பா.

நவீன்ராஜ் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் கீதாவோடு சிட்டி டவரை நோக்கிப் புறப்பட்டான் ஜவகர்.

ஓட்டல் சிட்டி டவர்.

ஓட்டலின் வரவேற்பறை சோபாக்களில் கட்சி ஆட்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜவகர் கவுண்டரில் போய் விசாரித்தான்.

மங்களாதேவி எந்த அறையில் தங்கியிருக்காங்க?

ஐந்தாம் நெம்பர் சூட்..

நாங்கள் பத்திரிகை நிருபர்கள். அந்த அம்மா எங்களை ஒரு பேட்டிக்காக வரச் சொல்லியிருந்தாங்க.

வரச் சொல்லியிருந்தா போய் பாருங்கள்.

நன்றி சொல்லிவிட்டு ஜவகர், கீதாவோடு லிப்டில் பயணித்து ஐந்தாம் நெம்பர் சூட்டுக்கு வந்தான்.

சாத்தப்பட்ட கதவுக்கு வெளியே நல்ல உயரத்தில் இரண்டு பேர் நின்றிருந்தார்கள். ஜவகர் அவர்களை

நெருங்கினான்.

மேடத்தைப் பார்க்கணும்.

யார் நீ? இரண்டு பேரில் ஒருவன் கேட்டான்.

பத்திரிகை நிருபர்.

எந்த பத்திரிகை?

இந்தியாவில் பிரபலமாக உள்ள ஓர் ஆங்கில பத்திரிகையின் பெயரைச் சொன்னான் ஜவகர்.

மேடம் வரச் சொல்லியிருந்தாங்களா?

ஆமாம்.

இரு நான் போய் கேட்டுவிட்டு வர்றேன். சொல்லியபடி கதவைத் திறந்து கொண்டு உள்ளே போக அந்த விநாடியை உபயோகப்படுத்திக் கொண்டு ஜவகரும் கீதாவும் அவனைத் தொடர்ந்து உள்ளே போக முற்பட்டார்கள்.

ஏய், நில்லு. மேடம் வரச்சொன்னாத்தான் உள்ளே போகணும். அவன் பிடித்துத் தள்ள ஜவகர் அவனோடு சின்ன கைகலப்புக்குத் தயாரானபோது உள்ளேயிருந்து பெண்ணின் குரல் கேட்டது.

சுதாகர்! அங்கே என்ன கலாட்டா?

மேடம். உங்களைப் பார்க்கிறதுக்காக ரெண்டு பேர் வலுக்கட்டாயமா உள்ளே வர முயற்சி பண்றாங்க.

அவங்களை விடு.

அவன் விட ஜவகரும் கீதாவும் அறைக்குள் நுழைந்தார்கள். கதவு பின்பக்கமாய் மெல்ல சாத்திக் கொண்டது.

பணக்காரத்தனமாய் தெரிந்த அந்த அறையின் மையத்தில் குஷன் நாற்காலியொன்றில் வெண்ணெய் நிறத்தில் அந்த மங்களாதேவி தெரிந்தாள். நடுத்தர வயது. பாப் தலை. உதட்டில் லிப்ஸ்டிக் பூச்சு. கையில்லாத ரவிக்கை. ஜரிகை அதிகமில்லாத பட்டுச் சேலையை உடம்புக்குக் கொடுத்து அலட்சியமாய்க் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்திருந்தாள். எதிரேயிருந்த நாற்காலியில் ஓர் இளைஞன் அடர்த்தியான தலை - கிராப்போடு தெரிந்தான். குளிர் கண்ணாடியை கையில் வைத்து சுழற்றிக் கொண்டிருந்தான்.

மங்களாதேவி புன்னகைத்தாள்.

வா - ஜவகர். நீயும் உன்னோட தங்கச்சியும் இந்த ஓட்டலுக்குள்ளே நுழையும்போதே எனக்கு தகவல் வந்தாச்சு.

என்ன விஷயம்? ஏதாவது மனு கொடுக்க வந்தியா?

ஜவகர் அவளையே இமைக்காமல் கோபமாய்



பார்த்தான். மங்களாதேவி அதே புன்னகையோடு கேட்டாள்.

என்ன அப்படி பாார்க்கிறே ஜவகர்?

நீங்க ஒரு பொண்ணுதானான்னு பார்க்கிறேன்.

டேய்! மங்களாதேவிக்கு எதிரே உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் சட்டென்று எழுந்து ஜவகரின் சட்டையைப் பிடித்தான்.

மங்களாதேவி குறுக்கிட்டாள். டேய் பிரவீன்! நீ பேசாமல் இரு! ஜவகருக்கு எம்மேல நிறைய கோபம். பேசட்டும். வா - ஜவகர் இப்படி உட்கார். நீயும் வாம்மா கீதா.

அந்த இளைஞன், தனித்துப் போய் உட்கார மங்களாதேவி புன்னகையோடு சொன்னாள். ஜவகர்! பிரவீன் என்னோட மகன். அவனுக்கு உன்னை மாதிரிதான் சட்டுன்னு கோபம் வரும். சரி என்னை எதுக்காகப் பார்க்க வந்திருக்கே?

கவிதா நகர் கடைசித் தெருவில் நீங்க நடத்தின கொலையைப் பத்தி பேச வந்திருக்கேன்.

மங்களாதேவி நெற்றியைச் சுருக்கினாள்.

கவிதா நகரா? அது எங்கே இருக்குன்னே எனக்குத் தெரியாதே?

இந்தப் பசப்பல் பேச்செல்லாம் என்கிட்டே வேண்டாம். கல்யாணமாகி ஒரு வாரம் கூட ஆகாத அந்த மோகன் சாந்தா மேல் உங்களுக்கு என்ன கோபம்? அந்தப் பொண்ணோட பொட்டையும் பூவையும் ஏன் பறிச்சீங்க?

மோகன் — சாந்தாவா யாரது?

மோகன் சாந்தாவை உண்மையாகவே உங்களுக்குத் தெரியாதா?

தெரியாது!

ஜவகர் பொரிந்தான். இப்படியெல்லாம் தெரியாதுன்னு சொல்லி சுலபமா தப்பிச்சுட முடியாது மிசஸ் மங்களாதேவி. உங்களுக்கு இருக்கிற அரசியல் செல்வாக்கை உபயோகப்படுத்தி செஞ்ச அக்கிரமத்தை கொஞ்ச நாள் மறைக்கலாம். ஆனால் எப்பவுமே மறைக்க முடியாது. சூரியனை மேகங்கள் நிரந்தரமா மூடி மறைக்க முடியாது. மறைச்சதா சரித்திரமும் கிடையாது.

அட அழகான உவமேயம் எல்லாம் சொல்றியே? பரவாயில்லை. பத்திரிகை ஆபீஸ் இல்லேன்னாலும் கவிதை எழுதியே பொழைச்சுக்குவே—

கீதா கோபமாய் குறுக்கிட்டாள்.

ஒரு பெண்ணோட வாழ்க்கையை நாசம் பண்ணின நீங்க அதுக்கான தண்டனையை அனுபவிச்சுதான் ஆகணும்.

டேய்! பிரவீன்! பத்தினி சாபம் கொடுக்கிறா?

பத்தினி சாபம் கொடுத்தால்தானே பலிக்கும்? இவளோட பத்தினித் தன்மையினை பத்து பேருக்கு பங்குபோட்டு கொடுத்துட்டா?

என்னடா சொன்ன ராஸ்கல்!

ஜவகர் ஆவேசமாய்க் கத்திக்கொண்டே பிரவீன் மேல் பாய பிரவீன் அவனைத் தடுத்து நிறுத்தினான். சொன்னான். அந்த சாந்தா மோகன் மேலே காரைக் கொண்டு போய் மோதினது நான்தான். உன்னால என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்க இப்போ மரியாதையா வெளியே போ.

## 24

ஜவகர் திமிர்ந்தான். கண்களில் கனல் பறந்தது. கடைவாயில் கோபத்தை அரைத்தபடி கேட்டான். எதுக்காக காரை அவங்கமேல மோதினே?

சட்டையை விடுவித்துக்கொண்டே, பிரவீன் சிரித்தான். ஜவகரின் கையை தட்டிவிட்டுக் கொண்டே சொன்னான். அவங்க ரெண்டு பேரும் இந்த உலகத்துல வாழக்கூடாதுன்னு நினைச்சேன். அதனால காரைக் கொண்டு போய் மோதினேன். ஆனால் அதிர்ஷ்டவசமா அவள் தப்பிச்சுட்டா. இந்தக் கேசை மட்டும் நீ கிளறாமே இருந்திருந்தால், ஆஸ்பத்திரியில் வெச்சு அவளையும் முடிச்சிருப்பேன். சாந்தா ஆஸ்பத்திரியில் செத்தா அந்த விவகாரத்தை நீ பெரிசாக்கிடுவேன்னு எங்கம்மா சொன்னதாலேதான் இத்தனை நாளும் சும்மாயிருந்தேன். இனிமே அப்படி இருக்கப்போறதில்லை. இன்னும் இருபத்திநாலுமணி நேரத்துல அந்த சாந்தா சாகப்போகிறாள். நான் காரை ஏத்திக் கொன்னதைப் பார்த்த ஒரே சாட்சி அவள்தான். அவளையும் தீர்த்துக்கட்டிட்டா, உன்னால என்ன பண்ண முடியும்? பிரவீன் எகத்தாளமாய்க் கேட்டுவிட்டு நாற்காலியில் சாய்ந்துகொள்ள.

ஜவகர் மங்களாதேவியின் பக்கம் திரும்பினான். அம்மா! இந்த தொகுதிக்கு நீங்க முன்னாள் எம்.பி. இந்த நாட்டின் பாராளுமன்றத்துல ஓர் உறுப்பினராக இருந்தவங்க. சட்டத்தையும், நியாயத்தையும் மதிச்சு நடப்பேன்னு பாராளுமன்றத்துல உறுதிமொழி எடுத்தவங்க. உங்க



தொகுதியில எந்த அநியாயம் நடந்தாலும் அதை தட்டிக் கேட்க உரிமை உள்ளவங்க நீங்க. உங்க மகன் காரை ஏத்தி ஒரு பெண்ணின் கணவனை கொன்றிருக்கான். உயிரோடு இருக்கிற அந்தப் பொண்ணையும் கொல்லப்போறதா சொல்றான். இதைக்கேட்டுட்டு நீங்க சும்மா இருக்கலாமா?

மங்களாதேவி ஒரு புன்னகையோடு தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, சேலைத் தலைப்பால் பாலீஷ் செய்துகொண்டே ஜவகரை ஏறிட்டாள்.

ஜவகர்! என்னோட மகன் பிரவீன் பட்ட ஆத்திரத்திலேயும் கோபத்திலேயும் நியாயம் இருக்கு. அந்த சாந்தாவுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். ஆறு மாசத்துக்கு முன்னால் என் பையன் ஆசைப்பட்டானேன்னு சொந்தக்காரர் ஒருத்தரை அனுப்பி சாந்தாவை பெண் கேட்கச் சொன்னேன். சாந்தாவோட அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நான் சம்மந்தி ஆகிறதுல சந்தோசம். ஆனால் அந்த சந்தோசம் சாந்தாவுக்கு இல்லை. என் பையனைக் கட்டிக்க மாட்டேன்னு பட்டவர்த்தனமா சொல்லிவிட்டாள். அப்படி சொல்லிவிட்டு அதோடு நிறுத்தியிருக்கலாம். என்னைப் பற்றியும் என்னோட அரசியல் வாழ்க்கையைப் பற்றியும் ரொம்பவும் தரைக்குறைவா பேசியிருக்கா. இதைப்பற்றி விசாரிக்கப் போன பிரவீனையும் மோசமா பேசி கையில செருப்பை எடுத்து காட்டியிருக்கா, அந்த சாந்தா. ஒரு பெண்ணுக்கு இவ்வளவு திமிர் இருக்கலாமா? அந்தத் திமிரை அடக்கத்தான் அவளுக்கு இந்த தண்டனை.

ஜவகர் குறுக்கிட்டான். ஒரு பெண்ணு தகுந்த காரணம் இல்லாமே ஒருத்தனைக் கல்யாணம் கட்டிக்க மாட்டேன்னு சொல்லமாட்டா? உங்க அவலமான அரசியல் வாழ்க்கையைப் பத்திதான் ஊர் பூராவும் தெரியுமே. நீங்க அப்படி இருந்தால் உங்க பையன் எப்படியிருப்பான்? சாந்தா உங்க பையனை கல்யாணம் கட்டிக்க மாட்டேன்னு சொன்னதுல எந்த தப்பும் இல்லை. கொலை செய்யறதை விளையாட்டா நினைக்கிற உங்க பையனை அவள் கட்டிக்காம இருந்ததே உத்தமம்.

சட்டென்று ஆத்திரமாய் எழுந்தான் பிரவீன். ஜவகரின் தோள்பட்டை மேல் கையை வைத்துத் திருப்பினான். இதோ பார்! எங்கம்மாவை பகைச்சுகிட்டவங்க இந்த இந்தியாவில் யாராய் இருந்தாலும் சரி. அவங்க நிம்மதியா இருக்க முடியாது. உதாரணத்துக்கு உன்னையே எடுத்துக்க... அம்மாவுக்கு விரோதமா செயல்பட்டே என்னாச்சு? பத்திரிகை ஆபீசு நாசமாச்சு,

உன்னோட வருங்கால மனைவியோட அழகான முகம் அலங்கோலமாச்சு. இனிமேலும் நீ எங்க வழியில் குறுக்கிட்டே இதைவிடப் பெரிய பெரிய அதிர்ச்சிகளெல்லாம் உனக்காக கைகட்டிக் காத்திருக்கும். உன் தங்கச்சி சீதாவை எவனுக்குமே கட்டிக் கொடுக்க முடியாதபடி பண்ணிடுவோம்.

டேய்! பிரவீன்! இவங்ககிட்ட இன்னமும் என்னடா பேசிட்டிருக்கே? அவங்களுக்கு நல்ல புத்தி இருந்தா நம்ம வழியிலிருந்து தள்ளி நிக்கட்டும். இன்னமும் படணும்னு இருந்தா வழி மறிக்கட்டும். மங்களாதேவி கண்ணாடியை மாட்டிக்கொண்டாள்.

ஜவகர் எகிறினான். நிச்சயம் வழி மறிக்கத்தான் போகிறோம். எங்க உயிர்களைப் பத்தி நாங்க கவலைப்படலை. உண்மையை ஊருக்கு உணர்த்துகிற வரைக்கும் நாங்க ஓயமாட்டோம். உங்க அதிகார பலத்தைக் காட்டிலும் பண பலத்தைக் காட்டிலும் எங்க பக்கம் இருக்கிற சத்தியத்துக்குத்தான் அரசபலம். அந்த சத்தியம் சீக்கிரமே உங்களை நொறுக்கும்.

பெரிய துர்வாச முனிவர் சாபம் தர்றான். சரிதான் போடா— ஜவகரைப் பிடித்து வெளியே தள்ளினான் பிரவீன்.

ஜவகரும் சீதாவும் ஆஸ்பத்திரியைத் தொட்டபோது வார்டின் வாசலிலேயே இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் கொஞ்சம் தவிப்பாய் காத்திருந்தார். இருவரையும் பார்த்ததும் வேகவேகமாய் வந்தார். கேட்டார்.

என்ன மங்களாதேவியைப் பார்த்தீங்களா?

பார்த்தோம் சார்.

என்ன சொன்னாங்க.

அந்த மாஜி எம்.பி. அம்மாவுக்கும், அவளோட மகனுக்கும் உடம்பு பூராவும் திமிர் சார். மோகன்—சாந்தா மேல் நாங்கத்தான் காரை ஏத்தினோம். உன்னாலே என்ன பண்ண முடியுமோ பண்ணிக்கோன்னு தைரியமா சொல்றாங்க...

அவங்க துணிச்சலுக்குக் காரணமே பணமும் அரசியலும்தான். இந்த நிலைமையில் அவங்களை எதிர்த்து நாம எதுவும் பண்ண முடியாது, ஜவகர். போலீஸ் இலாகாவில் இருக்கிற பெரிய அதிகாரிகள் எல்லோருமே அந்த அம்மாவுக்கு பயப்படறாங்க.

முகம் சிவக்க கோபத்தோடு ஜவகர் ஏதோ சொல்ல



வாயெடுத்தபோது— சாந்தாவின் அம்மாவும் அப்பாவும் பக்கத்து வார்டிலிருந்து வேகவேகமாய் வெளிப்பட்டு நவீன்ராஜை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர்! சாந்தாவோட பெற்றோர் வர்றாங்க. ஏன் இவ்வளவு வேகவேகமா வர்றாங்க?

இருவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போதே சாந்தாவின் அப்பா நெருங்கினார். நவீன்ராஜிடம் சொன்னார் குரலில் ஏராளமான பதற்றம்.

சார்! சாந்தாவுக்கு ஞாபகம் திரும்பிடுச்சு. தெளிவாப் பேசறா. இந்நேரம் நர்ஸோ டாக்டரோ அவ பக்கத்துல இருந்திருந்தா உடனடியா ஊசியைப் போட்டு கோமா ஸ்டேஜுக்கு கொண்டு போயிருப்பாங்க. நல்ல வேளையா சாந்தாவுக்கு ஞாபகம் வர்றப்போ ரெண்டு பேரும் இல்லை. எங்க பொண்ணு சுயநினைவோடு இருக்கும்போதே வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக ஆசைப்படறோம் சார். உங்களாலே உதவ முடியுமா?

என்னால உதவ முடியும். ஆனால், நான் சொல்ற மாதிரி நீங்க கேக்கணும். இதற்கு நீங்க ஒத்துக்கிட்டா உங்க பெண்ணை வீட்டுக்கு கூட்டிட்டு போயிடலாம்.

நான் என்ன செய்யணும் இன்ஸ்பெக்டர்?

ஆஸ்பத்திரி தலைமை டாக்டர் மேலே ஒரு புகார் எழுதித் தரணும்?

புகாரா?

எஸ். எம்பொண்ணு சாந்தாவுக்கு சுயநினைவு திரும்பும்போதெல்லாம் தலைமை டாக்டர் அவளுக்கு ஊசி போட்டு கோமா ஸ்டேஜுக்கு கொண்டு போகிறார். இதற்குப் பின்னணியில் ஓர் அரசியல் சக்தி இயங்குது என்று நான் சந்தேகப்படுவதால், என் பெண்ணை வேறு அரசாங்க மருத்துவமனைக்கு மாற்ற வேண்டும் என்று விரும்புகிறேன். இது மாதிரி ஒரு புகார் எழுதி என்கிட்டே கொடுங்க. அந்த புகாரை காரணமா வெச்சு சாந்தாவை வெளியே கொண்டு வந்துவிடலாம்.

சாந்தாவின் அப்பா வியர்த்தார் திணறினார்.

புகாரா?

ஜவகர் குறுக்கிட்டான். இப்படி நீங்க பயப்பட்டு பயப்பட்டுக்கிட்டு இருக்காம துணிச்சலா புகார் கொடுங்க சார். அப்பத்தான் சாந்தாவை வெளியே கொண்டு வரமுடியும். சாந்தா இங்கேயே இருந்தால், ஊசிபோட்டு

கொஞ்சம் கொஞ்சமா சொன்னுடுவாங்க.

புகார் தாரேன் சார். சாந்தாவின் அப்பா தலையாட்டினார்.

வாங்க! வார்டுக்குப் போய் சாந்தாவைப் பார்க்கலாம். சாந்தா தெளிவா பேசினா வாக்குமூலம் வாங்கிடலாம்— சொல்லிக்கொண்டே நவீன்ராஜ் நடக்க, எல்லோரும் பின் தொடர்ந்தார்கள்.

தலைமை டாக்டர் ராவின் அறைக்குள் பதற்றமாய் அவசரமாய் தவிப்பாய் உள்ளே நுழைந்தாள் அந்த நர்ஸ். லாபியில் எக்ஸ்ரேக்களை போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் ராவ் நிமிர்ந்தார். கண்ணாடியைக் கழற்றிக் கொண்டே கேட்டார்.

என்ன?

டாக்டர்! அந்த சாந்தாவுக்கு ஞாபகம் திரும்பிடுச்சு.

ஞாபகம் திரும்பினா என்ன? வழக்கமா போட வேண்டிய ஊசியைப் போட்டு அவளை கோமா ஸ்டேஜுக்கு கொண்டு போயிட வேண்டியதுதானே?

ஊசி போட முடியலை டாக்டர்.

டாக்டர் நெற்றியைச் சுருக்கினார்.

போட முடியலையா— ஏன்?

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் சாந்தாகிட்டே வாக்குமூலம் வாங்கிட்டிருக்கார். பக்கத்துல அந்த ஜவகர். அவரோட தங்கை கீதா, சாந்தாவோட பெற்றோர் எல்லோரும் நின்னுட்டிருக்காங்க.

வாட் நான்சென்ஸ்....! எதுக்காக அவங்களையெல்லாம் உள்ளே விட்டே?

சாந்தாவுக்கு நினைவு திரும்பினபோது நான் வார்டுல இல்ல சார். குளுகோஸ் பாட்டிலுக்காக ஜி வார்டுக்கு போயிருந்தேன். குளுகோஸ் பாட்டிலோடு வந்து பார்க்கும்போது இன்ஸ்பெக்டர் வாக்குமூலம் வாங்கிட்டிருந்தார்.

டாக்டர் ராவ் நாற்காலியைத் தள்ளிக்கொண்டு கோபமாய் எழுந்தார். வா— என்கூட உறுமிவிட்டு நடந்தார். நர்ஸ் பின் தொடர்ந்தாள்.

ஆத்திரமான இரண்டு நிமிட நடை

சாந்தாவின் அறைக்குள் ஒரு சின்ன புயல் மாதிரி நுழைந்தார். சாந்தா எழுந்து உட்கார்ந்து தெளிவாய்ப் பேசிக்கொண்டிருக்க— நவீன்ராஜும் ஜவகரும் குறுக்கிட்டு



குறுக்கிட்டு கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அறைக்குள் ஓர் அசாதாரண பரபரப்பு.

டாக்டர் ராவ் உள்ளே நுழைந்ததும் — இருவரும் திரும்பினார்கள். நவீன்ராஜ் புன்னகைத்தார். வாங்க டாக்டர்.. நானே உங்களை வந்து பார்க்கணும்னு நினைச்சேன்—

நோயாளிகிட்டே என்ன பேசிட்டிருக்கீங்க?

சின்னதா ஒரு வாக்கு மூலம் வாங்கிட்டிருக்கேன்.

யார்கிட்டே அனுமதி வாங்கினீங்க?

புதுசா அனுமதி யார்கிட்டே வாங்கணும் டாக்டர்?

இந்த கவிதாநகர் விபத்து கேசை ஆரம்பத்திலிருந்து நான் விசாரிச்சிட்டிருக்கேன். நான் இன்னிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்த நேரம் சாந்தாவுக்கு நினைவு திரும்பியிருந்தது. அதுவுமில்லாமே சாந்தாவோட பெற்றோர் உங்கமேல ஒரு புகாரும் கொடுத்திருக்காங்க.

டாக்டர் ராவ் திடுக்கிட்டார்.

புகாரா?

ஆமாம். சாந்தாவுக்கு நினைவு திரும்புகிற ஒவ்வொரு சமயமும் நீங்க அவளுக்கு ஏதோ ஓர் ஊசியைப்போட்டு கோமா ஸ்டேஜுக்கு உட்படுத்துவதாகவும், சாந்தாவை வேற ஒரு அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றும்படி கோரியும் புகார் கொடுத்திருக்காங்க. சோ... அதை விசாரிக்கவும் நான் கடமைப்பட்டிருக்கேன்.

மிஸ்டர் இன்ஸ்பெக்டர் டாக்டர் ராவ் பக்கத்தில் வந்தார்.

எஸ்...

நான் உங்ககூட கொஞ்சம் தனியா பேசணும்.

பேசலாமே!

ப்ளீஸ் வாங்க வெளியே டாக்டர் ராவ் நவீன்ராஜை கூட்டிக்கொண்டு வெளியே வந்தார். மெல்லிய குரலில் கிசுகிசுத்தார்.

என்ன இன்ஸ்பெக்டர்— இது மிஸஸ் மங்களாதேவி சம்பந்தபட்ட கேஸ் என்கிறதை. மறந்துட்டீங்களா?

மறக்கலை, ஞாபகமிருக்கு டாக்டர்.

பிறகு இவங்களுக்கு ஆதரவா நடந்துக்கறீங்களே?

நவீன்ராஜ் புன்னகைத்தார்.

டாக்டர்! கடந்த ரெண்டு நாளா நான் நியாயத்தின் பக்கம் நின்னுட்டிருக்கேன். மாஜி எம்.பி. மங்களாதேவிக்கு தலை வணங்கறதை விட்டுட்டு நீதிக்கு தலை வணங்க ஆரம்பிச்சிருக்கேன். அதனோட ஆரம்பம்தான் இது. சாந்தாகிட்டே வாக்குமூலம் வாங்கிட்டேன். சாந்தாவோட அப்பாவும் அம்மாவும் உங்கமேலே கொடுத்திருக்கிற புகாரை வெச்சுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்போறேன்.

டாக்டர் ராவ் முகம் சிவந்தார்.

இன்ஸ்பெக்டர், அந்த அம்மாவோட பலம் தெரியாம மோதறீங்க! விளைவுகள் மோசமா இருக்கும்!

நவீன்ராஜ் சிரித்தார்.

என்ன சிரிக்கிறீங்க?

விளைவுகள் மோசமாய் இருக்கப் போறது எனக்கில்லை டாக்டர்— மங்களாதேவிக்கும் அவரோட மகனுக்கும்தான்.

## 25

டாக்டர் ராவ் திடுக்கிட்டுப் போய், இன்ஸ்பெக்டர் நவீன்ராஜைப் பார்த்தார். இன்ஸ்பெக்டர்! இத்தனை நாளும் நீங்க எனக்கு அனுசரணையா இருந்தீங்க. இன்னிக்கு உங்ககிட்டே தென்படுகிற மாற்றத்தை என்னால ஜீரணிக்க முடியலை.

அவருக்குப் பின்பக்கமிருந்து ஜவகரின் குரல் கேட்டது. ஜீரணிக்க முடியலைன்னா ஒரு சோடா சாப்பிடுங்க டாக்டர் சார், சகலமும் ஜீரணமாயிடும்.

எரிச்சலோடும் — கோபத்தோடும் டாக்டர் ராவ் திரும்பினார். விஷயம் தெரியாமே நீங்க எல்லாருமே நிம்மதியா இருக்க முடியாது.

இதுநாள் வரைக்கும் அந்தம்மா ஜெயிச்சிருக்கலாம். இனிமே ஜெயிக்கப் போறது நாங்கதான். சாந்தா வாக்குமூலம் கொடுத்திருக்கா. இந்த வாக்கு மூலத்தை வெச்சே அந்த மங்களாதேவியையும் அவளோட மகனையும் கோர்ட்டுக்கு கொண்டு வரப்போறோம்.

டாக்டர் ராவ் கண்கள் சிவக்க ஜவகரை முறைத்துப் பார்த்துவிட்டு திரும்பி வேகவேமாய்த் தன் அறையை நோக்கிப் போனார். அறைக்குள் நுழைந்ததும் டெலிபோனை நெருங்கி ரிசீவரை எடுத்தார். டயலில் எண்களை சுழற்றிவிட்டு — சில விநாடிகள் காத்திருந்து



மறுமுனையில் அலோ குரல் கேட்டதும்—

ஓட்டல் சிட்டி டவர்? என்றார்.

எஸ்...

மிஸஸ் மங்களாதேவிகூட பேசணும்.

நீங்க யார் பேசறது?

டாக்டர் ராவ்.

கொஞ்சம் பொறுங்க பிளீஸ்.

டாக்டர் ராவ் பெருமூச்சுகளை விட்டுக்கொண்டு வியர்வையோடு காத்திருந்தார். ஒரு நிமிடம் முழுசாய்க் காணாமல் போன பிறகு — மங்களாதேவியின் குரல் டெலிபோனில் வழிந்தது.

அலோ டாக்டர்...

ராவ் குரலைத் தாழ்த்தினார் — மேடம் ஒரு முக்கியமான விஷயம்?

என்ன?

அந்த சாந்தாவுக்கு ஞாபகம் திரும்பியிருக்கு. இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் அவள்கிட்டே கவிதா நகர் விபத்தைப் பத்தி வாக்குமூலம் வாங்கியிருக்கார்.

நவீன்ராஜ், வாக்குமூலம் வாங்கறாரா? — மறுமுனையில் குரல் அதிர்ந்தது.

ஆமா மேடம்... அந்த வாக்குமூலத்தை வெச்சே உங்களை கோர்ட்டுக்கு இழுக்கப் போறதா அந்த ஜவகர் சொன்னான். இங்கே நிலைமை ரொம்பவும் மோசமா இருக்கு.

இன்னும் அவங்க ஆஸ்பத்திரியில் இருக்காங்களா?

ஆமா மேடம்...

நானும் என்னோட மகனும் இன்னும் கொஞ்ச நேரத்துல அங்கே இருப்போம்.

நீங்க இங்கே வரணுமா மேடம்?

கண்டிப்பா! இன்ஸ்பெக்டரை சமாளிக்கணும்னா நான் நேரில் வந்துதான் ஆகணும்.

அடுத்த பத்தாவது நிமிடம்—

மங்களாதேவியின் கார் ஆஸ்பத்திரி காம்பவுண்டு கேட்டுக்குள் நுழைந்து சக்கென்று பிரேக்கிட்டு நிற்க— பின்சீட்டில் உட்கார்ந்திருந்த மங்களாதேவி, டிரைவிங் சீட்டில் இருந்த பிரவீனிடம் சொன்னாள்!

பிரவீன்! இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ்

வாக்குமூலத்தோட இந்த ஆஸ்பத்திரியை விட்டு தாண்டக் கூடாது. தாண்டினா நாம ஆபத்துல மாட்டிக்குவோம்.

நான் பார்த்துக்கிறேன்மா.

உன்னோட முரட்டுத்தனத்தைக் காட்ட வேண்டியது கடைசி பட்சம்தான் இருக்கணும்.

ம்..ம்..

அவர்கள் காரைவிட்டு கீழே இறங்க டாக்டர் ராவ் எதிர்ப்பட்டார், முன் மண்டையில் அரும்பியிருந்த வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றிக்கொண்டே உலர்ந்து போன உதடுகளோடு வரவேற்றார்.

வாங்க மேடம்.

அவங்க எங்கே இருக்காங்க?

சாந்தாவோட அறையில்தான்.

வாக்குமூலம் வாங்கிட்டாங்களா?

வாங்கிட்டிருக்காங்க..

பிளடி பாஸ்டர்ட்ஸ்! — பிரவீன் கோபமாய்க் கர்ஜித்துக்கொண்டே முன்னால் நடந்தான். உடம்பின் ஒவ்வொரு அங்குலத்திலும் ஆத்திரம் தத்தளித்தது. மங்களாதேவியும் டாக்டர்ராவும் அவனைப் பின் தொடர்ந்து அதே வேகத்தோடு போனார்கள். வார்டுகளைக் கடந்து சாந்தாவின் அறைக்குள் நுழைந்தார்கள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த சாந்தாவிடம் — வாக்குமூலத்தை வாங்கி முடித்திருந்த இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் அதை எல்லோருக்கும் ஒருமுறை படித்துக்காட்டிக் கொண்டிருந்தார். அவர்களை முதல் ஆளாய்ப் பார்த்த ஜவகர் கத்தினான்.

இன்ஸ்பெக்டர்.. அவங்க வர்றாங்க... நவீன்ராஜ் திரும்பிப் பார்ப்பதற்குள்—

உள்ளே நுழைந்திருந்த பிரவீன் அறைக்கதவை சாத்தித் தாழிட்டான். மங்களாதேவியும் டாக்டரும் நவீன்ராஜை நெருங்கினார்கள். பிரவீன் கதவுக்குச் சாய்ந்துகொண்டே கேட்டான்.

என்ன இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு கடமை உணர்வு அதிகமாயிடுச்சுன்னு கேள்விப்பட்டோம். உண்மையா?

நவீன்ராஜ் சிரித்தார்! உண்மைதான். காக்கி யூனிபார்ம் போட்டிருக்கேனே?

ஓகே. இத்தனை நாளும் அந்தக் கடமை உணர்வை எங்கே போய் விட்டிருந்தீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?



அந்த எங்கேயும் மேயவிடலை. உங்க அம்மாகிட்டதான் அடகு வைச்சிருந்தேன். இரண்டு நாளைக்கு முன்னாடிதான் மீட்டுக்கிட்டேன்.

மங்களாதேவி குறுக்கிட்டாள்.

இன்ஸ்பெக்டர்! நீங்க திடீர்னு கட்சி மாறினதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. சாந்தாகிட்டே எதுக்காக வாக்குமூலம் வாங்கினீங்க?

நவீன்ராஜ் புன்னகைத்தார்.

சாந்தா கவிதா நகர் விபத்துல காயமடைஞ்சு பல நாள் கோமா ஸ்டேஜ்ல இருந்து இன்னிக்குத்தான் பழைய நிலைக்கு வந்திருக்காங்க. விபத்துக்குள்ளான ஒரு நோயாளிகிட்டே போலீஸ் வாக்குமூலம் வாங்காமே தாம்பூலமா மாத்திக்குவாங்க.

பிரவீன், டாக்டர் ராவைத் தவிர எல்லோரும் சிரிக்க, மங்களாதேவி உறுமினாள். இன்ஸ்பெக்டர்! நான் யார்ன்னு உங்களுக்குப் புரியும். என்னுடைய அரசியல் பலம் இந்த தமிழ்நாட்டில் யாருக்கும் இருக்காது. உட்கார்ந்த இடத்திலேயே ஒரு டெலிபோனை மாத்திரம் வைச்சுக்கிட்டு என்னால எதையும் சாதிக்க முடியும்.

ஜவகர் குறுக்கிட்டான். தெரியுமே! நீங்க சாதிச்சது ஒண்ணா இரண்டா? சாந்தா உங்க தறுதலை மகனை கட்டிக்க மாட்டேன்னு சொன்ன காரணத்துக்காக — அந்த இளம் தம்பதிகள் மேல் காரை ஏத்தி, அவளோட தாலியைப் பறிச்சது சாதாரண காரியமா என்ன? உண்மையை ஊருக்கு எடுத்துச் சொல்ல முயற்சித்த என்னோட பத்திரிகை ஆபீசை தரை மட்டமாக்கியது எவ்வளவு பெரிய வீரச் செயல்? ஓர் அப்பாவிப் பெண்ணோட முகத்தை அமிலம் வீசி கோரப்படுத்திய சாதனை ஒண்ணுக்காகவே உங்களுக்கு இந்த வருடம் பத்மவிபூஷண் பட்டம் தரலாம். பிரதமருக்கு நான் வேணும்மன்னா தந்தி கொடுக்கட்டுமா?

இந்த வெட்டிப் பேச்சையெல்லாம் கேட்டுட்டிருக்க நாங்க வரலை. இன்ஸ்பெக்டர்...! சாந்தாகிட்டயிருந்து வாங்கின வாக்குமூலத்தை என்கிட்டே கொடுங்க..

சாரி மேடம்...! இந்த வாக்குமூலத்தைக் கொடுக்க வேண்டிய இடம் கோர்ட்டு. கோர்ட்டிலிருந்து இந்த வாக்குமூலத்தோட ஒரு நகலை உங்களுக்கு அனுப்பிச்சு வைப்பாங்க. அப்ப வாங்கிக்கங்க..

இன்ஸ்பெக்டர் — கதவுக்குச் சாய்ந்து நின்றிருந்த பிரவீன் குரல் கொடுத்தான். சாந்தாகிட்டேயிருந்து வாங்கின வாக்குமூலத்தை 'அம்மா கையில கொடுங்க. இல்லேன்னா நீங்களே மரண வாக்குமூலம் கொடுக்கவேண்டிய கட்டாயம் வந்துடும்.

என்னடா மிரட்டறியா?

மிரட்டலை இன்ஸ்பெக்டர்... இது உண்மை — சொல்லிக் கொண்டே பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை விட்டான் — கையை எடுக்கும்போது.

வலது கையில் விரல்களில் அந்த ரிவால்வர் உட்கார்ந்திருந்தது பிரவீன் கோணலாய்ப் புன்னகைத்தான். நான் நினைச்சா உங்களை எல்லாம் இந்த விநாடியே சுட்டுத் தள்ள முடியும். அப்படி அப்படி சுட்டுத் தள்ளிட்டு அம்மாவோட அரசியல் பலத்தை வெச்சு, என்னால் தப்பிக்கவும் முடியும். வீணா இங்கே ஒரு இரத்தக் களரியை உண்டாக்க வேண்டாம்னு நான் நினைக்கிறேன். அந்த வாக்குமூலத்தை தர்றீங்களா? இல்லே ஒரு இரத்தக் களரியை உண்டாக்கட்டுமா?

அறையில் அமைதி. தலைக்குமேல் பேன் மட்டும் வேகமாய் சுழன்று கொண்டிருக்க, எல்லோரும் அப்படியே அசைவற்று நின்றிருந்தார்கள். கட்டிலின் நடுவே சாந்தா கட்டிலுக்கு இடது பக்கம் சுவரோரமாய் சாந்தாவின் அம்மாவும், அப்பாவும், வலப்பக்கம் ஜவகர், கீதா. கட்டிலின் தலைமாட்டில் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ்.

பிரவீன் உறுமினான்.

இன்ஸ்பெக்டர்! உங்களுக்கு சரியா ஒரு நிமிடம் தர்றேன். அதுக்குள்ளே சாந்தாவோட வாக்குமூலத்தை அம்மாகிட்டே தரணும். தரலைன்னா இந்த சைலன்சர் பொருத்தப்பட்ட ரிவால்வரிலிருந்து புறப்படுகிற முதல் தோட்டா சாந்தாவோட அப்பா நெஞ்சில பாயும். ரெண்டாவது தோட்டா ஜவகருக்கு, மூணாவது...

நவீன்ராஜ் கையமர்த்தினார்.

நீ யாரையும் சுடவேண்டாம். உங்கம்மாகிட்டே இப்பவே இந்த வாக்குமூலத்தைக் கொடுத்துடறேன், போதுமா?

முதல்ல கொடு...

சார்! பதற்றமாய் குறுக்கிட்ட ஜவகரைப் பார்வையால் அமைதிப்படுத்திய நவீன்ராஜ், மெல்ல நடந்துபோய்



மங்களாதேவியின் கையில் அந்த வாக்குமூலத்தைக் கொடுக்க, அவள் அதை வாங்கிப் பிரவீனிடம் நீட்டினாள்.

பிரவீன்! முதல்ல இதை லைட்டர்ல குளிப்பாட்டு.

அந்த வைபவத்தை நம்ம அறைக்குப் போய் வெச்சுக்கலாம்மா... அதுக்கு முன்னாடி நாம இங்கே பண்ண வேண்டிய இன்னொரு காரியமும் இருக்கு.

என்ன காரியம்?

டாக்டர் பண்ண வேண்டிய காரியம். சொன்னவன் டாக்டரிடம் திரும்பினான். டாக்டர்! சாந்தாவை கோமாவுக்குக் கொண்டு போகிற ஊசியை உடனடியா அவளுக்குப் போடுங்க.

ஹா...

கத்திக் கொண்டே கட்டிலில் இருந்து கீழே இறங்கினாள் சாந்தா. பிரவீன் ரிவால்வரை அசைத்தான். அசையாமல் அப்படியே உட்காரணும்! நீ உயிரோடு இருக்கப் போய்தான் இத்தனை பிரச்சனைகள். உனக்கு ஒரு முடிவு கட்டினாத்தான் எங்களுக்கு நிம்மதி. டாக்டர்! நீங்க ஊசியைப் போடுங்க. சாந்தாவுக்கு ஊசி போடும்போது யார் தடுக்க முயற்சி பண்ணினாலும் சரி, என் கையில் இருக்கிற ரிவால்வர் அவங்களைப் பார்த்து சீறாது. பக்கத்துல நின்னுட்டிருக்கிற மத்தவங்களை பார்த்துதான் சீறும். பிரவீனின் எச்சரிக்கையில்—

எல்லாரும் அசைவற்று நின்றிருக்க, டாக்டர் மட்டும் ஊசி மருந்தை ஏற்றிக் கொண்டு — சாந்தாவை நெருங்கினார்.

அடுத்த விநாடி — ஜவகருக்கு பக்கத்தில் நின்றிருந்த கீதா — விருட் என்று பின்னுக்கு நகர்ந்து சுவரோரமாய்ப் பக்கத்து மேசை மேல் இருந்த குளுகோஸ் பாட்டிலை சட்டென்று எடுத்து கண்ணிமைக்கிற நேரத்தில் பிரவீனை நோக்கி வீசினாள். அது விசுவாசமாய்ப் பாய்ந்து பிரவீனின் மணிக்கட்டைச் சிதறடித்தது.

ரிவால்வர் எகிறிக் காற்றில் — நீந்த — சாந்தா பாய்ந்து தாங்கிக் கொண்டாள். கத்தினாள். இன்ஸ்பெக்டர்! யாரும் என் பக்கத்துல வராதீங்க! நான் இப்போ செய்யப்போகிற காரியத்துக்கு குறுக்கே நிக்காதீங்க.

ஜவகர் முன்னால் வந்தான்.

சாந்தா! அந்த ரிவால்வரை என்கிட்டே கொடு—

மாட்டேன்! உங்களாலே அந்த மங்களாதேவியையும்

அவளோட மனசையும் ஒன்னுமே செய்ய முடியாது. இந்த மாஜி எம்பியை எந்தக் காரணம் காட்டியும் கைது பண்ண முடியாது. ஏன்னா சட்டம் இவங்க வீட்டு நாய்க்குட்டி மாதிரி. இவங்க சொடுக்குப் போட்டா குரைக்கும், உட்காரச் சொன்ன உட்காரும். இவங்களை உங்களாலே கோர்ட்டுக்கு கொண்டுட்டுப் போக முடியாது.

மங்களாதேவியும், பிரவீனும் அதிர்ச்சியடித்துப்போய் நிற்க சாந்தா தலைமுடி அவிழ்ந்து காளி கோலமாய் கையில் ரிவால்வரோடு ஆவேசமாய்ப் பேசினாள்.

இன்னிக்கு இந்த நிமிடம்... இதுதான் கோர்ட்டு. நான்தான் நீதிபதி. நான்தான் வக்கீல். நான்தான் சாட்சி. எல்லாமே நானாயிருந்து இவங்களைத் தண்டிக்கப் போகிறேன். என்னோட வாழ்க்கையை நாசமாக்கினவங்களை நானே தண்டிக்கிறதுலதான் ஒரு திரில் இருக்கு ஒரு சுகம் இருக்கும். அந்த திரில்லை சுகத்தை இப்போ அனுபவிக்கப் போறேன். சொல்லிக் கொண்டே பிரவீனின் மார்பை நோக்கி ரிக்கரை சுண்டினாள்.

சைலன்சர் ஸ்ஸ்ஸ் என்று அடக்கமாய்ச் சிறி தோட்டாவை அனுப்ப பிரவீன் மார்பின் மையத்தில் சட்டென்று இரத்தம் காட்டி ஸ்தம்பித்து முன்பக்கமாய் மடங்கினான்! கதவோரமாய் சுருண்டான்.

நவீன்ராஜ் பாய்ந்தார்.

சாந்தா! வேண்டாம் சுடாதே

சாந்தா விலகி நின்று — மங்களாதேவியைக் குறி பார்த்தாள். மங்களாதேவி கட்டிலுக்குக் கீழே ஒளிவதற்குள் ரிவால்வர் அவசரப் பட்டுவிட—

நெற்றிப் பொட்டில் தோட்டாவை வாங்கிக் கொண்டு சத்தமில்லாமல் மடங்கினாள் மாஜி எம்.பி. கண்கள் நிலைத்துப் போக மெல்லத் துடித்தாள்.

சாந்தா ரிவால்வரை நவீன்ராஜிடம் கொடுத்தாள். இன்ஸ்பெக்டர் என்னோட பார்வையில் இந்த ரெண்டும் நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகள். உங்க பார்வையில் உணர்ச்சி வேகத்தில் செய்யப்பட்ட கொலைகள். நீங்க என்னை கைது பண்ணலாம்.

உதட்டில் உறைந்த புன்னகையோடும் — நீர் நிரம்பிய கண்களோடும் தன் மெலிந்த கைகளை நவீன்ராஜை நோக்கி நீட்டினாள் சாந்தா.

ஆறு மாதம் கழித்து —



கையில் ஒரு டையோடு போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான் ஜவகர். அவனைத் தொடர்ந்து வைடவி, நீதா உள்ளே வந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ் வரவேற்றார். புன்னகைத்தார்.

பத்திரிகை குடும்பமே வருக!

டையில் கையை நுழைத்த ஜவகர், அழைப்பிதழ் ஒன்றை எடுத்து நீட்டினான். - நஷ்ட ஈடா கிடைச்ச இன்ஷூரன்ஸ் பணத்துல, பீட்டர் ரோட்டில் புதுசா பத்திரிகை ஆபிசைத் தொடங்கியிருக்கேன் சார். அடுத்த வாரம் திறப்பு விழா. கட்டடத்தைத் திறந்து வைக்கப் போகிறவர் வேறு யாருமில்லை. நீங்கதான்.

நானா? நவீன்ராஜ் ஆச்சரியப்பட்டார்

நீங்களேதான்! நீங்க மட்டும் எங்க பக்கம் இல்லாமே இருந்திருந்தா, கவிதா நகர் கேஸ் ஒரு முடிவுக்கு வந்திருக்காது சார்...

நீங்க பட்ட கஷ்டங்களை விடவா நான் பட்டுட்டேன்

சாந்தாவோட கேஸ் தீர்ப்பு என்ன ஆகும்?

சாந்தாவுக்கு ரெண்டு வருடத்தில் இருந்து ஐந்து வருடம் வரைக்கும் தண்டனை கிடைக்கலாம். அப்பீலில் போனால்... தண்டனை குறையலாம். சாந்தா தனக்குக் கிடைக்கப் போகிற தண்டனையைப் பத்தி கவலையே படலை. தன் கணவனோட சாவுக்குக் காரணமானவங்களை தீர்த்துக் கட்டினதுல அவளுக்கு கல்யாண விருந்து சாப்பிட்ட மாதிரி திருப்தி.

நீதா குறுக்கிட்டாள். கல்யாண விருந்துன்னு சொன்னதும் ஞாபகம் வருது சார். அண்ணனுக்கும் வைடவிக்கும் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி மருதமலையில் கல்யாணம்.

அப்படியா..?

சந்தோசமாய் வைடவியை நிமிர்ந்து பார்த்தார் இன்ஸ்பெக்டர் நவீன்ராஜ். அமிலம்பட்ட இடம் வைடவியின் முகத்தை பாதித்திருந்தாலும் வைடவி சிந்திய நாணப் புன்னகையில் அவளுடைய அழகு பன்மடங்காய்ப் பிரகாசித்ததைப்போல தோன்றியது நவீன்ராஜுக்கு.

வாழ்த்துக்கள் என்றார்.

—முற்றும்—